
# திருக்கோயில்


"என்கடன் பணி செய்து கிடப்பதே"



ஆடவல்லான், தஞ்சைப் பெரிய கோயில்

மாலை 9] பிலவங்க-சித்திரை-மே, 1967 [மணி 8

சென்னை அரசாங்க அறநிலையப்



சென்னைத் திருமயிலை ஸ்ரீ கபாலீச்சுரர் கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் நிகழ்ந்த 'இந்துமதப் பரப்புநர் விளக்குநர் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் விழா'விற் கலந்து கொள்ளத் தமிழக அரசின் அறநிலைய அமைச்சர் திருமிகு. இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்கள் வருகை தருதல். (31—3—67) நமது அறநிலைய ஆணையர், சென்னைத் துணை ஆணையர், தலைமை நிலையத் துணை ஆணையர் ஆகியோர், திருமிகு. அமைச்சர் அவர்களை வரவேற்றல்.

## பொருளடக்கம்


1. கோயில்களே சிறந்த சமுதாய நல நிலையங்கள்
2. சேக்கிழார் செய்யுள் இன்பம்
3. செந்திற் கந்தன் திருவருள்
4. சங்கற்ப நிராகரணம்
5. விடை தெரியுமா
6. விடை விளக்கம்
7. நித்தமும் நிறைவும்
8. ஞானசித்தர்களும் சித்தமருந்தும்
9. தில்லையில் திருஞான சம்பந்தர்
10. மறையின் இலக்கணம்
11. ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை
12. தமிழ் நூல்களில் சிற்பக்கலை
13. ஒரு பொருட் கிளவி


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34'' என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங் களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித் துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 9] பிலவங்க-சித்திரை-மே, 1967 [மணி 8


## கோயில்களே சிறந்த சமுதாய நல நிலையங்கள்

**முன்னுரை :**

தமிழ் நாடு கோயில்கள் நிறைந்தது. தமிழ் நாட்டிற் போல, இவ்வளவு மிகுதியாக வானளாவி ஓங்கி யுயர்ந்த மாபெரும் கோயில்களை, நாம் வேறு எங்கணும் காண்டல் இயலாது. நம் அருமைத் தமிழ் நாட்டில்தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் திருவவதாரம் செய்து, கால் தரை தோய நடந்து சென்று, எத்துணையோ பலப்பல தலங்களைத் தரிசித்து மகிழ்ந்து, திருமுறைகளையும் திவ்வியப் பிரபந்தங்களையும் அருளிச் செய்தனர். அதன் பயனாக எழில் மிகுந்த எண்ணற்ற பெருங் கோயில்கள் பற்பல அமைந்து, நம் தமிழ்நாடு மிகவும் புகழ் பெற்றுத் திகழ்கின்றது.

கோயில்கள் நமது பழம் பெரும் நாகரிகத்தையும், பண்பாட்டுநலங்களையும் விளக்கிக் கொண்டு நிற்கும் அடையாளங்கள் ஆகும். ஏனைய பிற நாடுகளில் எல்லாம் ஏதோ ஒருசில நூற்றாண்டுகளுக்கேமுற்பட்ட கட்டிடங்களும் பொருள்களும் கூட, மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்தன போல, மிகப் பெரிதும் போற்றப் படுகின்றன. இதனைஉளங் கொண்டால், ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டு, இன்றளவும் தமது சிறப்பும் பெருமையும் சிறிதும் குன்றாமல் நின்று நிலவி ஓங்கி வளர்ந்து வரும், நம் தமிழ் நாட்டுக் கோயில்களின் அருமை பெருமைகளை, யாவரும் இனிதுணரப் பெறுவர்.

**அயலவர் ஆர்வம் :**

நமது தமிழ் நாட்டுக் கோயில்கள் பழமையும் பெருமையும் வாய்ந்து பற்பல சிறப்புக்களுடன் விளங்கி, அயல் நாட்டு அறிஞர் பெருமக்களின் உள்ளங்களையும் கவர்ந்து, பெரிதும் வியப்புறச் செய்து வருகின்றன. காஞ்சிபுரம் திருவேகம்ப நாதர் கோயில் மதிலைக் கட்டி முடிக்கக் காரணமாக இருந்த 'ஆட்சன்' (Hodgson), மதுராந்தகம் கோயில் திருப்பணியை நடத்திய 'லியோனார்ட் பிளேஸ்' (Leonard Place), பவானி சங்கமேசுவரர் கோயிலில் வேத நாயகி அம்பாளுக்குத் தந்தத்தாற் செய்த பள்ளியறை ஊஞ்சலை நன்கொடையாக வழங்கி மகிழ்ந்த 'வில்லியம் கேரோ' (William Garrow), மதுரை மீனாட்சி அம்மைக்குத் தங்கத்தாற் செய்த அங்க வடிகளை அன்பளிப்பாகத் தந்த 'ரூஸ்பீட்டர்' (Rous Peter) முதலிய மேலை நாட்டுப் பெருமக்கள்,

நம் நாட்டுக் கோயில்களின்பாற் கொண்டிருந்த அன்பும் ஆர்வமும் ஈடுபாடும் அளப்பரியனவாகும்.

கோயில்கள் மக்கட் சமுதாயத்தின் இம்மை மறுமை நல்வாழ்வுக்குப் பெரிதும் இன்றியமையாத சிறந்த சாதனங்களாக விளங்கி வருகின்றன. சமுதாய நல்வாழ்வுக்கு மிகவும் துணைபுரியும் சாதனமாகக் கோயில்கள் விளங்கி வருதற் பொருட்டே, பல்லவ மன்னர்கள், சோழப் பேரரசர்கள், பாண்டிய வேந்தர்கள், விஜய நகர அரசர்கள், நாயக்க மன்னர்கள் ஆகியபலரும் கோயில்களின் வளர்ச்சிக்கும் அமைப்பிற்கும் அளப்பருந் தொண்டுகள் ஆற்றிப் போந்தனர். சுருக்கமாகக் கூற வேண்டுமாயின், சமுதாய நன்மை குறித்துப் பல துறைகளிலும் கோயில்கள் தொன்று தொட்டே பெரிதும் தொண்டாற்றி வந்துள்ளன எனத் துணிந்து சொல்லலாம்.

**சிற்பம், ஓவியம் :**

கோயில்கள் நம் நாட்டு நாகரிகச் சின்னங்களாகவும், கலைவளர்ச்சி நிலையங்களாகவும் விளங்கி வருகின்றன. ஓவியம், சிற்பம், காவியம், இசை, நடனம், நாடகம் முதலிய பல்வேறு கலைகளும் கோயில்களில் இடம் பெற்று, அவைகளால் போற்றி ஆதரிக்கப் பெற்று வளர்ந்து வந்துள்ளன. மாமண்டூர்க் குகைக் கோயில் வெளி மண்டபத் தூண்களிலும், மாமல்லபுரம் ஆதிவராக மண்டபத்தின் விதானத்திலும், தஞ்சைப் பெரிய கோயிலின் கருவறை வெளிச் சுற்றுப்புறச் சுவர்களிலும், நார்த்தாமலை விஜயாலய சோழீச்சுரம் கோயிலிலும், சித்தன்ன வாசல் முதலிய இடங்களிலும் காணப்படும் பழமை மிக்க சிறந்த அழகிய ஓவியங்கள் கண்டு களிக்கத் தக்கவை. திருப்பரங்குன்றம் கோயில் சுவர்களில் சூரியன், சந்திரன், மன்மதன் இரதி, அகலிகை வரலாறு முதலிய அழகோவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன என்னும் செய்தியைப் பரிபாடல் கூறுகிறது. மாமல்லபுரத்துச் சிற்பங்களும், தஞ்சை இராஜராஜேச்சுரம், கங்கை கொண்ட சோழேச்சுரம், திரிபுவனம் கம்பஹரேசுரம், தாராசுரம், இராமேசுவரம் முதலிய பல பெரும் கோயில்களும், தமிழ் நாட்டு மக்களின் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

**இசைக் கலை :**

கோயில்களில், அழகுக் கலைகளில் தலை சிறந்த இசைக்கலை, பெரிதும் தழைத்தோங்கி வளர்ந்து வந்தது. ஆழ்வார்களும் நாயன்மார்களும்தமது பாடல்களால், இனிய இசைக் கலையைப் போற்றிப் பரப்பி வளர்த்தனர். கோயில்களில் வகை வகையான தோற் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி முதலிய பற்பல இசைக்கலைக் கருவிகள் இடமளித்து வளர்க்கப் பெற்றன. குடுமியான் மலைச் சிகாநாதர் கோயிலிலுள்ள மகேந்திரனின் கல்வெட்டு இசைக் கலை உண்மைகள் பலவற்றை, அறிதற்குத் துணை புரிவதாக உள்ளது. மதுரைக் கோயில் பிராகாரத்தில் நடராஜர் சந்நிதியில் உள்ள தூண் ஒன்றில் 35 வகையான தாளங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. தஞ்சைப் பெரிய கோயிலில் தேவாரத் திருமுறைகளை விண்ணப்பம்செய்வதற்காக இசைத் தமிழில் வல்லார் நாற்பத்து எண்மர் நியமிக்கப்பட்டு இருந்தனர். மற்றும் கொட்டி மத்தளக்காரர் பக்க வாத்தியர், முரலியம் வங்கியம் பாடவியம் உடுக்கை சங்கு முதலியன வாசிப்போர் ஆகிய பலரும் இருந்தனர். உவச்சுப்பறை, சகடை, கரடிகை என்னும் பலவகை வாத்தியங்களும்கூட, அங்கு இடம் பெற்று இருந்தன.

**நாடகம் :**

கோயில்களில் இசைத் தமிழே அன்றி, நாடகத் தமிழும் போற்றி வளர்க்கப் பெற்று வந்தது. கதை தழுவி வரும் நாட்டிய நாடகம், மெய்ப்பாடு களாகிய உணர்ச்சிக் கூறு களை வெளிப்படுத்தும் நிருத்தியம், தாளத்தை அடிப்படையாகக்கொண்ட

நிருத்தம், இவற்றோடு தொடர்புடைய கவுத்துவம் முதலியன எல்லாம், கோயில்களில் போற்றி வளர்க்கப் பெற்றன. திருவண்ணாமலை, சிதம்பரம், தஞ்சாவூர் முதலிய பல கோயில்களில், சிவபிரான் ஆடியருளும் தாண்டவத்தின் 108 கரண வகைகள் சிற்பமாக வடித்துத் தரப் பெற்றுள்ளன.

கோயில்களில் ஆடரங்கும், நாடக சாலைகளும் இருந்தன. இசையிலும் நாடகத்திலும் வல்ல நாடகமாராயன், சாக்கைக் கூத்தன், கானம்பாடி, வாத்தியமாராயன் முதலியவர்கள் இருந்தனர். தஞ்சைப் பெரிய கோயிலில் இராஜராஜேசுவர நாடகம், சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் முதலியன நடிக்கப் பெற்றன. விக்கிரம சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில், திருவேங்கைவாசல் ஈசனார் திருமுன்னிலையில் கூத்துக்கள் பல நடித்ததற்காக ''எழுநாட்டு நங்கை'' என்பவளுக்கு நிலதானம் அளிக்கப்பெற்றது.

இங்ஙனம் சிற்பம் ஓவியம் இசை நாடகம் முதலிய கலைகள், கோயில்களில் போற்றி வளர்க்கப் பெற்றமையே அன்றி, ஒவ்வொரு கோயிலுக்கும் அதனைச் சார்ந்த தலத்திற்கும் எனக் கோவை உலா தூது அந்தாதி முதலிய பிரபந்தங்களும் தல புராணங்களும் போன்ற எண்ணற்ற இலக்கியச் செல்வங்களாகிய காவியங்களும் மிகப் பலவாகத் தோன்றிப் பெருகி வளர்ந்துவருகின்றன. இவ்வாற்றால், நாகரிக நாடுகள் போற்றும் கலைகள் அனைத்திற்கும் கோயில்களே தாயகமாக விளங்கி வந்தமை உணரலாம்.

**கலைக் கூடங்கள் :**

கோயில்களில் புராணங்கள் முதலிய இலக்கியங்களைப் படித்து விளக்கும் படன மண்டபம், நடன மண்டபம், நாடக மண்டபம், புலவர்கள் சொற்போர் நிகழ்த்தும் தருக்க மண்டபம் முதலியன இருந்தன. திருவொற்றியூர்க் கோயிலில் வியாகரணதான வியாக்கியான மண்டபம் என்று ஒன்று இருந்தது. இவற்றிலெல்லாம் பல்வேறு கலைகளும் நூல்களும் பயிலவும் ஆராயவும் பரப்பவும் பட்டு வந்தன. திருவொற்றியூர்க் கோயிலில், பங்குனி உத்தரத் திருவிழாவின் 6-ஆம் நாளில், படம்பக்க நாயக தேவரை மகிழ மரத்தின் கீழ் எழுந்தருளுவித்து, 'ஆளுடைய நம்பிகள் புராணம்' கேட்டருளச் செய்வது வழக்கம். இந்நிகழ்ச்சியில் ஓர் ஆண்டு குலோத்துங்க சோழனும் கலந்து கொண்டு மகிழ்ந்தான் எனக் கல்வெட்டு ஒன்று கூறுதல், இங்கு நாம் அறிந்து மகிழ்தற்குரியது. இவ்வாற்றால் புலவர்க்குப் புகலிடமாகவும், கலைஞர்களுக்குக்கலைக் கூடங்களாவும், அறிஞர்களுக்கு ஆராய்ச்சி நிலையங்களாகவும், கோயில்கள் விளங்கி வந்தமை புலனாகும்.

**கல் வெட்டுகள்**

நம்முடைய முன்னோர்களின் வரலாற்றுச் செய்திகள், வாழ்க்கைத் திறங்கள், அறச் செயல்கள், ஆட்சி முறைகள் முதலியவற்றை அறிந்து கொண்டு நாம் பயன் பெறுவதற்கும் கோயில்கள் பெரிதும் துணை புரிகின்றன. கோயில்களிற் காணப் பெறும் பல்லவர், சோழர், பாண்டியர் ஆகிய அரசர்கள் பற்பலரும் அமைத்து வைத்த பல்லாயிரக் கணக்கான கல் வெட்டுக்கள், பண்டைக் காலத் தமிழகத்தின் சமயம் சமுதாயம் வரலாறு இலக்கியம் மக்களின் வாழ்க்கைநிலை பழக்க வழக்கப் பண்பாடுகள் முதலியவற்றை அறிவித்துதவும் பெருஞ்சான்றுகளாக நின்று நிலவுகின்றன. கடந்த காலத்தையும், நம்மையும் நம்முடைய முன்னோர்களையும் இணைத்தியைத்துத் தொடர்புபடுத்தி வைக்கும் தூய இனிய கருவியாகக் கல்வெட்டுக்கள் நலம்பல விளைவித்து வருகின்றன.

உத்தரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயிலின் மேற்குச் சுவரிலுள்ள முதலாம் பராந்தக சோழனின் (கி.பி. 907-953) கல்வெட்டுக்கள் இரண்டும் (கி.பி. 919; 921), இந்நாளிற் போல முன்னாளில் நிலவிய ஊராட்சி முறை, ஊராட்சி வாரியங்கள், ஊராட்சித் தேர்தல் முறை, உறுப்பினர் ஆதற்குரியதகுதிகள், உறுப்

பினர் ஆக விரும்புவோர்பால் இருக்கக் கூடாத குற்றங்கள் என்பனவற்றைப் பற்றிய செய்திகளை யெல்லாம் தெளிவுற விளக்குதல் காணலாம்.

கோயில்களின் வரவுசெலவுக் கணக்குகளையும், நகை விவரங்களையும், அரச அலுவலர்கள் ஆண்டுதோறும் தணிக்கை செய்தமை; மதுராந்தகன் கண்டராதித்தன், காழி ஆதித்தன், அருமொழி மூவேந்தவேளான் போன்ற புகழ்மிக்க அரச அலுவலர்கள் இருந்தமை; போன்ற சுவைமிகு செய்திகளைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

நமது செந்தமிழ்த் திரு நாட்டின் 'தேசீய இலக்கியம்' எனப் போற்றத் தகுந்த பெரிய புராணத்திற் கூறப்படும் பற்பல செய்திகள், கோயில்களிலுள்ள கல்வெட்டுச் சான்றுகளால் பெரிதும் உறுதிப் படுகின்றன. சேக்கிழார்காலத்துச் சோழப் பேரரசனுகிய அநபாயன் என்னும் இரண்டாம் குலோத்துங்கனின் (கி.பி. 1133-1150) தந்தை ஆகிய விக்கிரமசோழனது (கி.பி.1120 -1135) ஐந்தாம் ஆட்சியாண்டில், திருவாரூர்ப் புற்றிடங் கொண்டார் கோயில் இரண்டாம் சுற்றின் வடபுறச் சுவரில் அமைக்கப் பட்டுள்ள மநு நீதிச் சோழன் வரலாறு பற்றிய கல்வெட்டே, பெரிய புராணத்தில் 'திருநகரச் சிறப்பு' என்னும் பகுதியில் ஏறத்தாழ 35 பாக்களாகச் சேக்கிழார் பெருமான் விரித்து உரைத்துப் பாடுதற்கு ஏதுவாயிற்று.

அதன்கண் மநுநீதிச் சோழனின் அமைச்சனுடைய பெயர் 'இங்கணுட்டுப் பாலையூருடையான் உபயகுலாமலன்' எனக் குறிக்கப் பெற்றுள்ளது. மற்ெருரு கல்வெட்டில், குங்கிலியக் கலய நாயனரின் மனைவி பெயர் நீலாயி என்று ஓர் அரிய செய்தி காணப்படுகின்றது. சுந்தரரின் தாயாராகிய இசைஞானியார், திருவாரூர்க் கோயில் தலைமை அருச்சகரான ஞானசிவாசாரியார் என்பவரின் மகளார் என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது. இத்தகைய அரிய கல்வெட்டுக்கள் பல அமைந்த கோயில்களின் சிறப்பிற்கும் ஓர்எல்லை இல்லை.

**ஆவணக் களரிகள் :**

இம்மட்டோ! பண்டைக் காலத்தில் பல்வேறு கலை நூல்களையும், ஓலையேட்டில் எழுதிப் பதிவு செய்து பாதுகாத்து வைக்கும் இடங்களாகவும் கோயில்கள் இருந்தன. திருமுறைகளை அபயகுலசேகரனும், நம்பியாண்டார் நம்பிகளும் தில்லைப் பெருங் கோயிலினின்றே வெளிப்படுத்தி உதவினர் என்னும் செய்தியும், இதற்குச் சான்று பகரும். கோயில்களில் இங்ஙனமிருந்த நூல் நிலையங்கள் ''சரசுவதி பண்டாரம்'' என வழங்கி வந்தன.

மேலும், விற்றல் வாங்கல் முதலியனவற்றிற்குரிய பத்திரப் பதிவுகள் செய்யும் ஆவணக்களரிகள் (Registration and Record offices) எனும்படியும் கோயில்கள் நிகழ்ந்து வந்தன. முதலாம் இராசராசன் பெரும்பற்றப் புலியூரில் ''அறப் பெருஞ் செல்வி'' என்னும் தரும சாலையை உண்டாக்கி, நிலப் பட்டியல்களைக் கோயிலில் உள்ள 'திருக்கைக் கோட்டி' என்னும் கோயிற் கருவூலத்தில் வைத்துப் பாதுகாக்கும்படி கட்டளை யிட்டான் என ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது.

**நீதி மன்றங்கள் :**

பொது மக்களின் குறை முறைகளைக் கேட்டு விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் நீதி மன்றங்களாகவும் கோயில்கள் பணியாற்றி வந்தன. சுந்தரர்க்கும் இறைவனுக்கும் நேர்ந்த வழக்கு திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலிலும், நீலி என்பவளுக்கும்வணிகன் ஒருவனுக்கும் நேர்ந்த வழக்கு பழையனூர்த் திருவாலங்காட்டுக் கோயிலிலும், விசாரிக்கப் பெற்றன என்னும் இலக்கியச் செய்திகள் இங்கு நாம் நினைவு கூரத்தகும்

திருவோத்தூர்க் கல்வெட்டு ஒன்றில் விளையாட்டாக வேட்டைக்குச் சென்ற ஒருவன் எய்த அம்பு குறி தவறி ஒரு மனிதன் மேல் பட்டுவிட, அதற்காக அவ்வூர்ச் சபையாரைக் கூட்டிக் குற்ற விசாரணை செய்வித்துச் சபை

யார் விதித்த வண்ணம் குற்றத் தண்டமாகக் கோயிலுக்கு 16 பசுக்களை வாங்கிக் கொடுத்து விளக்கு இடும்படி தீர்ப்பு வழங்கப் பெற்ற செய்தி கூறப் பட்டுள்ளது. இவ்வாறே திருமாற் பேறு, கூகூர், திருவெறும்பியூர், திருப் பனந்தாள் முதலிய தலங்களின் கல்வெட்டுக்களும், கோயில்கள் ஒரு வகையில் நீதி மன்றங்களாக விளங்கி வந்ததனை யுணர்த்துகின்றன.

**அறச் சாலைகள் :**

கோயில்கள், பலவகை அறச் செயல்கள் நடைபெறுதற்குரிய நிலைக் களமாக விளங்கி வந்தன. திருவாவடுதுறைக் கல்வெட்டுக்களில், விக்கிரம சோழன் காலத்தில் பெருந் திருவாட்டி அறச்சாலை, சங்கர தேவன் அறச்சாலை, முந்நூற்று அறுபத்து நால்வன் அறச்சாலை முதலிய பல அறச்சாலைகள் இருந்தமை புலனுகின்றது. இவற்றில் அடியார்களுக்கும் அந்தணர்களுக்கும் துறவிகளுக்கும் அனுதைகளுக்கும் உணவு அளிக்கப் பெற்று வந்தது. சில அறச்சாலைகளில் மருத்துவ நூல் பயிலுவோர்க்கும், இலக்கண இலக்கியம் முதலிய கலை பயில்வோர்க்கும் உண்டியும் உறையுளும் வழங்கப்பெற்று வந்தன. திருப்பூவணம் கோயிலில் குலசேகர பாண்டியனின் 25-ஆம் ஆட்சியாண்டில், வேத பாராயணம் செய்யும் 1008 அந்தணர்களுக்கு நாடோறும் உணவளிக்க நில தானம் செய்யப் பெற்றது. மேலும் திரிபுவனம் எண்ணுயிரம் திருமுக்கூடல் பாகூர் முதலிய இடங்களில் சிறந்த கல்வி நிலையங்களும், அவற்றில்பயிலும் மாணவர்களுக்கு உண்டி உறையுள் வசதிகளும், மிகப் பெரியஅளவில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தமை, கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

**திருமடங்கள் :**

சிறந்த பெருந் தலங்களின் கோயில்களைச் சார்ந்து பற்பல திருமடங்கள், பழங்காலம் முதலே ஏற்பட்டு விளங்கி வந்தன. அத்தகைய திருமடங்கள், தமிழ் நாட்டில் நூற்றுக்கணக்காக இருந்தமை கல்வெட்டுக்களால் அறியப் படுகின்றது. திருமடங்கள் கல்வியைப் பெருக்கி, ஒழுக்கத்தையும் பண்பையும் வளர்த்தன. நாடு போற்றி மகிழும் சான்றோர்களும், புலவர்களும், துறவிகளும் மிகப் பலராகப் பெருகுதற்குத் திருமடங்கள் சிறந்த நிலைக்களமாகத் திகழ்ந்து வந்தன. திருமடங்களால் நம் தமிழகத்திற்கு விளைந்துள்ள நலங்களுக்கு அளவே யில்லை.

**மருத்துவ மனைகள் :**

மக்களின் மலப் பிணிப்பை அகற்றி உயிர் நோயைத் தீர்ப்பதற்கென அமைந்த கோயில்களில், அவர்களின் உடற் பிணிகளைத் தீர்த்து உதவுதற்கும் தக்க வசதிகள் செய்யப் பெற்றிருந்தன. திருமுக்கூடல் கல்வெட்டில் 'வீர சோழன்' பெயரால்அமைந்த ஆதுலர் சாலை (Hospital), 15 படுக்கைகளை உடையதாக விளங்கியமை கூறப் பட்டுள்ளது. திருவாவடுதுறையில்,மக்களுக்கு மருத்துவம் செய்வதற்காக ஸ்ரீ. குந்தவைப் பிராட்டியார், உத்தம சோழ அசலரையனுக்கும் அவன் மரபினர்க்கும் நிலக்கொடையும் பொருட் கொடையும் வழங்கி யருளினுர்.

திருவாமாத்தூர்க் கோயிலில் காலை மாலை நண்பகல் என்னும் மூன்று சந்திகளிலும் திருப்பதிகம் பாடிவர, குருடர்கள் பதினுறு பேர்களும், அவர்களுக்கு வழிகாட்டுவோர் இருவருமாகப் பதினெண்மர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர். அவர்களுக்குத் தலைக்கு நெல் பதக்காக, நாளொன்றுக்குமுக்கலமும், ஆண்டொன்றுக்கு 1080 கலமும்,அவர்கள் அணிந்து கொள்ளத் துணிமணி வகைகளுக்காக 18 பொற்காசுகளும் வழங்கப் பெற்றன. இத்தகைய செய்திகளால் கோயில்கள் ஏழை எளிய மக்களுக்கும் அனுதைகளுக்கும் பேராதரவு புரிந்து வந்ததனை உணரலாம்.

**நிதி நிலையங்கள் :**

கோயில்கள், இந்நாளைய நிதிவைப்பு நிலையங்கள் ஆகிய வங்கிகள் (Banks) போலவும், பழங்காலத்தில் பலவகைகளில் பயன்பட்டன. இராமநாத புரம் மாவட்டம் திருப்புத்தூர்க் கோயிற் கல்வெட்டு ஒன்று, 'தயாபஞ்சகம்' என்று அழைக்கப்படும் மண்டபத்தில் ஊர்ச் சபையார் கூடிச் சில கொடுக்

கல் வாங்கல்கள் செய்த செய்தியைக் கூறுகின்றது. குமார மார்த்தாண்ட புரம், காஞ்சி இராஜ சிம்மேசுவரம் ஆகியவற்றின் கல்வெட்டுக்களும் இத் தகைய செய்திகளைக் கூறுகின்றன. கோயிலுக்கு வரும் தானங்களைப் பெறவும், கோயிற் பண்டாரத்தில் இருந்து பொருள்களைக் குறித்த வட்டிக்குக் கடன் தரவும், இவற்றின் தொடர்பான பத்திரங்களைப் பாதுகாக்கவும், கோயில் தொடர்புற்ற பிற வேலைகள் எல்லாவற்றையும் கவனிக்கவும் 'அமிர்த கணத்தார்' என்னும் குழுவினர் இருந்தனர்.

**தொழில் நிறுவனங்கள் :**

கோயில்கள், சமுதாயத் துறையில் இன்றியமையாத சிறந்த பல உதவிகளைச் செய்து வந்துள்ளன. இந்நாளைய தொழில் தரும் நிறுவனங்கள் (Employment Office) போலப், பழங் காலத்தில் கோயில்கள் பயன்பட்டு வந்தன. கோயில்களில் பண்டாரகர், கணக்கர், மெய்காப்பாளர், பரிசாரகம் செய்வோர், திருவிளக்கிடுவோர், மாலை கட்டுவோர், வண்ணமிடுவோர், சுண்ணம் தீற்றுவோர், சோதிடர், தச்சர், தட்டார், கன்னார், குயவர், தையற்காரர், நாவிதர், வண்ணார் முதலிய தொழிலாளர்கள் பற்பலர் நியமிக்கப்பெற்று இருந்தனர். இவர்களுக்குப் பரம்பரையாக வேலையும், மானியங்களும் அளிக்கப் பெற்றன.

கோயில்கள் பழங்காலத்தில், சமுதாயத்திற்குப் பலவகைகளில் நலங்கள் புரிந்து வந்தன. படை எடுப்புகள் நிகழும் போதும், போர்கள் ஏற்படும் போதும், மக்களுக்குப் புகலிடம்அளிக்கும்அரண்களாகவும், வலிமை வாய்ந்த கோட்டைகளாகவும், படை வீடுகளாகவும் கோயில்கள் பயன்பட்டுள்ளன. தஞ்சை இராஜராஜேச்சுரம் முதலிய பல கோயில்கள், கோட்டைகளின் அமைப்பைப் பெற்றிருத்தல் காணலாம். அண்மைக் காலத்திலும் பெரும் புயல், பெரு வெள்ளம் முதலியனவற்றால் இடுக்கண் நேர்ந்த பொழுது, பல ஊர்களில் பொது மக்கள் கோயில்களையே புகலிடமாகக் கொண்டனர்.

**சமுதாயப் பணிகள் :**

ஒவ்வொரு சிற்றூரிலும் அறுவடையானவுடன், பஞ்சங்கள் ஏற்பட்டால் பயன்படுத்தப் படுவதற்கென்று, ஒரு பகுதி நெல் ஒதுக்கி வைக்கப் பெற்றது. அதனைச் சேர்த்தல், மேற்பார்வை யிடல், பாதுகாத்தல், பஞ்ச காலத்தில் குடிமக்களுக்குப் பங்கிட்டுதவல் முதலிய வேலைகளைப் 'பஞ்ச வார வாரியத்தார்' என்னும் குழுவினர் கவனித்து வந்தனர். இவர்களின் செயல்கள் யாவும் கோயிலைச் சார்ந்தே நடைபெற்றன. கி.பி. 1152-ஆம் ஆண்டில் சோழ நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது கோயில் பண்டாரத்தில் 1011 கழஞ்சு நிறையுள்ள பொன் நகைகளும், 464 பலம் நிறையுள்ள வெள்ளிப் பொருள்களும் கடனாகப் பெற்று உயிர் வாழ்ந்தனர் என்னும் செய்தியை ஆலங்குடிக் கல்வெட்டு கூறும்.

**முடிவுரை :**

இதுகாறும் கூறி வந்தவாற்றால் நம் தமிழ் நாட்டிற் பழங்காலத்திற் கோயில்களே கல்விக் கூடங்களாகவும், கலை வளர்ச்சிக் கழகங்களாகவும், ஆவணக்களரியாகவும், அறங்கூறவையங்களாகவும், அறச் சாலைகளாகவும், மருத்துவ மனைகளாகவும், மக்களுக்குத் தொழில் தரும் நிறுவனங்களாகவும், பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவும் நிதி நிலையங்களாகவும், மன்பதை நலம் வளர்க்கும் மன்றங்களாகவும், இன்ன பிறவாகவும் விளங்கி வந்தமை யுணரலாம்.

இங்ஙனம் சமய இயல், சமுதாய இயல், கலையியல், பண்பாட்டியல், பொருளியல் முதலிய எல்லாத் துறைகளிலும் தலைமைச் சிறப்பிடம் பெற்று, நமக்கெல்லாம் நலம்பல விளைவித்து வருகின்ற கோயில்களே, உண்மையில் நமது "சமுதாய நல நிலையங்கள்" (Social Welfare Centres) எனத் தக்கனவாகும் என்பதற்குத் தடையும் உண்டோ?

—ஆசிரியர்.

# சேக்கிழார் செய்யுள் இன்பம்

**முன்னுரை :**

''சேக்கிழார் செய்யுள் இன்பம்'' என்னும் தொடரில் அமைந்துள்ள 'செய்யுள்' என்னும் சொல் 'பாட்டு' என இஞ்ஞான்று வழங்கும் பொருளில் ஆளப் பெருமல், 'இலக்கியம்' என்ற பண்டைநாட் பொருளின் குறிப்பில் ஆளப் பெற்றுள்ளது. பண்டை நாளில் 'பாட்டு' என்பதும், 'செய்யுள்' என்பதும் வேறு வேறு பொருள்களைச் சுட்டி நின்றன. ''சிலப் பதிகாரம் என்னும் பெயரால் நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'' என வரும் இளங்கோவடிகளின் திருமொழியால், ''செய்யுள்'' என்பது பாட்டின் வேறு என்றும், அஃது 'இலக்கியம்' என்னும் பொருளிற் பண்டு வழங்கியது என்றும் உணரலாம். ''உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்'' என்று சிலப்பதிகாரத்திற்கு வழங்கப் பெறும் ஒரு பெயரும் ஈண்டைக்கு எண்ணுதற்குரியது. எனவே, ''சேக்கிழார் செய்யுள் இன்பம்'' என்னும் தொடர், சேக்கிழார் அருளிச் செய்த இலக்கியமாகிய பெரு நூலின் இன்பம் எனப் பொருள்படும்.

**செய்யுள் :**

சேக்கிழார் அருளிச் செய்த செய்யுள் அல்லது இலக்கியம் பெரிய புராணம் ஆகும். ''இலக்கியம்'' என நாம் இந்நாளிற் குறிப்பிடும் சொல்லினையே ''இலங்கு நூல்'' எனத் திருவள்ளுவர் வழங்கினுர். இன்று தோன்றி நாளைக்கு மறைந்தொழியும் புன்சிறு நூல்கள் போலன்றி, என்றும் நின்று நிலவி வழங்கி விளங்கி வரத் தகுந்த பெரு நூல்களே, ''இலங்குநூல்'' என வினைத்தொகை நிலைத்தொடராற்குறிப்பிடப்பெறும் சிறப்புடையனவாகும். ஜான் ரஸ்கின் (John Ruskin) என்னும் ஆங்கில ஆசிரியரும், இத்தகைய பெரு நூல்களையே (Books for all time) ''என்றைக்கும் உரிய நூல்கள்'' எனப் புகழ்ந்து கூறிப் போற்றினர்.

சேக்கிழாரடிகளின் பெரிய புராணமானது, என்றும் நின்று நிலவி, வழங்கி விளங்கிவரத் தகுந்த பெருஞ் சிறப்பினதாயதோர் 'இலங்குநூல்' எனலாம். தண்டமிழின் மேலாந் தரத்தனவாகப் போற்றப் பெற்று வரும் தலைசிறந்த நூல்களின் வரிசையில், பெரியபுராணம் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வதற்குரிய தொன்ருகும்.

**செய்யுள் இன்பம் :**

மக்களாகப் பிறந்தோர் பெற்றுத் துய்த்தற்குரிய இன்பங்கள் பல. அவற்றுள் சிறந்த இலக்கியம் அல்லதுகவிதையினைப் படித்து உணர்ந்து மகிழும் இன்பமும் ஒன்ருகும். உலகியல் வாழ்வில் நம்மனோர் எய்தும் இன்பங்களுள் நலம் மிக்கதாய்த் தீமைக் கலப்பின்றித் தூய்மையுற்றுச் சிறந்து திகழ்வது, அழகிய இனிய கவிதைகளைப்படித்துச்சுவைத்து நாம் அடையும் இன்பமே எனலாம்.

கவிதையானது நம் இளமைக்கு வலிவும் அறிவும் ஊட்டுகின்றது; முதுமையில் மகிழ்ச்சி விளைவிக்கின்றது; செல்வச் செழிப்பில் நம்மை அழகுறுத்துகின்றது; வறுமையில் நமக்கு ஆறுதல் அளிக்கின்றது; நாம் வீட்டில் இருப்பின் நல்ல பொழுது போக்கின்பம் நல்குகின்றது; வெளியிடங்களுக்குச் செல்லின் நமக்கு உறுதுணையாக உதவி புரிகின்றது (1).

(1) "Poetry nourisheth and instructeth our youth; delights our age; adorns our prosperity; Comforts our adversity; entertains us at home; keeps us company abroad...."

—*Ben Jonson.*

சிறந்த இனிய கவிதைகளைத்தேர்ந்து உணர்வதும், அவற்றைத் திறம் தெரிந்து சுவைத்து மகிழ்ந்து இன்புறுவதும், நாம் நம் மனித வாழ்க்கையைப் புனிதமாக்கிக் கொள்ளும் வழிகளுள் ஒன்றாகும். ஆசிரியர் திருவள்ளுவர் அறிவுறுத்தியவாறு பயில்தொறும் இனிக்கும் பண்புடையார் தொடர்பு போல, நாம் நவில்தொறும் நயம் பயக்கும் இயல்புடையன நல்ல செய்யுட்கள்! 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்றது போலச் சிந்தித்து உணருந்தோறும் புதிய புதிய உணர்வும் சுவையும் கருத்தும் தோற்றுவித்துக் கற்பாரைக் களிப்பூட்டுதல் செய்யுட்களின் சிறப்பியல்பாகும்.

**செய்யுட் சிறப்பு:**

நலஞ் சிறந்த ஓர் இனிய கவிதையானது, வாழ்வியற் கவலைகளால் வருந்தி நிற்கும் மனங்களுக்கு நோய் தணிக்கும் மருந்தாகப் பயன்படுகின்றது; உலகியற் கொடுமைகளை யுணர்ந்து சில்லிட்டுப் போன உள்ளங்களுக்குத் தென்பூட்டி உணர்வளிக்கும் காலைக் கதிரவனின் ஒளிமிகுந்த கதிர்களாக விளங்குகின்றது; கொடிய பழி நெறிகளிலேயே பழகி இழிதகவான நடத்தையிலேயே பயின்று கறைபடிந்து போன இதயங்களுக்கு, அழுக்கு அகற்றும் அழகிய தெளிநீர் ஓடையாகத் திகழ்கின்றது; அறிவும் ஆற்றலும் மிக்குப் பண்பட்ட தூய அகங்களுக்கு அரும்பெறல் இன்ப விருந்தாக மிளிர்கின்றது (2).

*மனக்கவலை தீர்க்கும் மருந்தாகும்; எல்லா*
*நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்;—தனக்கிணையில்*
*ஞாயிறாய்த் தெள்ளமிழ்த வான்யாறாய்த் தேனூற்றாய்*
*மாவிருந்தாம் நற்கவிதை மாண்பு.*
—மொழிபெயர்ப்பு, ஆசிரியர் (2)

**தெய்விக உணர்வு:**

இத்தகைய சிறந்த கவிதைச் சுவை அல்லது செய்யுள் இன்பத்தினை, நம்மனோர்க்குஅளித்துநலம்புரிய வல்ல பெருநூல்கள், நமது தமிழில் மிகப்பல உள்ளன. அவைகளுள் ஒருவகையில் தனிப் பெருஞ் சிறப்புடையது, சேக்கிழார் பெருமான் அருளிய திருத் தொண்டர் புராணம். கைப்பு கார்ப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு இனிப்பு என உணவின்கண் ஆறு வேறு சுவைகளைக் கண்டு உணர்ந்து அமைத்த பழந்தமிழ்ப் பெருமக்கள், உணர்வின்கண் ஒன்பான்வகை உயரிய சுவைகளைக் கண்டுணர்ந்து அமைத்துக் கவிதைகள் பாடி, இலக்கியங்கள் இயற்றித் தமிழ்மொழியினை வளர்த்து வந்துள்ளனர். நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை நடுவுநிலை என்னும் அவ்வொன்பான் சுவைகளோடு, பக்திச் சுவை அல்லது தெய்விக உணர்வு என்னும் மிக மேலான பெருஞ் சுவையினையும் பத்தாம் சுவையாகக் கண்டு சிறப்புற அமைத்துச், சேக்கிழார்பெருமான் தமது பெருநூலை இயற்றியருளினர். தெய்விக வுணர்வு (Sublimity) என்னும் மிக மேலான பெருஞ்சுவைக்குப் பெரிய புராணம்போற் சிறந்த நூல்பிறிதொன்றில்லை. இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும் ஒரு சில சான்றுகளை மட்டும், ஈண்டுக் காண்போம்!

**சில சான்றுகள்:**

சேக்கிழார் பெருமான் இறையருள் நலத்தில் தோய்ந்து திளைத்த சிந்தை வாய்ந்தவர். இறையருளின்ப நுகர்வுணர்வின் நலம் மிகுந்து நிறைந்த பெருஞ் சான்றோர். எனவே, அவர் தம் கவிதைகளில் இறையருளுணர்வே எங்கும் பொங்கித் ததும்பிப் பொலிந்து மேலோங்கித் தோன்றுகின்றது. எந்த எளிய பொருளையும், இறையருள்உணர்வோடு இயைத்தே, அவர் இனிதுவிளக்கிப் பாடுகின்றார்:—

"The soothing power of poetry is great and its influence on our mind is vivid and sweet. To hearts eaten away by sorrow and wordly cares the reading of poetry comes as a healing balm; to hearts chilled by the icy hand of cruelty it appears like the warming rays of the morning sun; and to hearts stained with the blackest crime and the basest vice it comes as the washing water of a crystal rill. Ah! How lovely are the changes wrought by poetry in the mind of man; and how profound and permanent are the moral effects it brings into his inward nature."

—Maraimalai Adikal.

**காவிரியும் பிரமனும் :**

(1) காவிரி யாறு ஒரு வகையில் பிரம தேவனைப் போன்றதாக விளங்கு கின்றது. பிரமதேவன் திருமாலின் உந்திச் சுழியிலுள்ள தாமரை மலரின் மேல் வீற்றிருக்கின்றான்; பல வுயிர்களை யும் படைத்தருள்கின்றான்; தனது கையில் குண்டிகை என்னும் நீர்க் கரகம் ஏந்தியுள்ளான். அவ்வாறே காவிரி யாற்றிலும் உந்தியைப்போன்ற சுழிகள் ஆங்காங்கே மலர்கின்றன; தனது நீர்ப் பெருக்கால் பல உயிர் களுக்கும் அது பெரிதும் நலம் விளைக் கின்றது; அதனது தூய இனிய நீரை அனைவரும் பாத்திரங்களில் முகந்து செல்லுகின்றனர். இவ்வாற்றால் காவிரி ஆறு பிரமதேவனைப் போலத் திகழ் கின்றது.

*மாலின்உந் திச்சுழி மலர்தன் மேல்வரும்*
*சால்பினால், பல்லுயிர் தருதல் மாண்பினால்,*
*கோலநற் குண்டிகை தாங்கும் கொள்கையால்,*
*போலும்நான் முகனையும் பொன்னி மாநதி.*

**காவிரியும் கங்கையும் :**

(2) காவிரி ஆறு ஒரு வகையில் கங்கை மாநதியை ஒத்துக் காணப்படு கின்றது. கங்கை நதி சிவபிரானின் திங்கள் சூடிய சடை முடியின் சிகரத்து உச்சியிலுள்ளது; அதன் அருகில்இறை வனின் சடைமுடியிலுள்ள வெண்தலை விளங்குகின்றது; அலைகள்மிகுந்துநுரை பெருகிப் பொருகின்றது. அங்ஙனமே காவிரி யாற்றின் அலைகளும் வானளாவ மிக உயர்ந்து, திங்கள் சூடிய முடிச் சிகரத்து உச்சியை உடையதாய்ப் பொங்கி யெழுந்து, பெருகும் தன் அலைகளில் வெண்மையான நுரையைப் பரப்பிக் கொண்டு, வேகமாக மோதிப் பாய்ந்து செல்கின்றது. இவ்வாற்றால் பொன்னியாம் கன்னி ஆகிய காவிரி யின் வெள்ளம், சிவபிரானின் சடை முடியிலிருந்து பெருகும் கங்கையாறு எனத் தோன்றுகின்றது.

*திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியில்*
*பொங்குவெண் தலைநுரை பொருது போதலால்,*
*எங்கள்நா யகன்முடி மிசைநின் றேயிழி*
*கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே.*

**காவிரியும் அம்பிகையும் :**

(3) அழகிய நீண்டமலையிற்பிறந்து வளர்ந்து வரும் மேன்மையினாலும், தமிழகத்திற் பாய்ந்து நாட்டை வளம் படுத்திப் பல அறங்களும் வளரும்படி செய்து வரும் மாட்சிமையினாலும், காவிரி ஆறானது, இமயமலை அரசனின் மகளாகத் தோன்றியவளும், காஞ்சி புரத்தில் இருநாழி நெற்கொண்டு முப் பத்திரண்டு அறங்களை வளர்த்தவளும் ஆகிய அம்பிகையினுடைய திருவுள்ளத் தினின்று பொங்கி எழும் கருணை வெள் ளத்தைப்போற் பரவிப் பாய்ந்து நலம் விளைவிக்கின்றது.

*வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்*
*எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும்ஈகையால்*
*அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி*
*உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது.*

**காவிரியும் அடியாரும் :**

மணம் மிகுந்த மலர்களை வாரிக் கொணர்ந்து தூவியும், தனது பெரிய அலைகளால் நீரைச் சொரிந்தும், கரை யிலுள்ள எண்ணில்லாத பலசிவாலயங் களிலுள்ள இறைவனை வழிபட்டுச் செல்லும் திறனால், காவிரி யாறானது இறைவனுக்கு நீர் சொரிந்து மலர் சூட்டிப் பணிந்து வழிபடுகின்றசிவனடி யார்களைப்போன்றசெயலுடையதாகத் திகழ்கின்றது.

*வம்பு லாம்மலர் நீரால் வழிபட்டுச்*
*செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்து*
*எம்பிரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி*
*உம்பர் நாயகர்க்கு அன்பரும் ஒக்குமால்.*

(தொடரும்)

— ஆசிரியர்

# செந்திற் கந்தன் திருவருள்

**முன்னுரை :**

''செந்திற் கந்தன் திருவருள்'' என்னும் சிறந்த தொடரில் மூன்று சொற்கள் அமைந்துள்ளன. அம்மூன்று சொற்களுள் ஒவ்வொன்றனையும் பற்றி முறையே ஆராய்வோம்.

செந்தில் என்பது முருகப்பெருமான் எழுந்தருளி விளங்கும் புகழ்மிக்க தலங்களுள் ஒன்று. முருகனை நம் முன்னோர்கள் பலவகைகளில் அறிந்து அனுபவித்துப் போற்றியுள்ளனர். முருகன் வீரர்களுள் எல்லாம் சிறந்தபெருவீரன் ஆதலின், அவனைச் 'சேனானி' என்று பெரியோர்கள் போற்றுவர். கீதையில் கண்ணபிரான் ''வீரர்களுக்குள் யான் கந்தனாகத் திகழ்கின்றேன்'' என்று அருளிச் செய்ததாகக் கூறுவர். ''பொரும் அறையார் கழல் வீரர் வீரன்'' என அருள் நந்தி சிவாச்சாரியார், முருகனைக் குறிப்பிடுகின்றார். அடியார்களின் இடர்களாகிய பகைகளைக் கடிந்து நீக்குதலினால், வீரனாகிய முருகன் கோயில் கொண்டிருக்கும் தலங்கள், படைவீடுகள் எனப் பெயர் பெறலாயின.

**படை வீடுகள் :**

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர் சோலை என்னும் ஆறு தலங்களும் படைவீடுகள் என்று சிறப்பாக வழங்கப்படும். சங்கத் தமிழின் தலைமைப் புலவராகிய நக்கீரர், திருமுருகாற்றுப் படை பாடிய காலம் முதல், அத் திருமுருகாற்றுப்படையின் அமைப்பைத் தழுவிப் படைவீடுகள் என ஒரு வழக்காறு ஏற்பட்டு வழங்கி வருகின்றது. கந்த புராணம் பாடிய கச்சியப்பர், திருப்புகழ் பாடிய அருணகிரி நாதர் முதலிய அனைவரும் திருமுருகாற்றுப்படையினைஒட்டியே, ஆறுபடை வீடுகளின் வரிசை முறையினைக் குறிப்பிட்டுள்ளனர்.

**செந்தில் :**

திருச்சீரலைவாய் என்னும் படைவீட்டிற்கே செந்தில், செந்தூர் என்பது பெயர். செம்மையான இல், செம்மை வாய்ந்த ஊர் என்பது இவற்றின் பொருள். இவை, 'சேதா' (செந்நிறம் உடைய பசு) என்னும் சொல்லிற் போல, இடையில் தகர எழுத்துப் பேறு பெற்றுச் செந்தில், செந்தூர் என அமைந்தன. சூரபதுமனைவென்று ஜெயங்கொண்ட இடமாதல்பற்றி இத் தலத்திற்கு ஜெயந்தி எனப் பெயர் அமைந்தது என்றும், அதுவே தமிழில் செந்தி என மருவி வழங்குகின்றது என்றும் கூறுவதுண்டு.

முன்றிலின் புறம் அலைபொருத செந்தில் தங்கிய
பெருமாளே (1)
தெருவிலேயும் நித்திலம் எறி அலைவாய்ச்
செந்திற் கந்தப் பெருமாளே (2)
அலையே கரைபொருத
செந்தில் நகரில் இனிதே
மருவி வளர் பெருமாளே (3)
முன்பொங்கித் தங்கிச்
சலதி அலைவாரும் செந்திற்
கந்தப் பெருமாளே(4)
வாரிதி நீர்பரந்த
சீரலைவாய் உகந்த பெருமாளே (5)

என்று பல திருப்புகழ்ப் பாடல்களில் அருணகிரிநாதர் பாடுவதுபோல, இத் தலத்துக் கோயிலின் மதிற்புறத்தே வந்து கடல் அலைகள் மோதுதலை இன்றும் நாம் காணலாம். ஆதலின் இத் தலத்திற்கு அலைவாய் என்னும் காரணப் பெயர், பண்டைக் காலத்திலேயே ஏற்படுவதாயிற்று.

**புறநானூறு :**

மருதன் இள நாகனார் என்னும் சங்ககாலப் புலவர் ஒருவர், பாண்டி

யன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்னும் அரசனை ''நீ நெடு வேளாகிய முருகன், நிலைபெற்று விளங் குகின்ற அழகிய அலைவாய் என்னும் திருச்செந்தூர்க்கடற்கரையிலுள்ள எக் கர் மணல்போல, எண்ணற்ற நெடுங் காலம் நீடினிது வாழ்வாயாக'' என வாழ்த்திப் பாடிய புறநானூற்றுப்பாட லில், திருச்செந்தூர் பற்றிய சிறந்த ஒரு குறிப்பு அமைந்து காணப்படுகிறது.

நீ நீடு வாழிய நெடுந்தகை! தாழ்நீர்
வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக்
கடுவளி தொகுப்ப ஈண்டிய
வடுவாழ் எக்கர் மணலினும் பலவே.

—புறநானூறு, 55.

இப்பாடலில் செந்திலை 'வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்' என்றும், அங்கு முருகன் எழுந்தருளி நிலைபெற்று இருத்தலை 'நெடுவேள் நிலைஇய' என் றும், திருச்செந்தூரின் கடற்கரையா னது காண்பார் கண்ணும் உள்ளமும் கவரும் சிறப்புமிக்கு அழகு வாய்ந்து விரிந்து பரந்து விளங்குதலைக் ''காமர் வியன்துறை' என்றும் மருதன் இள நாகனார் குறிப்பிட்டிருக்கும் திறம் உணர்ந்து மகிழ்தற்குரியது.

**அகநானூறு:**

இவ்வாறே 'பரணர்' என்னும் சங்க காலப் புலவர், அகநானூறு என்னும் அருந்தமிழ்ச் சங்கநூற் பாடல் ஒன்றில், திருச்சீரலைவாயின் சிறப்பை வியந்தெ டுத்துப் புகழ்ந்துள்ளார்.

கழனி யுழவர் கலிசிறந் தெடுத்த
கறங்கிசை வெரீ இப் பறந்த தோகை
அணங்குடை வரைப்பகம்பொலிய வந்திறுக்குந்
திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎயொடு உற்ற சூளே.

—அகநானூறு, 266.

திருச்செந்தூரைச் சுற்றி வயல்கள் உள்ளன. அங்கு உழவர்கள் ஆரவாரத் துடனும் மகிழ்ச்சியுடனும் நிலத்தை உழுகின்றனர். நிலத்தை உழுங்கால் அவர்கள் நிகழ்த்தும் மகிழ்ச்சி மிக்க ஆடல் பாடல் ஒலிகளைக் கேட்டு அடுத்துள்ள குறிஞ்சி நிலத்தில் வாழும் மயில்கள் அஞ்சி, அருகே உள்ள தெய் வத்தன்மையுடைய மலைப் பகுதிகள் பொலிவு பெறும்படி பறந்து வந்து தங்குகின்றன. கடல் அலைகள் கொண்டு வந்து கரையிற் சேர்க்கின்ற அழகிய மணிகள் விளக்குகள் போல ஒளி விடுகின்றன. அத்தகைய அலை வாயாகிய செந்திலில், சூரபதுமனோடு நிகழ்த்திய போர்த் திறத்தில் வல்ல சேயாகிய முருகன் எழுந்தருளித் திகழ்கின்றான் என்பது, இப்பாடற் பகுதியின் திரண்ட பொருளாகும்.

செந்திலைத் 'திருமணி விளக்கின் அலைவாய்' என்றும், செந்திலின்கண் உள்ள முருகனைச் 'செருமிகு சேய்' என் றும், செந்திலில் முருகனுக்குரிய மயில் கள் ஆங்காங்குப் பொலிவு மிகத் தங்கி யிருத்தலைத் 'தோகை அணங்குடை வரைப்பகம் பொலிய வந்து இறுக்கும்' என்றும், பரணர் அழகுறக் குறிப் பிட்டுப் பாடியிருப்பது சிந்தித்து மகிழ் தற்குரியதாகும்.

**உள்ளுறை:**

கழனி உழவர்களின் கறங்கிசை யினை வெரீஇப் பறந்த தோகை வரைப் பகம் பொலிய வந்து இறுக்கும் அலை வாய் என்றமையால், மருதம் குறிஞ்சி நெய்தல் ஆகிய நிலங்கள் செந்திலில் ஒருங்கே கலந்துள்ளமை பெற்றாம். பல நிலங்களும் அங்குக் கலந்து சூழ்ந் திருத்தலால், பல நிலத்து வாழ்வாரும் செந்திற்கு வந்து முருகனைப் பணிந்து பல நலங்களும் பெற்று உய்ந்து மகிழ்தல் உணர்த்தப் பெற்றது.

இப்பாடல், பரத்தையிற் பிரிந்து வந்து கூடிய தலைமகனுக்குத் தலை மகள் கூறுவதாக அமைந்துள்ளது. அத்துறைக்கு ஏற்ப, உழவர்களின் ஒலிக்குஅஞ்சி மயில்கள் குன்றிடத்தில் பறந்து வந்து தங்கும் என்னும் பா டற்பகுதியில், ஊரில் எழுந்த பழிச் சொல்லுக்கு அஞ்சியே, தலைவனாகிய நீ இவ்வீடு பொலிவுறும்படி இப்போது

வந்து தங்கியுள்ளாய் எனத் தலைவி கூறும் கருத்து அழகிய உள்ளுறையாக அமைந்துள்ளது. இஃது அகப்பொருள் துறையில் அமைந்த உள்ளுறை எனினும், இதற்கே நாம் அருட்பொருள் அமைய வேறொரு வகையிலும்பொருள் காணலாம். பரத்தையிற் பிரிந்த தலைமகன், அத்தியொழுக்கத்தினை விடுத்து ஊரவர்களின் பழிதூற்றலுக்கு அஞ்சித் தன் வீட்டிற்குத் திரும்பி வந்து தங்கிய தன்மை போல, தீயொழுக்கங்களில் பழகிக் கிடப்பவர்களும் பழிபாவங்களுக்கு அஞ்சித் திருச்செந்தூரை அடைந்து திருந்தி, முருகனைப் போற்றி அருள் பெற்று உய்வர் என்னும் ஒரு கருத்தும், இப்பாடலின் கண் நுண்ணிதிற் புலப்படுத்தப்படுகின்றது எனலாம். செந்திலின் பெருமையைப் பரணர் என்னும் சங்ககாலப் புலவர் இவ்வாறு நுண்ணிதின் விளக்கிப் பாடியிருத்தல், எண்ணி இன்புறுதற்கு ஏற்றதாகும்.

**சிலப்பதிகாரம்:**

இவ்வாறே முத்தமிழ்ப் புலமை வித்தகராகிய இளங்கோவடிகளும், தாம் இயற்றிய நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் காப்பியத்தில், செந்திலின் சிறப்பைத் திறன் தெரிந்து வியந்து பாடியருள்கின்றார்.

சீர்கெழு செந்திலும்செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொரு
சூர்மாத் தடிந்த சுடரிலைய வெள்வேலே. [நாள்

என்னும் அழகிய இனிய பாடல், ஆசிரியர் இளங்கோவடிகளால், சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்தில், குன்றக் குரவை என்னும் பகுதியில், அருளிச் செய்யப்பெற்றுள்ளது. முருகன்செந்தில் செங்கோடு வெண்குன்று ஏரகம் என்னும் தலங்களில் நீங்காமல் எழுந்தருளியுள்ளான் என்றும், அவனுடைய திருக்கையில் இருப்பது வெல்லும் திறனில் ஒப்புயர்வற்ற தனிச் சிறப்பு வாய்ந்த வேல் என்றும், முருகன் அவ்வேல் கொண்டே கடலில் புகுந்துமறைந்து மாமரமாய்த்தோன்றி எதிர்த்து நின்ற சூரபதுமனைத் தடிந்தான் என்றும், இளங்கோவடிகள் இனிதெடுத்து இயம்புகின்றார். இச்சிறந்த பாடலில் செந்திலை, அவர் 'சீர்கெழு செந்தில்' என்று குறிப்பிட்டுச் சிறப்பித்திருப்பது, இங்கு நாம் பெரிதும் சிந்தித்து இன்புறுதற்குரியது.

**நக்கீரர்:**

ஆசிரியர் நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில், செந்தில் ஆகியஅலைவாயினை 'ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்' எனப் புகழ்கின்றார். சீர் என்பது இன்னதென்றுணர்த்தற்கு, 'உலகம் புகழ்ந்த சீர்' எனக் குறிப்பிட்டார். அச்சீரை ஓங்கு சீர்—உயர்சீர்—விழுச்சீர் என விதந்தோதுகின்றார்! முக்காலத்தும் ஒத்த சீர் உடையது; மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புக்களையும் உடையது; உத்தமர் மத்திமர் அதமர் என்னும் முத்திறத்து மக்களுமே தொழுது உய்வதற்குரியது; என்னும் பற்பல உண்மைகளை உணர்த்துதற் பொருட்டு, இங்ஙனம் நக்கீரர் அருளிச் செய்தனர் போலும்!

**கந்தன்:**

இனி, 'கந்தன்' எனும் சொல்லை ஆராய்வோம்! 'செந்தில் முருகன்' என்றாலும் பொருந்துமாயினும், 'செந்திற் கந்தன்' என அமைத்தமை சிறப்புடையது! அதனால் 'பிராசம்' என்னும் 'வழியெதுகை' அமைந்திருத்தல் காணலாம். மேலும், செந்தில் முருகனைக் 'கந்தன்' என்றே சிறப்பாகக் குறிப்பிட்டு வழங்குதல், பெரியோர்களின் திருவுள்ளம் போலும்! அருணகிரிநாதர் தமது திருப்புகழில்,

சிவந்தசெஞ் சதங்கையும் சிலம்பும்
  தண்டையும் புனைந்து
செந்திலில் வந்த கந்த
  எங்கள் பெருமாளே (1)
ஜெயஜெய அரஅர
  செந்திற் கந்தப் பெருமாளே (2)
சுந்தர மான செந்திலில் மேவு
  கந்த சுரேசர் பெருமாளே (3)
திருவளர் செந்தூர்க் கந்தப் பெருமாளே (4)
திருச்செந்திற் பதிக் கந்தப் பெருமாளே (5)
கந்தா செந்திற் பெருமாளே (6)

எனப் பல இடங்களிலும் 'கந்தன்' என்னும் சொல்லையே பெரிதெடுத்துவழங்கியிருத்தலும், இங்கு நாம் கருதுதற்குரியது.

முருகன் என்னும் சொல்லைப் போலவே, அப்பெருமானைக் குறிக்கும் வேறுபல சொற்களும், மிகவும் ஆழ்ந்த பொருட் சிறப்பும் செறிவும் உடையவை. கந்தன் என்பது அவற்றுள் மிகவும் பயின்று வழங்கி வரும் ஓர் அரும்பெரும் சொல். கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தர் கலிவெண்பா, கந்த புராணம், கந்தர் சஷ்டி எனப் பெரிதும் வழங்கிவரும் வழக்காறே, இச்சொல்லின் சிறப்பை நமக்கு நன்கு இனிது உணர்த்தும்.

> சேயவன் வடிவம் ஆறும்
> திரட்டிநீ ஒன்றுய்ச் செய்தாய்
> ஆயத ஞலே கந்தன்
> ஆமெனும் நாமம் பெற்றுன்.

என்னும் செய்யுளாற் கச்சியப்ப சிவாசாரியார் கந்தன் என்னும் சொற்பொருளைக் கவினுற விளக்கியருளினுர். கந்தன் என்பதற்குப் பகைவர்களை வற்றச் செய்பவன் எனவும் வடமொழியிற் பொருள் கூறுவர். 'தோள் வலிமை மிக்கவன்' என இதற்குப் பொருள் கூறுதலும் பொருந்தும்.

**பற்றுக்கோடு :**

தமிழிற் 'கந்து' என்னும் சொல் பற்றுக்கோடு எனப் பொருள் தரும். 'காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல் பேதைமை எல்லாம் தரும்' என்னும் திருக்குறளில், ஆசிரியர் திருவள்ளுவர் 'கந்து' என்னும் சொல்லைப் பற்றுக்கோடு என்னும் பொருளிற் பண்டே வழங்கியுள்ளனர். ஆதலின், கந்தன் என்பதற்கு 'யாவருக்கும் பற்றுக்கோடாகத் திகழ்பவன்' என்று பொருள் கொள்ளுதல் பொருந்தும். இப்பொருளின் அருமைப்பாடு பெரிதும் போற்றியுணர்தற்கு உரியது.

**'கதிவழங்கும் கந்தன்':**

இனி கந்தன் என்னும் சொல்லுக்கு ஆசிரியர் அருள்நந்தி சிவம், தக்க ஓர் அடைமொழி தந்து அச்சொல்லின் பொருட் சிறப்பை உணர்த்துகின்ருர். அடைமொழிகள் பொதுவாக இருதிறப்படும். ஒரு சில அடைமொழிகள், ஒரு பொருளை அதன் இனமாய பொருள்களினின்று பிரித்துக் காட்டும். வேறு சில அடைமொழிகள், அங்ஙனம் செய்யாமல் தாம் அடுத்து வரும் சொற்களின் பொருளும் இயல்பும் இனையன என்று உணர்த்தி நிற்கும். இவ்விரு திற அடைமொழிகளையும்முறையே பிறிதின் இயைபு நீக்குதல் (அந்நியயோகவியவச்சேதம்), இயைபு இன்மை நீக்குதல் (அயோக வியவச் சேதம்) என இலக்கண நூலார் வழங்குவர். இவற்றுள் இயைபின்மை நீக்குதல் ஆகிய அடைமொழி தந்து 'கதிவழங்கும் கந்தன்' என அருள்நந்திசிவம் தாம் இயற்றியருளிய சிவஞான சித்தியாரின்கண் வழங்கி யுள்ளார். இதனுல் தன்னை வழிபடும் அடியவர்களுக்கு வீடுபேறு ஆகிய கதியினை வழங்குதலில் கந்தனுகிய முருகன் தனிப்பெரும் சிறப்புடையவன் என்னும் உண்மையினை, அவர் உணர்த்தி யருளினுர் எனலாம்.

> அருமறை ஆகமம் அங்கம் அருங் கலைநூல் தெரிந்த
> அகத்தியனுக் கோத்துரைக்கும் அருட்குரு வாம் குருவை;
> திருமறைமாமுனிவர்முனி; தேவர்கள்தம் தேவன்;
> சிவனருள்சேர் திருமதலை; தவநிலையோர் தெய்வம்;
> பொரும்அறையார் கழல்வீரர் வீரன்; பூநீர்
> கையிற்கொண் டோவாது போற்றும் அடியார்கள்
> கருமறையா வகையருளிக் கதிவழங்கும் கந்தன்
> கழலிணைகள் எம்சிரத்திற் கருத்தில் வைப்பாம்.

**திருவருள் :**

இனி, திருவருள் என்னும் சொல் ஆராய்தற்குரியது. முருகன் தன் அடியார்களுக்கு எல்லாத் தலங்களிலுமே அருள் புரிகின்றனுயினும், அவனது அருட்பேற்றிற்குத் திருச்செந்தூர் தனிப் பெரும் சிறப்புடைய தலமாக விளங்குகின்றது எனலாம். ஆறு

படை வீடுகளில் அருள் வழங்குதற் கென்றே அமைந்த சிறப்புத்தலம் திருச்செந்தூர் எனக் கூறின், அது மிகையாகாது. ஏனெனில், திருச் செந்தூரில்தான் முருகன் அருளே வடிவமாகவும், கருணை வெள்ளமாகவும் வீற்றிருக்கின்ருன்.

''...செந்துரிற் போய்க்கருணை
வெள்ளம்எனத் தவிசின் வீற்றிருந்து''

எனக் குமரகுருபர சுவாமிகள், கந்தர் கலி வெண்பாவிற் பாடி யிருத்தல் காண்க.

முருகன் திருப்பரங்குன்றத்தில் ஒளி வடிவாகவும், திருச்செந்தூரில் அருள் வடிவாகவும், திருவாவினன்குடியில் தவவடிவாகவும், திருவேரகத்தில் மந் திரவடிவாகவும், குன்றுதோருடலில் எளிமை வடிவாகவும், பழமுதிர் சோலையில் வியாபக வடிவாகவும் விளங் குகின்ருன் எனக் கூறலாம்.

**செந்திலில் திருவருள் :**

இதனையே வேறொரு வகையிலும் நாம் கொள்ளுதல் இயையும். திருப் பரங்குன்றத்தில் உல்லாச நிலையிலும், திருச்செந்தூரில் நிராகுல நிலையிலும், திருவாவினன்குடியில் யோக நிலையி லும், திருவேரகத்தில் இதநிலையிலும், குன்றுதோருடலில் சல்லாப நிலையி லும், பழமுதிர்சோலையில் விநோத நிலையிலும்,முருகன் எழுந்தருளித் திகழ் கின்ருன் எனவும் நாம் கொள்ளுதல் பொருந்தும். ''உல்லாச நிராகுல யோக இதச் சல்லாப விநோதனும் நீ அலை யோ?'' என்பது கந்தர் அநுபூதி. ஆதலின் திருச்செந்தூரில் முருகன் நிரா குலநிலையில் அடியார்களின் கவலைகளைப் போக்கித் தான் கவலையில்லாதவனுய் அருள் வடிவாக அமர்ந்திருக்கின்ருன் என்பது தெளியலாம்.

''மூவர்
குறைமுடித்து விண்ணம் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே''

எனவரும் கந்தர் கலிவெண்பா வரி களால், திருச்செந்தூரில் முருகன் நிகழ்த்தியருளிய திருவருட் சிறப்புச் செயல் உணர்த்தப் பெற்றிருத்தல் காணலாம். மூவர்குறை முடித்ததும், தேவர்களைச் சிறைவிடுத்ததும் ஆகி யவை மட்டுமே, திருச்செந்தூரில் முரு கன் நிகழ்த்திய திருவருள் நலச் செயல் என்பதில்லை. இவற்றினும் மேலான ஒரு பேரருட் பெருஞ் செயலை யும் முருகன் அங்கு நிகழ்த்தியருளினுர். மாமரமாகத் தோன்றி எதிர்த்த சூர பதுமனைத் தடிந்ததனையே, திருச்செந் தூரில் முருகன் நிகழ்த்திய செயலாக அனைவரும் கருதுவர். அதற்கு அடை யாளமாகத் திருச்செந்தூருக்கு அருகே மாப்பாடு என்னும் ஓர் இடம் இருத் தலையும் அறிஞர்கள் கூறுவர். முருகன் சூரபதுமனை அழித்திலன்; அவனை அரு ளால் தனக்குரிய சேவலும் மயிலுமாக ஆட்கொண்டருளினுன் என்பது நாம் பெரிதும் கருதி உணர்தற்குரியது. கொடியவனும் பகைவனுமாகிய சூர பதுமனுக்கும் திருவருள் புரிந்து அவனை அழிக்காமல் ஆட்கொண்டருளிய தலம் திருச்செந்தூரே எனின், திருவருட்பேற் றிற்கும் திருச்செந்தூருக்கும் எத்துணை நெருங்கிய தொடர்பும் இயைபும் உள்ளன என்று, யாவரும் கருதி உணரலாம்.

தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்ருல்
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ?
அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்ருே
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்!

—கந்தபுராணம்.

பகைவனை அழித்தலில் வீரமோ பெருமையோ இல்லை. பகைவனையும் மன்னித்து இன்னருள் புரிந்து திருத்தி ஆட்கொண்டருளும் அரியசெயல் திறன் தான், பெரு வீரமும் பெருஞ் சிறப்பு மாகும். ''தீமையை வெறு; தீயவனை வெறுக்காதே (Hate the sin, but not the sinner) என்பது உயர்வற உயர்ந்த கொள்

கை. பகைவனை வீரத்தால் கொல்லுத லிற் காட்டிலும், குணத்தால் கவர்ந்து அன்புடையவனுக்கிக் கொள்ளுதல் பண்பு மிக்க அரும் பெருஞ்செயலாகும்.

''பகை நட்பாக் கொண்டொழுகும்
பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு''

என்பது திருக்குறள். அம்முறையில் பகைவனையும் நண்பனுக்கிக் கொள்ளும் பெருஞ்செயலையே, வெற்றிகளுள் மிக்க பெரு வெற்றி எனும் கருத்தில் 'அரச வாகை' எனத் தமிழ் நூல்கள் குறிப் பிடும். எனவே தேவர்க்கும் மூவர்க் கும் மட்டுமேயன்றிக் கொடியவனும் பகைவனும் ஆகிய சூரபதுமனுக்கும் அருள்புரிந்த சிறப்புடைமையால், செந் திலம் பதியே முருகனின் திருவருட் பேற்றிற்கு முழுதுரிமை உடைய பெருந் தலமாயிற்று எனக் கொள்ளுதல் பொருந்தும்.

**கருணைகூர் முகங்கள்**:

மேலும் திருச்செந்தூரில்தான் முரு கப்பெருமான் ஆறுமுகங்களும் பன்னி ரண்டு கைகளும் உடையவனுகத் திகழ் கின்றுன் என்று திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். இறைவன் திருமேனி தரித்துக் கொள் வது, நமது கருமேனியைக் கழிக்கத் தான் கொள்ளும் கருணை இயல்பினுலே யேயாகும். திருச்செந்தூரிலே முருகன் ஆறுமுகங்கள் உடையவனுக எழுந்தரு ளியுள்ளான். அவற்றுள்,

ஒருமுகம் உலகிற்கு ஒளியை நல்கு கின்றது.
ஒருமுகம் அன்பர்க்கு வேண்டும்வரங் களை வழங்குகின்றது.
ஒருமுகம் அந்தணர் வேள்வியைப் பாதுகாக்கின்றது.
ஒருமுகம் முனிவர்க்கு நூற்பொருளை விளக்குகின்றது.
ஒருமுகம் அசுரரை அழித்துக் கள வேள்வி புரிகின்றது.
ஒருமுகம் உலகில் இல்வாழ்க்கை நிகழ்தற் பொருட்டு வள்ளியம் மையாருடன் நகையமர்கின்றது.

இந்த ஆறு திருமுகங்களுக்கும் ஏற்ப, முருகனின் பன்னிரண்டு திருக்கை களும் உலக நலன் கருதிப் பற்பல செயல்கள் புரிதலைத் திருமுருகாற்றுப் படை விரிவாக விளக்கி யுள்ளது. அதனைத் தழுவியே, செந்திற் கந்தன் திருவருள் பெற்ற நமது குமர குருபர சுவாமிகளும் தமது கந்தர் கலிவெண்பாவில் அவற்றின் இயல் பினை விரிவாக விளக்கியுள்ளார். ஆதலின் முருகன் உலகஉயிர்களின் நலன் கருதி ஆறுமுகமும் பன்னிரு கையும் கொண்ட நிலையில் விளங்கும் சிறப்பு மிக்க திருவருட் புனிதத் தலம், திருச் செந்தூரேயாகும் எனலாம்.

இவ்வாறு கூறுதலால் பிற தலங் களை நாம் இகழ்ந்ததாகாது. எடுத்த பொருளைச் சிறப்பித்தல் (பிரதிஞ்ஞா ஹேது நியாயம்) என்னும் முறை மைக்கு இஃது ஏற்புடைத்தேயாகும். இவ்வாறு கூறுதல் கொண்டு திருச் செந்தூரின் சிறப்பை ஏனைய தலங்க ளோடு ஒத்த பொதுமைத் தன்மைத்து என்றும் எவரும் கொள்ளாதிருக்கக் கடவர்.

''அருவமும் உருவும் ஆகி
அநாதியாய்ப் பலவாய்ப் ஒன்றுய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய'',

எனக் கந்தபுராணத்திற் கச்சியப்பர் பாடுதல்போல, உலகம் உய்தற்கே முருகன் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டருள்வானுயி னன். ஆதலினுலேயே அம்முகங்களைக் 'கருணைகூர் முகங்கள்'' என்றும், கரங் களைக் ''கருணைகூர் கரங்கள்'' என்றும் கச்சியப்பர் வியந்து புகழ்ந்தார்.

**சான்றோர் அருட்பேறு:**

இனி, அருணகிரிநாதர், சுவாமிநாத தேசிகர், குமரகுருபரர், பகழிக்கூத்தர், சிவப்பிரகாசர், திருச்சிற்றம்பல நாடி

கள், வென்றிமாலைக் கவிராயர், தண்ட பாணி சுவாமிகள், ஆதிசங்கரர் முத லிய பற்பல செந்தமிழ்ச் சான்றோர்கள் போற்றித் துதித்து, முருகனின் திரு வருள்பெற்ற தலம் திருச்செந்தூர் என் பதும் நாம் நினைவு கூரத்தக்கது.

''செஞ்சொற் புலவர்க்கு அன்புற்ற
செந்திற் கந்தப் பெருமாளே''

என அருணகிரிநாதர் தம் திருப்புகழில் அருளிச் செய்தருளியிருப்பதும், இவ் வுண்மையைச் செவ்விதின் வலியுறுத் துவதாகும்.

**முடிவுரை:**

இங்ஙனம் எண்ணி உணருந்தோறும் பல நுண்ணிய பொருள்களைக் கொண் டது, செந்திற் கந்தன் திருவருள் என் னும் அழகிய இனிய அரிய தொடர்! இச்சிறந்த தொடரை அமைத்து என் னைப் பேசும்படி பணித்தவர்கள், செந் திற் கந்தன் திருவருளைப் பெற்று, அதன் கண் தமது மன மொழி மெய்களால் இடையறாது ஈடுபட்டுப் பெரிதும் திளைப் பவர்களும், செந்திற் கந்தன் திருவருள் பெற்றுக் கந்தர் கலிவெண்பா என்னும் செந்தமிழ்த் துதிநூலைப் பாடியருளிய சிவானுபூதிப் பெருஞ் செல்வராகிய குமர குருபர அடிகளின் திருமரபிற் போந்து அருளாட்சி செய்பவர்களும், ஆகிய நமது 'காசிவாசி சுவாமிகள்' அவர்களாவர்.

பத்திக் கடலே! குணக்குன்றே!
பாசப் பகையே! எம்உறவே!
முத்திக் கரசே! சிவானந்த
முதலே! ஞான மணிவிளக்கே!
சித்திப் பொருளே! அருள்நந்தித்
தேவே! அன்பில் தொழும் அடியார்
புத்திக் கமுதே! யாவர் நினைப்
போல்வார்? அவரை அறியேமால்!
—பிரபுலிங்கலீலை

எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடியருளிய சிறந்த பாடலை இங்கு நினைவு கூர்ந்து, அவர்களின் பொன்னார் திருவடிக குப் புல்லிய என் பணிவார்ந்த வணக்கங்களையும் நன்றியையும் புலப் படுத்திக் கொள்ளுகிறேன். செந்திற் கந்தன் திருவருள் எங்கும் பரவி, யாவருக்கும் நலம் பயப்பதாக!

(திருப்பனந்தாள் ஸ்ரீ வீரியம்மன் கோயில் விழாவில் (22.3.67), ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திருவுளங்கொண்டு பணித் தருளியபடி நிகழ்த்திய சொற்பொழி வைத் தழுவி எழுதியது).


—ஆசிரியர்.

---

## செய்திச் சுருக்கம்

திருப்பணித் துவக்க விழா: சென்னை 'தமிழ்நாடு தெய்விகப் பேரவை'யின் சார்பில், செங்கல்பட்டு மாவட்டம் வட திருமுல்லைவாயில் ஸ்ரீ மாசிலாமணி ஈசுவரர் கோயிலில், தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்கள், 30-4-67 ஞாயிறன்று காலை 7-30 மணியளவில் திருப்பணித் திட்டத்தினைத் துவக்கி வைத்தருளி னார்கள். நமது அறநிலைய ஆணையர் திரு மா. சே. சாரங்கபாணி முதலியார் அவர்கள், விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். சென்னைத் துணை ஆணையர் திரு ஏ. சிதம்பரம் அவர்களும், தஞ்சைத் துணை ஆணையர் திரு ஏ. மார்க்கண்டவேல்ராஜன் அவர்களும், முறையே வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர் கள் ரூபா பத்தாயிரம் நன்கொடை வழங்குவதாக அறிவித்தார்கள். மினர்வா கல்லூரித் திரு ஏ. என். பரசுராமன் அவர்கள் 501 ரூபாவும், ஷை கோயிற் பரம்பரை அறங்காவலர் திரு பி. எஸ். எஸ். பொன்னுரங்க முதலியார் அவர்கள் 1001 ரூபாவும் நன்கொடை வழங்கினார்கள். அன்பர்கள் பலர் உண்டியலில் பணம் செலுத்தினர். பெருமக்கள் பலர் திரளாக வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர்.

—ஆசிரியர்.



ஸ்ரீ ரங்கநாதர், ஸ்ரீரங்கம்.

By Courtesy :
'The Divya Kshetras in India Souvenir.'

12 JUL 1973
MADRAS



ஸ்ரீ கோமளவல்லித் தாயார்
திருக்குடந்தை.

By Courtesy:
'The Divya Kshetras in India Souvenir.'

# சங்கற்ப நிராகரணம்

[சிவசமவாதம்]

(முற்றொடர்ச்சி)

இங்ஙனம் பேதவாதியின் கொள்கைகளை மறுத்த சிவசமவாதி, பின்னர்த் தனது கொள்கைகளை எடுத்துக் கூறுகின்றான்:

**சங்கற்பம் :**

பதி பசு பாசம் எனப்படும் முப்பொருள்களுக்கும் பதிஞானம் பசுஞானம் பாசஞானம் என்னும் மூவகையான ஞானமும் பழமையாகவே உள்ளன. பாசஞானம் சுவையொளியூறோசை முதலிய நுகர்பொருள்களைஅறிவித்து நிற்க, பசுஞானமானது தன் பொறிகளின் வாயிலாக அவைகளை அறிந்து நுகர்ந்துவரும். பாசஞான பசுஞானங்கள் நீங்கியவழி, உயிரானது 'எரியாச் செந்தழல்' போலும் நிலையில் அழிவின்றிக் கிடக்கும். அதுபோழ்து உயிர் அறியும் தன்மையுடைய தெனினும், அதற்கு இஃது என்று ஒரு பொருளையும் சுட்டியறியுந் திறன் சிறிதும் இல்லை. இஃது உயிர்களின் கட்டுநிலை.

இவ்வாறு கட்டு நிலையில் நாடோறும் கேவல சகல அவத்தைகளை எய்தி வரும் உயிரினை, ஒன்றும் அறியாமற் கிடக்கும் பச்சைப் புழுவினைக் குளவியானது (வேட்டுவாளி) வந்து பற்றுதல் போல, பதிஞானமானது வந்து பற்றும். பச்சைப்புழு தன்னைப் பற்றி எடுத்துச் சென்ற குளவியினையே நினைத்துக் கொண்டிருந்து அக்குளவியின் உருவத்தினைப் பெறும் தன்மை போல, உயிரும் தன்னை வந்து பொருந்திய சிவஞானத்தால் சிவத்தையே நினைந்து தியானம் செய்து, அச்சிவத்தின் இயல்பினை எய்தும்.

குளவியின் உருவம் பெற்ற புழு, அக்குளவி செய்யும் தொழில்களை எல்லாம் தானும் செய்யவல்லதாய், அக்குளவி யுருவம் நீங்காமல், முன்பேயுள்ள குளவிகளின் கூட்டத்தில், தானும் சென்று சேர்ந்திருக்கும் தன்மைபோல—சிவத்தின் இயல்பினைப் பெற்ற உயிரும், சிவத்தின் ஐந்தொழில்களியற்றுந் திறனையும், முற்றறிவியல்பினையும் பெற்று நின்று, சிவத்தின் இயல்பு மாறுமல், முன்னரே வீட்டுநிலை எய்திச் சிவத்தோடொப்ப விளங்கும் ஏனை நல்லுயிர்களோடு தானும் சென்று கூடி நிற்கும். இஃது உயிர்களின் வீட்டு நிலையாம் எனச் சிவசமவாதி தன்னுடைய கொள்கைகளைக் கூறிமுடித்தான்.

சிவசமவாதி தன் கொள்கைகளைக் கூறி முடித்ததும், அடுத்திருந்த சங்கிராந்தவாதி அவற்றை மறுத்துரைக்க முற்படுகின்றான்:

**நிராகரணம் :**

பதிஞானம் பசுஞானம் பாசஞானம் என்னும் மூவகை ஞானமும் ஓரோரு நிலையில் ஒவ்வொன்றுகச் செயற்படுதல் அன்றி ஒரேநிலையில் மூன்றும் சேர்ந்து செயற்படுதல் இல்லை. செயற்படுமாயின், கண்ணுனது அழகிற் சிறந்த பொருள் ஒன்றினைக் காண்புழி ஞாயிறு திங்கள் விளக்கு என்னும் மூன்றனுள் ஒன்று அதனைக் காட்டக்காண்பதன்றி, அம்மூன்றும் ஒருசேரக் கூடிநின்று காட்டக் காண்பதில்லை. ஆதலின் மூவகை ஞானமும் கூடி நின்றே

ஒருபொருளை அறியவேண்டும் எனக் கூறிய நின் கருத்து அமையாது.

அற்றன்று, மூவகை ஞானங்களும் ஒவ்வொன்றாகத் தனித்தனியே ஒவ்வொரு செய்தியை அறிந்துவரும் எனில், உயிர்களுக்கு அவற்றின் நுகர் பொருள்கள் வேறாய் இருத்தலினால், உயிரறிவு தானாக ஒரு பொருளையும் அறியமாட்டாது. பொறிபுலன்கள் அறிவற்றனவாய் இருத்தலின், பாச ஞானமும் தானாக எப்பொருளையும் அறியவல்லதன்று. பதிஞானம் தொன்மையாகவே பேரறிவினதாக விளங்குதலால், முதல்வனுக்குப் புதிதாக உலகியற் பொருள்களைச் சுட்டியறிய வேண்டுவதில்லை.

கருவிகளெல்லாம் நீங்கி ஆணவ மலத்தினாலே மறைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் உயிரானது எதனையும் அறியாமல் 'எரியாச் செந்தழல்' போலக்கிடக்குமாயின், எஞ்ஞான்றும் தன்னைவிட்டு நீங்காமல் எப்பொழுதும் தன்னோடுபிரிவறக் கலந்து நிற்கும் இறைவனை உயிரானது தெரிந்து கொள்ளாத குற்றம் நேருமாதலின், கட்டுநிலை பற்றிய நின் கொள்கை பொருந்துவதன்று.

மேலும், உயிரானது சிவத்தோடு கூடி ஒப்ப நிற்கும் வீடுபேற்று நிலைக்கு, முன்னே ஒன்றும் அறியாமல் கிடக்கும் பச்சைப் புழுவைத் தன்னுடைய உருவமாக வேண்டும் என்றெடுத்துச் சென்ற குளவியின் இயல்பை, உவமை கூறுதல் அமையாது.

சிவம் உயிர்களுக்கு மந்திரங்களை அறிவுறுத்தித் தன்னுருவமும் இயல்பும் பெறச் செய்வதில்லை. ஆதலின், குளவியையும் புழுவையும் வீடுபேற்று நிலைக்கு உவமை கூறியது குற்றமாம்.

அற்றன்று, குளவி எடுத்துக் கொண்டு சென்ற தொன்றே அறிவுறூஉ (உபதேசம்) ஆகப் பச்சைப் புழு குளவியுருவம் பெற்றதெனின், கருமயிர்க்குட்டிப் புழு (கம்பளிப் பூச்சி) வானது, தனது வாயின் நூலாலே கூடு கட்டி அதற்குள்ளே யிருந்து சில நாட் சென்ற பிறகு சிறகினையுடைய பறவையாகப் பறந்து செல்லக் காண்கின்றோம். ஆயின், அதனைக் குளவியோ அன்றி வேறெதுவோ வந்தெடுத்துச் செல்வதாகவும், மறைமொழிகள் புகல்வதாகவும், எவரும் கூறக் கேட்கிலம். ஆதலின்,

வண்டுக ளாகி மாறும்
மயிர்க்குட்டி, மற்றோர் செந்துப்
பண்டைய உருவந் தானே
வேட்டுவ னாய்ப்பி றக்கும்;
கண்டுகொள்! யோனி எல்லாம்
கன்மத்தால் மாறும் என்றே
கொண்டன சமயம் எல்லாம்!
இச்சொல்நீ கொண்ட தெங்கே!

என்றதற்கேற்ப, பச்சைப்புழு குளவியாகவும், கம்பளிப்புழு வண்ணத்துப் பூச்சியாகவும், தத்தம் கன்மத்துக் கீடாக அச்சு (உடலமைப்பு) மாறுதலை, வீடுபேற்று நிலைக்கு உவமையாகவும் கூறியமை தகுதியன்று.

அன்றியும், பச்சைப்புழு குளவியாக மாறுதல் போல, உயிரும் சிவத்தின் இயல்பினைப் பெறும் எனக் கூறிய நின் கருத்தினைச் சிறிது நுனித்தாராய்வுழி, அவ்வுவமை யோக நிலைக்குப் பொருந்துவதே யன்றி ஞானநிலைக்கு அமைவதன்று. ஏனெனில், உயிரும் சிவமும் கூடி ஒன்றுபட்டு நிற்பதே வீடுபேறு என்று நூல்களெல்லாம் முழங்கவும், நின் கூற்றின்படி உயிரும் சிவமும் வேறுபட்டிருக்கும் என்பது பெறப்படுதலின், அது குற்றமே யாம்.

மேலும், புழுவானது தன் நினைவாற்றலினால், குளவியின் உருவமும் இயல்பும் பெறுதல் போல, உயிரும் தன் தியானத்தால் வீடுபேற்று நிலையில் புதியதோர் உடலைப் பெறுதல் வேண்டும்! அவ்வாறு வீட்டு நிலையிற் புதியதோர் உடலினை எய்திய வழியும் சிவத்தோடு கூடி ஒன்றி நிற்கும்

பேறு பெறமாட்டாமல் வேறுபட நிற்றலே உயிர்க்கு நேருமாயின், அத் தகையதொரு மிக எளிய நிலையை வீடுபேறென்றல், பொருளில் கூற்ருகவே முடியும்.

இம்மட்டோ! குளவியின் உருவமும் இயல்பும் பெற்ற புழுவானது, அங்ஙனம் பெற்றதற்குப் பின்பு முன்னர்ப் புழுவாக இருந்த நாம், இப்பொழுது குளவியின் உருவமும் இயல்பும் எய்திக் குளவிக்குரிய இத் தொழில்களைச் செய்யும் பேறு பெற்ரேம் என நினைந்து பெருமித இன்பம் கொள்ளும் பெற்றியினதன்ருதல்போல, —சிவத்தின் இயல்பினைப் பெற்ற உயிரும், அங்ஙனம் பெற்றதன் பின்பு முன்னர்ச் சிற்றுயிராக இருந்த நாம், இதுபோழ்து சிவத்தின் இயல்பினைப் பெற்றுச் சிவத்திற்குரிய ஐந் தொழிலியற்றுந் திறனையும் முற்றறிவியல்பினையும் பெற்றுள்ளோம் எனவுணர்ந்து பெருமிதங் கொள்ளும் அறிவிலதாதல் வேண்டும்!

அவ்வறிவிலதாய வழி, ''ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம் நல்ல ஆகமம்'' எல்லாம் சொல்லுதலின், அவ்வுயிர் எய்தியது வீடுபேறே யாகாதொழியும்! எனவே, வீட்டு நிலையில் உயிரானது ஓர் உடலோடு கூடியிருக்கும் என்னும் நின் கொள்கை, பலவகையிற் பிழைபாடு உடைத்தாம்.

உயிர்கள் வீட்டு நிலையில் சிவத்தோடு சமநிலையில் ஒப்ப நின்று ஐந்தொழிலியற்றி நிற்கும் என நீ மொழிந்தாய்! நூற்றெரு கோடியின் மேற்பட விரிந்த அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கமெல்லாம், தன்னெடு நோக்க இல் நுழை கதிரின் துன்னணுப் புரையச் சிறியனவாகப் பெரியோனுய சிவத்திஞல் செய்யப்படும் ஐந்தொழில்களை ,அணுவுக்கும் அணுவாயுள்ள சிற்றுயிர்கள் செய்யும் என்பது, சிறிதும் ஏற்புடைத்தாகாது.

நம்பியாரூரர் முதலையுண்ட மதலையை மீட்டும் முன்போல் உயிர் பெற்றெழுந்து வரச் செய்தனரல்லரோ எனின், ''கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே'' என அவர் இறைவனை வேண்டி நின்றதன்றித் தாமே தன்முனைப்பால் அங்ஙனம் செய்யப் புகுந்தாரல்லர்!

இரும்பானது நெருப்போடு கூடி நெருப்பின் உருவத்தைப் பெற்ற போழ்து, அந்நெருப்புச் செய்யும் தொழில்கள் எல்லாவற்றையும் இரும்பு செய்தல் போல, உயிர்கள் இறைவனேடு கூடி இறைமைத் தன்மை பெற்ற போது அவ்விறைவன் செய்யும் தொழில்களைச் செய்தல் கூடும் எனின் — தண்ணீரானது நெருப்போடு சேர்ந்து எத்துணைதான் வெம்மை பெற்றதாயினும் அந்நெருப்பைப்போல் பிற பொருள்களை எரிக்கும் தன்மையுடையதாகாமை சிறுமகாரும்அறிவர்.

நெருப்பைச் சேர்ந்த இரும்பு போல வெந்நீர் சிறு வைக்கோலையும் எரிக்கவல்லதன்று. நெருப்பின் வெம்மை அதனேடு மாறுபட்ட தண்ணீரோடு கூடிய காரணத்தால் பிறபொருள்களைச் சுட்டெரிக்கும் வன்மையினை இழந்து நின்றதெனின் — நெருப்பு எங்கேனும் தான் தனியே தொழிற்பட்டது உண்டாயிற் கூறுக. ''அங்கியும் ஒன்றில் தங்கி நின்றல்லது தன்தொழில் நடத்தாது'' என்றறிக.

நெருப்பு இரும்பைச் சார்ந்து நின்று தன்னுடைய தொழிலைச் செய்து சென்றதன்றி, இரும்புக்கு நெருப்பின் தொழிலைச் செய்யுந் தன்மை, என்றும் யாண்டும் இல்லை.

ஒரு பேயானது ஒருவனைப் பற்றிக் கொண்ட போழ்து, 'அப்பேயின் செயல்கள் எல்லாம் அவனுடைய செயல்களாகக் காணப்படுகின்றன அல்லவோ? ஆதலின் அருளைப் பெற்ற உயிர் ஐந்தொழில்கள் இயற்றும்

எனின்—சிவம் இவ்வுயிராய் இருந்து தன் தொழில்களைச் செய்யுமாயின், இவ்வுயிர் அச்சிவத்தின் தொழிலைச் செய்தற்கு எதனைப் பற்றுக் கோடாகக் கொள்ளும்!

ஐந்தொழில்களைச் செய்தற்கு உயிர்கள் உரியனவாம் எனில்— ஒருவனைப் பேய் பற்றிக் கொண்டிருந்து பின்னர் அவனை அந்தப் பேய் விட்டு நீங்கிய நிலையில் நிகழும் செயல்களெல்லாம் இவனுடைய செயல்களோ? இவனது செயல்களே யாமாயின் அப்பேய் பிடித்துக்கொண்டிருந்த பொழுது இவன் செய்த தொழில்கள் எல்லாம் அப் பேயின் செயல்களே என்றறிதல் வேண்டும்.

அங்ஙனம் அறிந்தால், பேய் கோட்பட்டான் வாயிலாகப் பேய் தன் செயல்களை வெளிப்படுத்திச் செல்லுதல் போலவும், இரும்பைப் பற்றி நின்று நெருப்பானது தன் செயல்களைச் செய்து கழிதல் போலவும், சிவமும் உயிரின்பாற் பதிந்து நின்று தன் செயல்களை நிகழ்த்துதலன்றி, உயிர் சிவத்தின் தொழிலைச் செய்ய மாட்டாது என்பது தெளியப்படும்.

அன்றியும் சிவமோ எஞ்ஞான்றும் அழிவில்லாத பேராற்றற் பெரும் பொருள்; உயிரோ இமைப் பொழுதில் மறைந்தொழியும் எளிய சிறுபொருள்; ஆதலின் இத்தகைய உயிர் சிவத்தின் ஐந்தொழில்களைச் செய்யவல்லதாகும் என்பவர்கள் ''மைத்துனர் பல்கி மருந்திற் றெளியாத பித்தர் என்றே எள்ளப்படுவர்''. எனவே, ''உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக்கு உரியன், உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்து'' என்பதே முடிந்த முடிபாம்.

வீட்டு நிலையில் உயிர்கள் ஐந்தொழில் நிகழ்த்துதலே யன்றி முற்றறிவும் உடையன ஆகும் என்று கூறினாய்! ''மயக்கம துற்றும் மருந்திற்றெளிந்தும் பெயர்த்துணர்ந்து'' வரும் இயல்பிற்றாய உயிர்க்கு, எல்லாவற்றையும் ஒருங்கே அறியுந் தன்மை உளதாகாது.

எல்லாவற்றையும் அறியும் இயல்பினதாகிய திருவருள் உயிரின்பாற் பதிதலால், உயிர் எல்லாவற்றையும் அறிய வல்லதாகும் என நீ கூறின் —உயிர்களைச் சிற்றறிவேயுடையன என்று அறிவு நூல்கள் கூறுதல் பிழையாய் முடியும்.

பேய் கோட்பட்டோர் அப்பேய்க்கு உண்டாகிய எதிர்கால நிகழ்ச்சியறிவையெலாம் தங்கள் பாற்கொண்டு உரையாடக் காண்கின்றனமே எனில் —ஊமையாய்க் குருடனுமாயினான் ஒருவன்பால், ஊமையும் குருடும் அல்லாத பேய் போந்து பொருந்திய வழி, அவன் நாவால் ஒன்றைச் சொல்லியதும், கண்ணால் ஒன்றைக் கண்டதும் இல்லை.

ஆதலின், பேயின் தன்மை யெல்லாம் பேய் கோட்பட்டானுக்கு நிகழும் என்றல் ஒல்லாது. ''ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடலில் நாழி முகவாது நானாழி'' யாதல் போல, திருவருட் பேரறிவோடு கூடி நின்றதேயாயினும், உயிருக்குள்ள சிற்றறிவே அதற்கு நிகழ்வதன்றி, இறைவனுக்குரிய முற்றறிவு அதன்கண் நிகழ்தல் சிறிதும் இயலாது.

ஒளி என்னும் பொதுமையால் ஒத்து ஒன்றுமாயினும், பிறிதொரு துணையை இன்றியமையாதாய் அதுவது வாய் முந்திக்காணும் கண்ணொளிக்கும், அதுபோலத் தனக்கொரு துணை வேண்டாது பிறவற்றிற்குத் துணையாய் எல்லாவற்றையும் ஒருங்கே விளக்கி நிற்கும் ஞாயிற்றினொளிக்கும், தம்முள் வேற்றுமை பெரிதாயினாற்போல, வீட்டு நிலையினும் உயிரின் சிற்றறிவிற்கும் சிவத்தின் முற்றறிவிற்கும் உள்ள இடையீடு மிகப் பெரியதாகும் என்க.

புகலரும் அசத்தர் தம்பால்
பொருந்திய அலகையேபோல்,
சகலமும் நிகழ வேண்டும்;
தலைவன்ஐந் தொழிலுந் தானே
இகலற இயற்றல் வேண்டும்
என்றது, நன்றி இன்றே.

இன்றுநோக் குரைந டக்கும்
இயல்பிலோற்கு, இனைய வாய்ந்து
நின்றதோர் அலகை நேர்ந்தால்
நிகழ்வதென்? அதுபோல் உள்ளத்
தொன்றிய உணர்வு தம்பால்
உள்ளது நிகழ்த்தும்; ஈசன்
தன்தொழில் நடாத்தும் மேனி
தனக்கெனக் கொண்டு தானே.

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுள்களும், அவற்றின் பொருளும் ஈண்டு அறிதற்குரியன.

வீடுபேற்றில் உயிரும் சிவமும் ஒன்ருய் விடும் எனில், இரண்டு பொருள்களுள் ஒன்று அழிந்துபோம், அழியாதெனில், இரண்டு பொருள்களும் ஒன்ருதலில்லை.

இனி, அங்ஙனம் ஒன்ருதலாகிய பரமுத்தி எய்தாமல் உடலோடு கூடிச் சீவன் முத்தனுய நிற்கும் எனின், ''தனக்குவமை இல்லாத'' சிவத்திற்குச் சீவன் முத்தனுகிய அவ்வுயிர் சமம் எனப்படும் நிலை எய்துமாகலின், அஃது அமையாது.

வீடுபேறு எய்தும் உயிர், முன்னரே வீடுபேறு எய்தியுள்ள நற்றவர் கூட்டத்தின்கண் சென்று சேரும் எனின்—அது சிவப்பேறடைவு ஆகிய சாயுச்சிய முத்தி யாகாமல் சிவனுலகிற் சேர்தல் என்னும் சாலோக முத்தியே யாகும்.

மேலும், அவ்வுயிர் நற்றவர் கூட்டத்தின்கண் சென்று சேர்தற்கு ஓர் உடல் இன்றியமையாதுவேண்டப்படும். உயிர் உடலோடு கூடியிருக்குமாயின், அங்ஙனம் இருக்கும் மட்டும் அது வீடு பேறு எய்தியதெனப் படாது. இறைவன் திருவருளைப் பெற்றவர்கள் உடலோடு கூடியிருந்தார்களாயின், அவர்கட்கு உடற்ருெடர்பும் பற்றும் இலவாய், அவர்கள் தம் 'உடம்பும் மிகை' எனவே கருதியிருப்பர்.

அற்றன்று, வீடுபேற்றில் உயிர்கள் அசுத்த மாயா சரீரத்தினைப் பொருந்தாமல், சுத்தமாயா சரீரமே பெற்று நிற்பர் எனின் — அறியாது கூறினுய்! மும்மலங்களும்நீங்கி வீடுபேறு பெற்ற நிலையில் ஒருடல் தோன்றும் என்ற நின் கூற்று, தலைமுறை பலவாக உரலில் நெற்குற்றி வரும் ஓர் உலக்கையில் நுனியில், கவடும் கோடும் தளிரும் மலரும் தோன்றிற்று என்ருற் போன்ற பொருந்தாக் கூற்றே யாம்.

அற்றன்று, வீடுபேறு பெற்ற உயிர்கள் தம் விருப்பத்தினுல் தாமாகவே ஒருடலைத் தோற்றுவித்து அதன்கண் பெரிதும் விருப்புற்று வாழும் எனின் —நன்று மொழிந்தனை? ஒருவனுக்கு ஒருடல் தோன்றுமெனின், அது கன்மத்தாலன்றித் தோன்ருது; அக்கன்மத்தாலும் ஆணவமலங் கிடந்தாலன்றி உண்டாகாது. எனவே, நீ கூறும் வீட்டு நிலையில் ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்றனுள் ஒன்றேனும் நினக்குக் கழிந்த தில்லையாம்.

ஆதலின் நினது வீட்டியல்பினைச் சிவனுலகு சேர்தல் சிவனுருப் பெறுதல் சிவனருகிருத்தல் எனப் பொருள்படும் சாலோக சாமீப சாரூபம் என்னும் பத முத்திகளாகவே அறிஞர்கள் கொள்ளுகிற்பர்.

(தொடரும்)

— ஆசிரியர்.

# விடை தெரியுமா?

1. சிவபிரானுக்குரிய திருமுகங்கள் எத்தனை? அவற்றின் பெயர்களையும், அவை நிகழ்த்தும் செயல்களையும் குறிப்பிடுக.

2. சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்'' எனத் தொடங்கும் தமது திருப்பாடலில் குற்றம் செய்தவர்களாக யார் யாரைக் குறிப்பிட்டுள்ளார்? அவர்கள் செய்த குற்றங்களாகக் கருதத் தக்கன யாவை?

3. நாயன்மார்களுள் குருஅருளால் முத்தி அடைந்தவர்கள் எத்தனை பேர்?

4. சிவலிங்க வழிபாடு செய்து, அதனுல் முத்தியடைந்த நாயன்மார்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

5. சிவனடியார்களை வழிபட்டு முத்தி பெற்ற நாயன்மார்கள் யார் யார் என்று கூறுக.

6. 'சரவணபவன்' என்னும் திருப்பெயர்க்குரிய பொருள் யாது?

7. ''பள்ளச் செறுவில் கயலுகளப்
பழனக் கழனி அதனுள்போய்
புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடும்
புள்ளம் பூதங் குடிதானே''
எனவரும் பாசுரத்திற்குப் பட்டர் பணித்த விளக்கம் யாது?

8. 'தென்னகர் நன்னகர் மாநகர் நீள்நகர் பெருநகர்' என்பன சிறப்பாக முறையே எந்த எந்தத் திவ்விய தேசங்களைக் குறிக்கும்.

9. வைணவ மரபில், அரையர்கள் என்பவர்கள் யார்? அவர்களைப் பற்றிய சிறு குறிப்புத் தருக.

10. ''சர்வேசுவரனுக்கும் சேதனு சேதனங்களுக்கும் உள்ள சரீராத்ம பாவத்தை விளக்கும் விசிட்டாத்வைத சித்தாந்தத்தை'' முதன் முதலாக விளங்கக் காட்டிக் கொடுத்தருளிய திருவாய்மொழிப் பாசுரம் எது?

—ஆசிரியர்.

(விடை: மறுபுறம் காண்க.)

# விடை விளக்கம்

*(1)* சிவபிரானுக்குரிய திருமுகங்கள் ஐந்து ஆகும். அவைகள் முறையே,

*(1)* சத்தியோசாதம்
*(2)* வாமதேவம்
*(3)* அகோரம்
*(4)* புருடம்
*(5)* ஈசானம்

என்பனவாகும். இவற்றுள் சத்தியோசாதம் எல்லா உலகங்களையும் படைக்கின்றது. வாமதேவம் எல்லா உலகத்து உயிர்களையும் காத்தற்றொழில் புரிகின்றது. பிறந்தும் இறந்தும் வருந்துகின்ற உயிர்களின் இளைப்பைப் போக்குவதற்காக அகோரம் என்னும் முகம் எல்லா உலகங்களையும் ஒடுக்கும் தொழில் புரிகின்றது. புருடம் என்பது உயிர்களின் கன்ம நுகர்ச்சியின் பொருட்டு மறைத்தற்றொழில் புரிகின்றது. ஈசானம் என்பது எல்லா உயிர்களுக்கும் முத்தியாகிய வீடு பேற்றை அளிக்கின்றது.

*சத்தியோ சாதம் எல்லாச் சகத்தையும் படைக்கும்; வாமம்*
*அத்தரா தலங்கள் காக்கும்; அகோரமே அழிக்கும் என்க;*
*சித்தியார் புருடம் திரோதம் செய்யும்; ஈசானம் அன்பால்*
*முத்திவீடு அருளும்; ஐந்தின் மூலமாய்க் குடிலை நிற்கும்.*

—பாம்பன் சுவாமிகள், செக்கர்வேள் செம்மாப்பு, *88.*

*(2)* சுந்தரமூர்த்தி சுவாமிகள்—ஞானசம்பந்தர், நாவுக்கரசர், திருநாளைப் போவார் (நந்தனுர்), மூர்க்க நாயனுர், சாக்கிய நாயனுர், சிலந்திப் பூச்சி (கோச்செங்கட் சோழர்) கண்ணப்பர், கணம்புல்லர் என்பவர்கள், குற்றங்களைச் செய்தாலுங்கூட இறைவன் குணமாகக் கொண்டு அருள் புரிந்தான் என்று, தமது தேவாரத்திற் பாடியுள்ளார்.

*நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன் நாவினுக் கரையன் நாளைப் போவானும்*
*கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி கண்ணப் பன்கணம் புல்லன்என்றிவர்கள்*
*குற்றம் செயினும் குணமெனக் கருதும் கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்*
*பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும் பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே*

*(அ)* திருஞானசம்பந்தர் நமச்சிவாயப் பதிகம்பாடித் திருநல்லூர்ப் பெருமணம் என்னும் தலத்தில் நிகழ்ந்த, தமது திருமணத்திற்கு வந்திருந்த பலரையும் ஒருசேர வீடுபேறு அடையும்படி சிவசோதியில் கலக்கச் செய்தார். இறைவனைப் பற்றிய பாடல்களில், திருக்கடைக் காப்பில் தம்மை மிகவும் புகழ்ந்து பெருமிதமாகப் பாடிக் குறிப்பிட்டுக் கொண்டார்.

*(ஆ)* திருநாவுக்கரசர், தமது இளமையில் சைவ சமயத்தை விடுத்துச் சமண சமயம் சார்ந்து, இறைவனை இகழ்ந்தார்.

*(இ)* திருநாளைப் போவார், தம் மரபிற்கு உரியதல்லாத தில்லைச் சிதம்பரம் சென்று தரிசிக்க விரும்பினுர்.

(ஈ) மூர்க்க நாயனர், தீய தொழிலாகிய சூதாட்டத்தைமேற்கொண்டார்; அவ்வாட்டத்தில் பொய் பேசி அழிவழக்கு ஆடியவர்களைச் சுரிகையால் குத்திக் கொல்ல முற்பட்டார்.

(உ) சாக்கிய நாயனர், சிவலிங்கத்தின் மீது நாள்தோறும் மறவாது தவருமல் கல்லெறிந்து வந்தார்.

(ஊ) சிலந்தி, திருவானைக்காவில் எச்சிலாகிய வாயின் நூலால் விதானம் அமைத்தது; யானையின்பால் பகைமை கொண்டது; சோழ மன்னனுகப் பிறந்த பொழுதும் பழம்பகை யுணர்ச்சியை விடாமல் இருந்தது.

(எ) கண்ணப்பர், இறைவனின் திருமுடிப்பூக்களைச் செருப்புக் காலால் தள்ளினர்; வாய் நீரை இறைவன் மீது உமிழ்ந்தார்; தலையிற் செருகிய மலர்களைச் சூட்டினர்; புலாலை நிவேதனமாகப் படைத்தார்.

(ஏ) கணம்புல்லர், இறைவனின் திருமுன்பு தலைமயிரினைத் திருவிளக்கில் மாட்டி எரித்தார்.

(3) சைவ சமய நாயன்மார்களாகிய அறுபத்து மூவருள், குரு அருளால் முத்தி அடைந்தவர்கள் பதினெருவர் ஆவர்.

திருஞான சம்பந்தர் திருநாவுக் கரையர்
திருமூலர் நெடுமாறர் மங்கையர்க் கரசி
கரைசேரும் குலச்சிறையார் யாழ்ப்பாணர் குறும்பர்
கணநாதர் அப்பூதி சோமாசி மாறர்
உரைசேரும் இவர்கள்பதி னெருவர், குருவருளால்
உயர்முத்தி அடைந்தவர்கள்....

(4) சைவ நாயன்மார்கள் ஆகிய அறுபத்து மூவருள் சிவலிங்க வழிபாடு செய்து, முத்தி யடைந்த சைவ நாயன்மார்கள் முப்பது பேர்கள் ஆவர்.

''எறிபத்தர் கலயர்
முருகனர் கண்ணப்பர் ஆனயர் தாயர்
மூர்த்தியார் சண்டேசர் திருநாளைப் போவார்.

சேரனர் சாக்கியனர் கூற்றுவனர் தண்டி
சிறப்புலியார் பசுபதியார் கலிக்காமர் கலியர்
காரியார் அதிபத்தர் நீலநக்கர் பூசல்
கணம்புல்லர் கோட்புலியார் நமிநந்தி யடிகள்
சீருடைய கழற்சிங்கர் வாயிலார் தூய
செருத்துணையார் புகழ்த்துணையார் காடவர் ஐயடிகள்
மூரிநெடு வேற்செங்கட் சோழனர் ஆக
முப்பதுபேர் சிவலிங்கத்தால் முத்தி யடைந்தார்.

(5) சிவனடியார்களையே சிவமாக வழிபட்டு முத்தி அடைந்த நாயன்மார்கள் பத்தொன்பது பேர்கள் ஆவர்.

திருநீல கண்டனூர் இயற்பகையார் மூர்க்கர்
சிறுத்தொண்டர் திருக்குறிப்புத் தொண்டர்விறல் மிண்டர்
அருள்சேரும் இடங்கழியார் முனையடுவார் சத்தி
அமர்நீதி மெய்ப்பொருளார் ஏனாதி நாதர்
கரைசேரும் புகழ்ச்சோழர் கஞ்சாறர் மாறர்
காரைக்கால் அம்மை நரசிங்கர்கலிக் காமர்
வருநேச ராகஒரு பத்தொன்ப தடியார்
மணிவேடத் தாரைவழி பட்டரனை அடைந்தோர்.

(6) முருகனின் திருப் பெயர்களுள் சரவணபவன் என்பதும் மிகவும் சிறப்புடையது. அது சரம், வனம், பவன் என்னும் மூன்று சொற்களைக் கொண்டது. சரம்—நாணற்புல், வனம்—காடு, பொய்கை. பவன்—தோன்றியவன். நாணற் புற்கள் செறிந்து சூழ்ந்த பொய்கையில் தோன்றிய காரணம் பற்றி முருகனுக்குச் சரவணபவன் என்பது பெயராயிற்று. நிலைமொழியில் ரகரம் வந்ததனால், வருமொழியின் னகரம் ணகரம் ஆக, வடமொழி இலக்கண விதிப்படி மாறி வந்தது.

மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினால் அளக்கொ ணாமல்
நிறைவுடன் யாண்டும் ஆகி
நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி
அருளொடு சரவ ணத்தில்
வெறிகமழ் கமலப் போதில்
வீற்றிருந்த தருளி னானே.

என்பது கந்தபுராணம். சிவபிரானின் ஐந்து முகங்களோடு அதோமுகமும் சேர்ந்து முருகனுக்கு ஆறுமுகங்களாயினாற் போல, சிவபிரானுக்குரிய திருவைந் தெழுத்தே பிரவணவத்துடன் சேர்ந்து முருகனுக்குரிய 'சரவணபவ' என்னும் தாரகப் பிரமம் ஆகிய ஆறெழுத்து மந்திரம் ஆயிற்று.

நன்முகம் இருமூன் றுண்டால்
நமக்கு, அவை தாமே கந்தன்
தன்முகம் ஆகி யுற்ற;
தாரகப் பிரமம் ஆகி
முன்மொழி கின்ற நந்தம்
மூவிரண் டெழுத்தும் ஒன்றாய்,
உன்மகன் நாமத்து ஓர்ஆறு
எழுத்தென உற்ற அன்றே.

—கந்தபுராணம்.

எனவே 'சரவணபவன்' என்னும் சிறப்பு மந்திரத்துக் குரியவன் சரவணபவன் எனப்படுவன்.

ஸ, ச — மங்களம்
ர — ஒளி, கொடை
வ — சாத்துவிகம்
ந, ன — போர், வீரம்
பவன் — உதித்தவன்

எனப் பொருள்கொண்டு, மங்களம் ஒளி கொடை சாத்துவிகம் வீரம் என்னும் சிறந்த இயல்புகளோடு தோன்றியருளியவன் எனவும் ஆன்றோர் பொருள் கூறுவர்.

சரவணன் என்பது சிவபிரானையும் திருமாலையும் குறிக்கும் பெயர் என்றும், முருகனுக்குச் சரவணபவன் எனப்பெயர் வழங்குதலால், முருகன்பால் அவ்விருவர் தம் இயல்புகளும் பொருந்தி நிற்கின்றன என்றும், திருச்செந்தூர்ப் புராணம் கூறுகின்றது.

(4)
கள்ளக் குறளாய் மாவலியை வஞ்சித் துலகம் கைப்படுத்துப்
பொள்ளைக் கரத்த போதகத்தின் துன்பம் தவிர்த்த புனிதன்இடம்,
பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக் கழனி அதனுள்போய்ப்
புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடும் புள்ளம் பூதங் குடிதானே.

—பெரிய திருமொழி, 5:2.

என்னும் பாசுரத்தைப் பற்றி ஆலவாய் உடையான் என்பானொரு தமிழன், பட்டரிடம் வந்து ஒரு கேள்வி கேட்டான். ''பள்ளச் செறுவில் கயலுகள என்ற பொழுதே, அவ்விடத்து வயல்களில் மீன்கள் அளவற்றுக் கிடத்தல் தெளிவு. அங்ஙனமாகவும் இரை தேடும் என்றது எவ்வாறு பொருந்தும்? ஏராளமாக மீன்கள் இருக்கும்போது தேடவேண்டிய இன்றியமையாமை யில்லையே" என்பது வினா. அதற்குப் பட்டர் பின்வருமாறு விடை கூறினார்.

'பிள்ளாய்! நீ கற்றறிந்தவனாகத் தோன்றுகின்றாய். ஆயினும், சொல்லமைப்பின் போக்கை அறிந்துணரும் திறம் பெற்றிலை. 'இரை தேடும்' என்று வாளா கூறாமல், 'பிள்ளைக்கு இரை தேடும்' என்றன்றோ ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். புள்ளம் பூதங்குடிக் கழனியில் உள்ள மீன்கள் நிலவள நீர்வளங்களால் தூணும் துலாமும் போலே தடித்திருக்கும். அவை பறவைக் குஞ்சுகளின் வாய்க்குப் பொருந்த மாட்டா. ஆதலின், உரிய சிறுசிறு மீன்களைத் தேடிப்பிடிக்க வேண்டுவது தாய்ப் பறவைக்குக் கடமையாயிற்று. அதனாலேயே 'இரை எடுக்கும்' என்னாது, 'தேடும்' என்று ஆழ்வார் பணித்தருளினார். இளம் மாணவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய செய்திகளையே, பெரு நூல்களாகிய கலைக் கடலினின்று ஞானாசிரியர்கள் தேடித் தேர்ந்தெடுத்து அறிவுறுத்தும் திறன், இப்பாடற் பகுதியின் உள்ளுறை பொருளாகும்.

(8) (அ) தென்னகர் என்பது மலை நாட்டுத் திருப்பதியில் ஒன்றான திருவல்லவாழ் என்னும் தலத்தை உணர்த்தும். 'திருவல்லவாழ்ச் சேமங்கொள் தென்னகர்' என்பது திருவாய்மொழிப் பாசுரம்.

(ஆ) நன்னகர் என்பது ஒப்பிலியப்பன் சந்நிதி என்னும் திருவிண்ணகர்ப் பதியைக் குறிக்கும். 'தெண்டிரைப் புனல் சூழ் திருவிண்ணகர் நன்னகரே' என்பது நம்மாழ்வார் அருளிச்செயல்.

(இ) மாநகர் என்பது தென்திருப்பேரை என்னும் தலத்தைக் குறிக்கும். 'ஏர்வள ஒண்கழனிப் பழனத் தென்திருப்பேரையில் மாநகரே' என்பது பாசுரம்.

(ஈ) நீள் நகர் என்பது மலைநாட்டுத் திருப்பதியாகிய திருவாறன்விளை என்னும் தலத்தை உணர்த்தும். 'திருவாறன்விளை என்னும் நீள்நகரம் அதுவே' என்பது திருவாய்மொழி.

(உ) பெருநகர் என்பது, சோழ நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான அப்பக் குடத்தான் சந்நிதிக்குப் பெயர். 'பெருவரை மதில்கள் சூழ்ந்த பெருநகர்' என்பது பாடல்.

இவ்வாறு, இத்தலங்களை முறையே தென்னகர் நன்னகர் மாநகர் நீள் நகர் என்று ஆசார்ய ஹ்ருதயம் என்னும் பெருநூல் குறிப்பிடுகின்றது.

*(9)* திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களை இசையுடன் பாடி, அதன் பொருளை அபிநயத்துடன் ஆடிக் காட்டி விளக்க வல்ல பெரியோர்களுக்கு, அரையர்கள் என்பது பெயர். திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களின் பொருள் விளங்கும்படி, அரையர்கள் அபிநயம் பிடித்து ஆடிக் காட்டியருளிய திறம் பற்றிய குறிப்புக்கள் பல, வியாக்கியானங்களிலே காணப்படுகின்றன.

மெச்சூது சங்கம் இடத்தான் நல் வேய்ஊதிப்
பொய்ச் சூதில் தோற்ற பொறையுடை மன்னர்க்காய்ப்
பத்தூர் பெறாது அன்று பாரதம் கைசெய்த
அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்
அம்மனே அப்பூச்சி காட்டுகின்றான்.

என்னும் பெரியாழ்வார் திருமொழிப் பாசுரத்திற்கு, கண்ணை இறுத்துவது முகத்தைத் தலைமயிரால் மறைப்பது முதலிய இளஞ்சிறு குறும்புகளைக் கண்ணபிரான் செய்வதாக, நம்பெருமாள் சந்நிதியில் 'உய்ந்த பிள்ளை' என்னும் அரையர் அபிநயித்துக் காட்டினார். உடையவரின் பின்புறம் எழுந்தருளியிருந்த எம்பார், அந்த அபிநய முறையைக் கண்டு தமது திருவுள்ளத்திற் குறையுற்று, அதனைத் திருத்தும் நோக்கத்துடன், தம் திருக்கைகளைத் திருத்தோள்களோடு சேர்த்துக் காட்டி, பாடலின் பொருள் நுட்பத்தைக் குறிப்பினால் உணர்த்தினர். அக்குறிப்பின் நுட்பம் உணர்ந்த அரையரும், உடனே முன்னே தாம் அபிநயித்த முறையை விட்டு, பெருமாள் தம் திருத்தோள்களில் சங்கு சக்கரங்கள் தரித்துக் கொண்டிருப்பதை அபிநயித்துக் காட்டினார். பாண்டவ தூதனாகத் தன் ஸௌலப்பியத்தை வெளியிட்டு 'நம்மிலே ஒருவன்' என்று இவ்வுலகத்தவர் கொள்ளும்படி இருப்பவனாகிய கண்ணபிரான், சில சமயங்களில் அவர்கள் அஞ்சும்படி தனது இறைமைத் தன்மைக்கு அடையாளங்களான சங்கு சக்கரம் முதலியவற்றையும் காட்டுகின்றான் என்னும் பொருள் நுட்பம், எம்பார் திருத்திக் காட்டிய அபிநயத்தால் புலப்படுத்தப் பெற்றது. அரையர் முதலிற் பொதுவாகவும், பின்னர்ச் சிறப்பாகவும் அபிநயித்துக் காட்டிய நுட்பம் கண்டு மகிழ்ந்த இராமாநுஜர், இது எம்பாருடைய திருத்தமாகவே இருத்தல் வேண்டும் என்று கருதி, உடனே திரும்பிப் பார்த்து, ''எம்பாரே! நீர் இருந்தீரோ?'' என்று திருவாய் மலர்ந்தருளினாராம்.

*(10)* ''சர்வேசுவரனுக்கும் சேதனா சேதனங்களுக்கும் உள்ள சரீராத்ம பாவத்தை விளக்கும் விசிட்டாத்வைத சித்தாந்தத்தினை'' முதன்முதலாக விளங்கக் காட்டி உணர்த்தி யருளியது,

திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவது மாய், அவை யவைதொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்து எங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே.

என நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிப் பாசுரமே யாகும். தெளியாத மறைநிலங்களைத் தெளிய வைக்கும் அத் திருவாய்மொழிப் பாசுரத்தை அடிப்படையும் ஆதாரமுமாகக் கொண்டே, இராமாநுஜர் விசிட்டாத்வைத சித்தாந்தத்தை அறுதியிட்டு உறுதி செய்து பரப்பி யருளினார்.

—ஆசிரியர்.

# நித்தமும் நிறைவும்

(பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் (தத்புருஷ தேசிகர்), தேவகோட்டை)

கடவுளும் உயிர்களும் ''சித்துப் பொருள்கள்'' என்ற வகையில் ஒற்றுமை உடையன. ஆனால் உயிர்களுக்கில்லாத பல சிறப்பியல்புகளைக் கடவுள் உடையவராயிருக்கிறார். கடவுளிடத்திலில்லாத பல தாழ்வுகள் உயிர்களிடத்தில் உள்ளன. பொருள் வகையால் ஒற்றுமையை உடைய கடவுளும் உயிர்களும் இங்ஙனம் தன்மை வகையால் வேற்றுமைப் பட்டிருப்பதற்கு மலமே காரணமாயிருக்கின்றது. கடவுள் இயல்பாகவே மலநீக்கம் பெற்று விளங்குபவர். உயிர்கள் அநாதியாகவே பாசத் தொடர்புடையவை.

பரம் பொருளாகிய சிவபெருமான் தன் வயம், தூயவுடம்பு, இயற்கையுணர்வு, முற்றுணர்வு, பாசநீக்கம், பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம் ஆகிய எட்டுக் குணங்களையுடையவர் என்று சிவாகமங்கள் கூறும். ''எட்டுவான் குணத் தீசன்எம் மான்றனை'' என்பது அப்பரடிகள் திருவாக்கு, இறைவனது குணங்களுக்கு எதிரான எட்டுக் குணங்கள் உயிர்களிடத்தில் உள்ளன. அவற்றைத் தன் வயமின்மை, அசுத்தவுடம்பு, செயற்கையுணர்வு, குறையுணர்வு, பாசத் தொடர்பு, அருளின்மை, நிலையிலாற்றல், வரம்பிலின்னல் என்றுசொல்லலாம்.

கடவுள் என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; இயற்கை யறிவினர் எல்லாம் வல்லவர்; அளவிடப் படாத ஆனந்தம் உடையவர்; தம்வயமுடையவர்; உயர்வொப்பில்லாதவர் என்று யாழ்ப்பாணத்து நல்லூர் சீலத்திரு ஆறுமுக நாவலர்வர்கள், தமது பால பாடத்தில் பள்ளிச் சிறுவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். இன்னும் அவர்கள் உயிர்களை நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத் தடையுடையவைகளாய், சரீரம்தோறும் வெவ்வேருய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அநுபவிப்பவைகளாய், சிற்றறிவும் சிறு தொழிலும் உடையவைகளாய், தங்களுக்குஒரு தலைவனை உடையவைகளாய் இருப்பவை என்று அந்நூலிலேயே உணர்த்தியிருக்கின்றார்கள்.

என்றும் உள்ளவையாயும், எங்கும் நிறைந்தவையாயும் இருக்கின்ற உயிர்கள், தன்வயம் ஒரு சிறிதுமின்றி இருப்பதால் அவற்றிற்கு வேண்டிய உதவிகளை என்றும் உள்ள—எங்கும் நிறைந்த—தன்வயம் உடைய கடவுளே ஒப்பற்ற தமது பேரருளால் எப்போதும் செய்து கொண்டிருக்கிறார். கடவுளுக்குள்ள நித்தமும், உயிர்களுக்குள்ள நித்தமும் போலல்லாது, கடவுள் நிறைவு அவர் ஒருவரேயாயிருந்து நிறையும் நிறைவாகவும், உயிர்கள் நிறைவு அவை எண்ணற்றனவாகவும் இருந்து நிறையும் நிறைவாகவும் உள்ளன என்பது அறியத் தக்கதாகும்.

உயிர்களுக்கு அருள் செய்ய முற்படுகின்ற சொரூப சிவம், இலயம் போகம் அதிகாரம் என்னும் மூன்று நிலைகளைமேற்கொள்ளும். நாதம், விந்து, சாதாக்கியம், ஈச்சுரம், சுத்த வித்தை ஆகிய சிவதத்துவங்களனைத்தையும் நிலைக்களங்களாகக்கொண்டு, இலய போக அதிகாரங்களை அது நிகழ்த்தும். சொரூப சிவம், ஞான சத்தியாய் மட்டும் நின்று தொழிற்படும்போது நாதமெனவும், கிரியா சத்தியாய் மட்டும் நின்று தொழிற்படும்போது விந்துவெனவும், ஞானக்கிரியைகள் ஒத்து நின்று தொழிற்படும்போது சாதாக்கியமெனவும் ஞானம் குறைந்து கிரியை யேறித் தொழிற்படும்போது ஈச்சுரமெனவும், கிரியை குறைந்து ஞானமேறித் தொழிற்படும்போது சுத்த வித்தையெனவும் சொல்லுகின்ற நிலைக்களங்களை உடையதாய் இருக்கும்.

சிவ சத்திகளிரண்டும் எல்லாம் ஒடுங்குதற்கு இடமாய் நிற்றலால் இலயமெனவும், சதாசிவம் ஏனைய மூர்த்தங்களைத் தோற்றுவித்தலால் போகமெனவும், ஈச்சுரத்தில் இருபத்தைந்து முதலிய மூர்த்தங்களும் சுத்த வித்தையில் பிரம விட்டுணுக்களும் தோன்றித் தொழில் செய்வ

தால் அவ்வையிரண்டும் அதிகாரமெனவும் சொல்லப்பெறும். இதனை

''ஞானமே யான போது
சிவன்ஞெழில் ஞானமொக்கின்
ஈனமில் சதாசி வன்பே
ரீசனுந் தொழில தேறின்
ஊனமேற் கிரியை வித்தை
யுருத்திர னிலயபோகம்
ஆனபே ரதிகா ரத்தோ
டதிகர ணத்த னுமே'

என்னும் சிவஞான சித்தித் திருவிருத்தத்தால் அறியலாம்.

உலகுயிர்களனைத்தையும் கடந்து நிற்கின்ற சொரூபசிவம், உயிர்களிடம் வைத்த பெருங் கருணையால் தடத்த சிவமாகி நாதவிந்துக்களில் தங்கியிருந்து இலயத்தையும், சாதாக்கியத்தில் தங்கியிருந்து போகத்தையும், ஈச்சுரம் சுத்த வித்தைகளில் தங்கியிருந்து அதிகாரத்தையும் மேற்கொண்டு அவ்வுயிர்களுக்கு உய்தியைவழங்குகின்றானென்னும் பேருண்மையைத் திருமூல தேவ நாயனார் திருமந்திரமாலைக் கடவுள் வாழ்த்துப் பதினைந்தாவது செய்யுளில் புலப்பட வைத்துள்ளார். அத்திருப்பாடல்

''ஆதியு மாயர னுயுட லுள்நின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தானருட்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே''

என்பதாகும்.

பரசிவம் சோதி வடிவினது. பல கோடி சூரியர்கள் ஒன்று கூடினுல் உண்டாகும் பேரொளியைவிடச் சிவபரஞ்சுடரின் பேரொளி பெரியது. ஒளி, ஒளியளவில் இருப்பது. பரசிவ ஒளி, அருள்மயமாக விளங்குவது. ''அலகில் சோதியன்'' என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு. இவ்வொளி யுருவத்தை ''அகண்டாகார சச்சிதானந்த சோதி சொரூபம்'' என்று ஞான நூல்கள் கூறும்.

ஒளியுடன் பிரிப்பின்றி இருப்பது, சூடு. பரசிவத்துடன் பிரிப்பின்றி யிருப்பது, அருட்சத்தி. அதனுலேயே சிவபரம் பொருளை ''அருட்சோதியுமாய்'' என்று ஆசிரியர் இத்திருப்பாடலிற் குறித்தார். பேரொளிப் பிழம்பாகிய சொரூபசிவம் அருளுடன் பிரிப்பின்றி யிருப்பதனுலேயே தடத்த சிவமாக வெளிப்பட்டு வந்து உயிர்களுக்கு உய்தியை வழங்குகின்றது.

உலகியல் பற்றிய நீதிகள் சுருக்கமும் பெருக்கமும் உடையவை. திருவருள் பற்றிய நீதி அங்ஙனமின்றி ஒரே படித்தானது. மக்கள் வகுத்துக் கொள்ளுகின்ற உலகியல் நீதி, கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப அவர்களது சிற்றறிவு கொண்டு நியமிக்கப் பெறுவதாகலின் அதில் சுருக்கமும் பெருக்கமும் உண்டாக இடமிருக்கும். திருவருள் நீதி கால தேச வர்த்தமானங்களைக் கடந்து வாலறிவினுல் நியமனம் பெறுவதாதலின், அதில் சுருக்கங்கள் பெருக்கங்கள் ஏற்பட இடமிராது.

உயிரறிவு திருவருளறிவால் வியாபிக்கப் பெறுகிற பொழுது, அதுவே மலர்தலும், கூம்பலும் இல்லாத சிறப்பையடையு மென்று திருவள்ளுவர் பெருமான் கூறுகின்றார். எனவே தனித்த அருளறிவால் நியமனம் பெற்ற நீதி, என்றும் சுருங்குதல் பெருகுதலின்றி இருக்கும் என்பது உணரத் தக்கதாகும். இதனை ''சுருங் காததோர் தன்மையுள் நீதியுமாய்'' என்று ஆசிரியர் கூறியருளினர்.

உயிர்களின் நித்தம், ஆணவமலத்துடன் பிரிப்பின்றி யிருந்த கேவலம், மும்மலங்களுடனும் கூடியிருக்கிற சகலம், சிவத்துடன் பிரிப்பின்றி யிருக்கும் சுத்தம் ஆகிய மூன்று நிலைகளில் அமைவது. சொரூப சிவத்தின் நித்தமோ, எந்த விதமான நிலைமாற்றங்களுமின்றி ஒரே தன்மையில் அமைந்தது. அதனுலேயே ''நித்தமாகி நின்றான்'' என ஆசிரியர் அருளிச் செய்தார். ஒரே நிலையில் நிற்கும் நிலைபேறு இறைவன் ஒருவனுக்கே உரியதாகும்.

இவ்வாறு நிலை பெற்றிருக்கின்ற பரசிவம் அநாதியேயாயினும் நம் பொருட்டாக இலய சிவமாகிய ஆதியாக வெளிவருகின்றது. அப்போது அது அருவ வடிவம் கொண்டிருக்கும். ''இலயம்'' என்பது ஒடுக்கம். ''எது எங்கே ஒடுங்கிற்று; அது அங்கே தோன்றும்'' என்பது நியாயம். ''ஒடுங்கி உளதாம்'', ''அந்தம் ஆதி'' என்னும் சிவஞான போதப் பகுதிகளானும் ''ஒடுங்குதற்கு நிலைக்களமான கடவுளினின்றும் உளதாம்; சங்காரத்தைச் செய்யும் கடவுளே

முதற் கடவுள்'' என்னும் அவற்றின் உரைப் பகுதிகளானும் இதனை உணரலாம். முதலாவதான இந்த இலயசிவத்தை ஆசிரியர் ''ஆதியுமாய்'' என்று உணர்த்தினர்.

அந்தப் பரசிவம் இரண்டாவதாகப் போக சிவமாய் வெளிப்பட்டு வருவதை ''அரனாய்'' என்று குறித்தார். போக சிவம், சிவசத்திக் கூட்டுறவுக் குறியாகிய சிவலிங்கத் திருமேனி தாங்கி, அருவுருவ வடிவத்துடன் விளங்கும். இங்கே சிவத்தை அரனாகவும் சத்தியை அரியாகவும் குறிப்பர். இதனையே ''அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே'' என்று அப்பரடிகள் அருளிச் செய்தார். இவ்வுண்மையை உணரும் மதுகையில்லாதவர், இத் திருவாக்குக்குப் பொருந்தாத பொருள் கூறிச் சைவ வைணவ சமரசம் பேசுவர். 'மனோன்மணி'' முதலிய சத்திகளைக் கூடி, இச்சை ஞானம்கிரியை ஆகியவை தூல நிலையில் தொழிற்படும்படி போகசிவம் இருக்கும்.

அதிகாரசிவம், உருவத் திருமேனி தாங்கித் தோன்றியருளும். இதனை ''உடலுள் நின்ற வேதியுமாய்'' என ஆசிரியர் அறிவுறுத்தினர். ''வேதி'' என்பது, மெய்யுணர்வு பெற்ற சிவ ஞானியரால் அறியப் பெறுவது'' என்னும் பொருளையுடையது. அதிகார சிவம், நாத விந்துக்களைத் தொழிற்படுத்திச் சுத்தப் பிரபஞ் சங்களைச் சந்நிதி மாத்திரையில் தோன்றச்செய்வது. மேலும் அநந்தேசர், உருத்திரன், திருமால், பிரமன், ஆதியோர்களை அதிட்டித்து விரிந்து நிறைந்து சுத்தாசுத்தம் அசுத்தம்ஆகிய பிரபஞ்சங்களையும் அதிகார சிவம் தோன்ற வைக்குமாதலின் ''விரிந்து ஆர்ந்திருந்தான்'' என்று இத்திருப்பாடலை ஆசிரியர் முடிவு பெற வைத்தார்.

நலமே தழைக

---

## கோயிற் பெருந் திருவிழாக்கள்

1. ஸ்ரீ வீரஆஞ்சநேயசுவாமி தேவத்தானம், திருப்பாதிரிப்புலியூர்.
2. ஸ்ரீ சொக்கநாதர் மீனாட்சியம்மன் தேவத்தானம், இராஜமன்னார்குடி
3. ஸ்ரீ சௌந்திராம்பாள் சமேத ஸ்ரீ மகுடேசுவரசுவாமி, ஸ்ரீ மகாலட்சுமி சமேத ஸ்ரீ வீரநாராயணப்பெருமாள் தேவத்தானம், திருப் பாண்டிக்கொடுமுடி.
4. ஸ்ரீ புருஷோத்தமர் பெருமாள் கோவில், அம்பாசமுத்திரம்.
5. ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவத்தானம், திருக்கடவூர்.
6. ஸ்ரீ கள்ளழகர் தேவத்தானம், அழகர்கோயில்,
7. ஸ்ரீ ஆதிகும்பேசுவரசுவாமி தேவத்தானம், கும்பகோணம்.
8. ஸ்ரீ சௌமியநாராயணப்பெருமாள் தேவத்தானம், திருக்கோட்டியூர்.
9. ஸ்ரீ பிரம்மபுரீசுவரசுவாமி தேவத்தானம், அம்பர்.
10. ஸ்ரீ சௌந்திரராஜப் பெருமாள் தேவத்தானம், தாடிக்கொம்பு.
11. ஸ்ரீ சௌந்திரராஜப்பெருமாள் கோயில், வடமதுரை.
12. ஸ்ரீ அக்னீசுவரசுவாமி தேவத்தானம், திருப்புகலூர்.
13. ஸ்ரீ சதுரங்கவல்லபநாதசுவாமி ஸ்ரீ சாமுண்டீசுவரி அம்மன் தேவத் தானம், திருப்பூவனூர்.
14. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவத்தானம், திருத்தணி.
15. ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவத்தானம், திருநெல்வேலி.
16. ஸ்ரீ ரெங்கநாதப்பெருமாள் தேவத்தானம், தேவகோட்டை.
17. ஸ்ரீ கச்சபேசுவரர் தேவத்தானம், காஞ்சிபுரம்.
18. ஸ்ரீ இராமநாத சுவாமி தேவத்தானம், இராமேசுவரம்.

# "ஞான சித்தர்களும் சித்த மருந்தும்"

திரு. வி. பலராமையா அவர்கள், B.A., B.L., பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8.

(அறுகம்புல்)

சித்தர்கள் மருந்தைப்பற்றி எழுதுவதற்கு முன், மக்கள் பிள்ளையார் சுழி வரைந்து பிறகு எதுவேண்டுமானாலும் எழுதுவதுபோல, பிள்ளையார் கொடுத்த அரும்பெரும் மருந்தாகிய அறுகம்புல்லைப் பற்றி எழுத முற்பட்டுள்ளேன். இந்தப் புல்லைத் தெரியாதவர்கள் யாரும்இருக்க முடியாது. நகரங்களிலும், பங்களாக்களில் முன்னும், பக்கங்களிலும் புல்வெளி (Lawn) அமைப்பதற்கு, இந்த அறுகம்புல்லையே உபயோகிப்பர். ஆனால் அதனுடைய குணங்களைத் தெரியாமல், ஏதோ பச்சையான அழகுப் பொருளாக மட்டுமே சிலர் கருதுவர்.

இந்த அறுகம்புல்லுக்கு மூதண்டமென்றும், கீரி மூலியென்றும், சாகா மூலிகையென்றும் பலநாமங்களுண்டு. மூதண்டமென்பது வடமொழிப்பெயர். ஆனால் நம் சித்தர்கள் இம் மூலிகைக்குக் கொடுத்த காரணப் பெயரை நன்கு புரிந்து கொண்டோமானால், நாம் இம் மூலிகையை விட்டு அப்பாற் செல்லமாட்டோம்.

கீரிமூலிகை: கீரி நல்ல பாம்பிற்குக் கொடிய சத்துரு. பாம்பும் கீரியைச் சுலபமாக விடுவதில்லை. ஆயினும் முடிவில் கீரியே வெற்றி பெறும். இவைகளுக்குள் நடக்கும் யுத்தத்தில் பாம்பு தன்னிடமிருக்கும் கொடிய விஷத்தைக் கீரியைத் தன் பற்களால் குத்திப் பாய்ச்சும். கீரியும் அவ்விஷத்தைத் தாங்கமுடியாமல் உடனேயே ''சஞ்சீவி'' எனும் ஓர் மூலிகையைத் தேடிப்போய் அம்மூலிகையின் மேல் புரண்டு அதின் நுனிகளை ஒன்றிரண்டு கடித்துத் தின்றுவிடும். உடனே அக்கீரி எப்பொழுதும் போல் வன்மைபெற்றுச் சந்தோஷமாய்த் தன் வெற்றியை முரசொலி கொட்டிக்கொண்டு செல்லும். அந்தச் சஞ்சீவி மூலிகை அறுகம்புல்லேயாகும்.

இந்தச் சஞ்சீவி, கீரிக்கு மாத்திரம் விஷத்தை முறிப்பதல்லாமல் எல்லோருக்குமே சஞ்சீவி மூலிகைதான். ஒருவனைப் பாம்பு கடித்துவிட்டால் உடனே எங்கும் கிடைக்கக்கூடிய இந்த அறுகம்புல்லைக் கொஞ்சம் பறித்து அறைத்துக் கடிவாயில் வைத்துக் கட்டி விட்டுச் சிறு பாக்களவு சாப்பிடச் செய்யலாம். கடிபட்டவன் மயக்கத்திலிருப்பானானால் கடிபட்ட இடத்தில் கட்டுவதேயன்றிப் பக்கத்திலிருப்பவன் அறுகம்புல்லை மென்று கடிபட்டவன் மூக்கில் ஊதினால்கூடப் போதும். கடிபட்டவன் எழுந்துவிடுவான். இந்தச் சந்தர்ப்பத்தில் விடக்கடிகளுக்கு மற்றொரு முக்கியமான செய்தியைத் தெரிவிக்கப் பிரியப்படுகிறேன். விடம்தீண்டியது தேளாயினும் சரி, வேறு எந்த விஷப்பூச்சிகளானாலும் சரி, பாம்பு கடித்தாலும் சரி, உடனே அவன் கைகால்களைப் பலமுறை உதறவேண்டும். இடுப்பிற்குமேல் வயிற்றிலோ முதுகிலோ கடித்துவிட்டால் சிலவினாடிகள் குதிக்கவேண்டும். மருந்து சாப்பிடுவதோ, வெளிப்பிரயோகத்தை மேற்சொன்னபடிசெய்வதோ செய்துகொண்டிருக்கலாம். ஆகவே இந்த அறுகம்புல்லுக்குக் கீரி மூலிகையென்றும், சஞ்சீவி மூலிகையென்றும் பெயரிடப் பட்டதற்கு நமக்கு விளக்கம்வேறு தேவையில்லை.

மற்றும் இந்த மூலிகைக்குச் 'சாகா மூலி' யென்று சித்தர்கள் பெயர் சொல்லுகின்றனர். நூறு வருடங்களுக்கு மழையே தொடர்ந்து இல்லை யென்றால் எல்லாச் சீவராசிகளும், தாவரங்களும் உலர்ந்து சாம்பலாகிவிடும். ஆனால் இந்த அறுகம்புல் ஆயிர வருடங்கள் மழை தண்ணீர் இல்லாமற் போயினும், தன் உயிரை விடுவதில்லை. உயிர்நீத்தவுடன் உடலிலுள்ள தேயு என்னும் சூடு உடனே போய்விடும். இந்தத் தேயு நம்மிடமிருந்து விலகும்போது மரணமேற்படுகிறது. நம் பிராணன் போகும் முன்னமேயே கைகால்கள் குளிர்ந்து விடுகிறது. அந்த நிலைமையில் இனிமேல் பிழைக்க மாட்டானெனப் பெரியோர்கள் சொல்வதை நாம் கேள்வியுற்றுள்ளோம். உடம்பு குளிர்ந்து விடுவது, இந்தத் தேயுவென்னும் சாடராக்னி நம் உடலை

விட்டுப் போய்விடும் காரணத்தினுல்தான். ஆனுல் அறுகம்புல்லோ இந்தப் பஞ்சபூதத்தி லொன்ருன தேயுவைத் தன் உடலிலேயேவைத் துக்கொள்கிறது. அது பார்ப்பதற்கு உலர்ந்து போன புல்லாகத் தெரியும். ஆனுல் தன் உயிரை வேரிலேயே அடக்கி வைத்துக்கொண் டிருக்கும். மழையோ, தண்ணீரையோ தெளித் துவிட்டு மறுநாள் பார்த்தோமானுல் பச்சைப் பசேலென்று வந்துவிடும். இந்தப் புல்லின் ''சமூலம்'' என்ற வேர்கள், பூமிக்குள் 8 அடி, 10 அடிகள் வரைஊடுருவிச் செல்லும். இந்த வேரையே சித்தர்கள் அறுகங்கட்டையென்பர்.

பஞ்சபூதத் தோற்றத்தையும், அவைகளின் ஒடுக்க நிலைமையையும் நாம் கவனித்துப் பார்க் கவேண்டியது மிக்க அவசியம். இயற்கைத் தோற்றங்களைக் கவனிப்பதும் மிக மிக முக்கி யம். மரம், கொடி, செடிகளைக் கவனிப்போ மானுல், சில மரங்கள் 50 வருடங்களும், சில மரங்கள் 100 வருடங்களும், சில மரங்கள் 500 வருடங்களும், மற்றும் இரண்டொரு மரங்கள் 5000, 10000 வருடங்களும், உயிர் வாழ்வதை நாம் பார்க்கிருேம். இந்தப் பேதம் ஏன் இருக்கிறது. மிகமிகப் பெரிய நீண்ட ஆயுளைப் பெற்ற அரசமரம், ஆலமரம் முதலி யவைகளைக் காட்டிலும், முண்டகமரம், சோதி விருட்சம், சாயாவிருட்சம் முதலியன பல்லா யிரக்கணக்கானவருடங்கள் உயிர்வாழ்கின்றன. இம்மரங்களைப் பற்றிப் பலருக்குத் தெரியாம லிருக்கக் கூடும். அதற்கு நாமென் செய்வோம்? செயற்கை உலகத்தில் வாழ்பவர்களுக்கு இந்த இயற்கை உலகத்தைப் புரிந்து கொள்வது எளி தான செயலன்று.

நிற்க, நீண்ட ஆயுளைச் சில தாவரங்கள் மாத்திரம் பெற்றிருப்பதற்குரிய காரணங்களை ஆராய்ச்சி செய்தோமானுல், பஞ்சபூதங்களின் நிலைமையை ஏற்றத்தாழ்வின்றி ஒரே நிலைமை யில் காக்கும் திறமை அம்மரங்களுக்குண்டு என்பது புலனுகிறது. அப்படிப்பட்ட மரங் களின் பட்டையையோ, இலையையோ, பூவை யோ, வேரையோ நாம் சாப்பிடுவதினுல், நம் உடலின் பஞ்சபூத சக்திகளும் அதனதன் அள வுப்படி வன்மைபெற்று ஆயுள் நீடிக்கும் என் னும் தத்துவ மொழியை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயுள்ளது.

ஆகவே ஆயிரக்கணக்கான வருடங்கள் வரை நீரில்லாமல் வாழக்கூடியதும், நம் தோட்டத் தில் ஆண்டவன் பயிர் செய்து கொடுப்பது மாகிய இந்தச் சஞ்சீவி மூலிகையை நாம் உப யோகிக்காமற்போனுல், அக்குற்றம் யாருடை யது?

கட்டிடம் கட்டும்போதும், புதுஉழவுக்கு ஏர் கட்டும்போதும், இன்னும் பலபல காரியங் களைத் துவக்கும்போதும், பிள்ளையார் பிடித்து அறுகம்புல்லைப்பிள்ளையார்தலையில்அணிவித்துப் பூசை செய்கிருேம். ஏன்? நாம் துவக்கும் காரியம் நீடுழியாக வாழ வேண்டுமென்பதன் அறிகுறியே அது.

மற்றும் பிள்ளையார் தலையில் இப்புல்லை அணி விக்கும் தத்துவத்தையும், இந்த மூலிகையின் உபயோகங்களையும் பின்வரும் கட்டுரையில், எழுதுவோம்.

(தொடரும்)




ஸ்ரீ ரங்கநாயகித் தாயார்

ஸ்ரீரங்கம்.

By Courtesy:
'The Divya Kshetras in India Souvenir.'

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MAD



ஸ்ரீ பெரியாழ்வார், ஸ்ரீவில்லிபுத்தூர்.

By Courtesy :
'The Divya Kshetras in India Souvenir.'

# மறையின் இலக்கணம்

(மகாவித்துவான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

மறையின் முறைகளைப் பற்றி முன்னிதழில் விளக்கினேம். அதன் தொடர்பாகவே மறையின் இலக்கணத்தைப் பற்றி ஈண்டு விளக்குவோம். இலக்கியம் இலக்கணம் என்று தென்மொழியில் வழங்குவதானது லக்ஷ்யம் லக்ஷணம் என்று வடமொழியில் வழங்குவதை அடியொற்றியது. இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்புதலால் லக்ஷ்யம் முற்பட்டதென்றும், லக்ஷணம் பிற்பட்டதென்றும் பெரியோர் கூறு கூறுவர். லக்ஷண நூல்களினுல் நாம் கொள்ளும் உபயோகம் எத்தகைத்தென்னில், அவரவர்கள் புதிது புதிதாகச் செய்ய நினைக்கும் பிரயோகங்களை வழுவின்றிச் செய்வதற்குப் பயன் படுத்திக் கொள்வதாம். இதைப்பற்றி மேலே விவரிப்போம். வேதத்திற்கு லக்ஷணமென்றுல் அந்த லக்ஷண நூல்களை யடியொற்றி நாம் புதிதாக வேதங்கள் இயற்றப் போகிறேமல்லோம். குருகுலத்தில் முறைப்படி வாழ்ந்து வேதத்தை ஆசிரியர் கற்பிக்கும் முறைவழுவாது ஓதி, இரவும் பகலும் சிந்தனை செய்து திடப்படுத்தி வைத்துக் கொள்கிறேம். புதிதாக நாம் இயற்ற வேண்டியது ஒன்றுமில்லை. வேதமோவென்னில் ஒருவகையான கட்டுக்கும்அடங்காத சுதந்திரமான நூல்தொகுதி. அதற்கு லக்ஷண நூல் எவ்விதமாக அமைக்க முடியும்? 'இப்படித்தான் பிரயோகிக்க வேண்டும், வேறு வகையாகப் பிரயோகிக்கலாகாது'' என்று கட்டுப்பாடு செய்வதுதானே இலக்கண நூலுக்குப் பயன். இத்தகைய பயன் வேத லக்ஷண நூல்களுக்கு ஸம்பவிக்க முடியாதன்றே. வேதம் நித்யமென்றும் அபௌருஷேயமென்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மஹர்ஷிகளோ வேறு வித்வான்களோ முயன்றும் லக்ஷண நூல்களை வேதத்தோடு எப்படி ஸம்பந்தப்படுத்த முடியும்? . . .என்றிவை போன்ற சங்கைகளுக்குப் பரிஹாரமாக இக்கட்டுரை வரையப்படுகின்றது.

நமது ஜம்பூத்வீபத்தில் பரத கண்டத்தில் வேதமோதுவதென்பது ஒருவருடைய புத்திக்கும் எட்டாத காலந் தொடங்கி நிகழ்ந்து வருகின்றதென்பதில் ஆத்திகர்களுக்கு ஐயமிலது. வேதமானது ஸம்ஹிதை, பதம், கிரமம், ஜடை, கனம் என்று பலவகைப் பட்ட பாகுபாடுகளையுடையது. இவற்றுள் ஸம்ஹிதையென்பதுதான் மிக முக்கியமானது. தாய் போன்றது. பதம் க்ரமம் முதலானவை அந்த ஸம்ஹிதையைத் திடப்படுத்திக் கொள்வதற்காக ஏற்பட்டவை. பலர் ஸம்ஹிதையை மட்டும் ஓதி நிற்பர்கள். பலர் பதமும் க்ரமமும் ஓதி நிற்பர்கள்.

பலர் ஜடை கனம் முதலியவற்றிலும் பரிச்ரமங் கொள்வர்கள். அன்னவர்களே கனபாடிகளென்று பேர் பெறுவர்கள். வேதத்தில் பரிச்ரமம் இவ்வளவோடு முடிந்து விட்டதாக நினைக்க வேண்டா. வர்ண க்ரமம் முதலியவைகளிலும் பரிச்ரமப்பட வேண்டியதுண்டு. பலர் பரிச்ரமப்பட்டும் வருகிறுர்கள். 'லக்ஷணுந்த கனபாடிகள் நாங்கள்'' என்று சொல்லிக்கொள்ளுவாரும் பலருளர். லக்ஷணத்தைப் பற்றியேயன்றே இங்கு நாம் விமர்சிப்பது. ஸப்த லக்ஷணம், ஷட்விம்சதி ஸூத்ரம்; ப்ராதி சாக்க்யம் முதலானவை வேத லக்ஷண நூல்களாக எங்கும் ப்ரஸித்தி பெற்றிருப்பதால், இவற்றைப் பற்றின மருமத்தை யுணர்த்தவே எழுகின்றேம். கூர்ந்து குறிக்கொள்க.

ஒவ்வொரு பாஷையிலும் லக்ஷண க்ரந்தங்களுண்டு. இதர பாஷைகள் கிடக்கட்டும், ஸம்ஸ்க்ருத த்ராவிட பாஷைகளை மட்டும் எடுத்துக் கொள்வோம். ஸித்தாந்த கௌமுதி முதலான வியாகரண நூல்கள் வடமொழியில் லக்ஷண க்ரந்தங்கள். நன்னூல் முதலியவை தென்மொழியில் இலக்கண நூல்கள். இப்படிப்பட்ட லக்ஷணக்ரந்தங்களினுல் 'இது ஸு சப்தம்—இது அப சப்தம்' என்று தெரிந்து கொள்வததோடு, புதிது புதிதாக நாம் பிரயோகிக்க நினைக்கும் வாக்கியங்களுக்கு இந்த லக்ஷண க்ரந்தங்கள் மிகவும் உபகாரகங்களாகின்றன. (ஜயதி) என்பது போலவே (விஜயதி) என்றும் (பராஜயதி) என்றும் பிரயோகிக்கநாம்நினைத்து

விடுவோம். (திஷ்டதி) என்பது போலவே (ப்ரதிஷ்டதி) (அவதிஷ்டதி) . . . என்றும் பிரயோகிக்க நினைத்து விடுவோம். வியாகரணம் படித்தவர்கள் இப்படி யதேஷ்டமாக ப்ரயோகிக்க மாட்டார்கள். இதேபோல் தமிழிலும் இலக்கணமறியாதவர்கள் பிழைபட்ட சொற்கள் பலவற்றையும் (முயற்சிக்கிறேன், இத்யாதிகளை) யதேஷ்டமாகப் பிரயோகிப்பார்கள். இலக்கணம் படித்தவர்கள் கட்டுக்கடங்கியே பிரயோகங்களைச் செய்வர்கள். ஆகவே உலகத்தில் லக்ஷணஜ்ஞானம் முக்கியமாக அஸ்மதாதிகளின் பிரயோகங்களுக்குப் பயன்படுகின்றனவென்று கொண்மின். இனி வேத லக்ஷணமென்னப்படும் நூல்களை எடுத்துக் கொள்வோமாயின், நாம் புதிது புதிதாகக் காவியங்கள் செய்ய நினைப்பது போல, புதிது புதிதாக நாம் வேதங்களைச் செய்ய நினைக்க ப்ரஸக்தியில்லாமையாலே லௌகிக லக்ஷணக்ரந்தங்களினால் கிடைக்கும் உபகாரம் போல வைதிக லக்ஷணக்ரந்தங்களினால் உபகாரம்பெற முடியாதென்பது தேறும். இதை விவேகிகள் நன்றாக நெஞ்சிற் கொள்ள வேணும். இதுவரை நாம் தெரிவித்த தென்னவென்றால், லௌகிகலக்ஷண க்ரந்தங்கள் அஸ்மதாதிகள் பிரயோகங்களுக்கு உதவுமவை; வைதிக லக்ஷணக்ரந்தங்கள் அப்படிப்பட்டவை யல்ல; அத்தகைய உதவிசெய்ய ப்ரஸக்தியே கிடையாது என்று தெரிவித்தோமானோம்.

அடுத்தபடி ஆலோசிக்க வேண்டிய விஷயம். வேதலக்ஷணங்களினால் நாம் எவ்விதமான வுதவியை அடைகின்றோமென்பதுதான் முக்கியமாக ஆலோசிக்கத் தக்கது. ப்ராதிசாக்யம், ஸப்தலக்ஷணம், ஷட்விம்சதி, ஸூத்ரம், வ்யாஸசிக்ஷை... என்றிப்படி சில க்ரந்தங்களை வேத லக்ஷணமென்று வழங்கி வருகிறோமென்பதை மறக்கலாகாது. தைத்திரியோப நிஷத்தில் ''சீக்ஷாம் வ்யாக்க்யாஸ்யாம:. வர்ணஸ்ஸ்வர:. மாத்ராபலம். ஸாம ஸந்தாந:.இத்யுக்தச் சீக்ஷாத்யாய:'' என்றோதி வருகிறபடி வர்ணக்ரம ஸ்வராதிகளிலே சிக்ஷை பண்ணித்தருகிற லக்ஷண க்ரந்தங்கள் மிகவும் முக்கியமானவை. அவற்றில் பரிச்ரமப்படுமவர்கள் மிகச் சிலர். எவ்விதமான லக்ஷண க்ரந்தங்களிலே அதிக பரிச்ரமங் கொள்ளுகிறார்களென்னில்; இங்கே மிகவும் அவதானம் கொள்ள வேண்டும். முதலஷ்டகம் இரண்டாமஷ்டகம் மூன்றாமஷ்டகம் . . .இத்யாதியாக ஓதப்பட்டு வரும் ப்ராஹ்மண பாகத்திற்கு எவ்விதமான லக்ஷண க்ரந்தமும் அவதரித்திருக்கவில்லை. ஏன்? அவற்றிற்குப் பதபாடம் இல்லாமையாலே. பதபாடம் என்பது ஸம்ஹிதைக்கு மட்டுமே. பதஸ்வரூபங்களை நன்குரக்ஷிப்பதற்காகவே, 'லக்ஷண க்ரந்தங்கள் என்னுமவை தோன்றின. பத்தெட்டு ஸம்வத்ஸரங்கள் குருகுலத்திலிருந்து கொண்டு சிரமப்பட்டு ஓதினவர்களுக்கு எதிலும் எவ்விதமான ஸந்தேஹமும் விளைய ப்ரஸக்தியில்லையெனினும், பதங்கள் அனந்தங்களாயிருப்பதால் மந்த சக்திகளான மனிதர்களுக்கு ஸந்தேஹவிபர்யயங்கள் தோன்றியே தீரும். அவற்றைப் பரிஹரிக்கத் தோன்றின நூல்களையும் லக்ஷணங்களென்கிறோம். வேதத்தில் எத்தனைவிதமான ஸந்தேஹங்கள் தோன்றக் கூடுமென்பதை முன்னம் சுருக்கமாகக் காட்டுகிறேன். (இது ரேகாமாத்ரம்).

(ஆபோ ஹி ஷ்டா மயோபுவஸ் தா ந ஊர்ஜே ததாதந.) என்பது எல்லாரு மறிந்தவொரு வேத வாக்கியம். இதில் (ஷ்டா) என்று ஸம்ஹிதையி லிருந்தாலும் பதத்தில் ஷகாரமும் கிடையாது, டகாரமும் கிடையாது. நெடிலும் கிடையாது. ஸகாரமும் தவர்க்கத்விதீயமுமாக (ஸ்த) என்பதேயுள்ளது. (அஸி. ஸ்த:. ஸ்த.) இதற்குமேல் (ஷ்டா) என்று தீர்க்காந்தமா யிருக்கிறது. பத பாடத்தில் ஹ்ரஸ்வமேயொழிய தீர்க்கம் கிடையாது. ஸந்தியில் தீர்க்கம் வந்திருப்பது ச்சாந்தஸம். இங்கே ஹ்ரஸ்வமா? தீர்க்கமா? என்கிற ஸந்தேஹமுதிக்கக் கூடும். அதற்குமேல் விஸர்க்கமுண்டா இல்லையா என்கிற ஸந்தேஹமுதிக்கும். (ஸ்தா: மயோபுவ:) என்றிருந்தாலும் ஸந்தி துல்யமானதுதானே. இதற்குமேல் (தா ந ஊர்ஜே) என்றவிடத்தில் (தா) என்பது ஸவிஸர்க்கமா? அவிஸர்க்கமா? என்கிற ஸந்தேஹமுண்டாகும். இரண்டிலும் ஸந்தி துல்யமாகையாலே. வேதத்தில் தாநி என்பதன் ஸ்தானத்திலே (தா) என்று அவிஸர்க்கமாய் நூறிடங்களிலும் (தா:) என்றுஸவிஸர்க்கமாய் நூறிடங்களிலும் வருவதனால் ஸந்தேஹம் ஸம்பாவிதமேயொழிய அஸம்பாவிதம் அன்று. (மேலே நாம் விவரிக்கப் போகிற ஸந்தேஹங்களெல்லாம் ஸம்பாவிதங்களே.) ஏஷா, பூஷா என்கிற பதங்களில் விஸர்க்க

ஸந்தேஹ முதிக்க ப்ரஸக்தியே கிடையாது. ஓரிடத்திலும் அவை ஸவிஸர்க்கமாக வராது, வந்தது மில்லை. ஆனாலும் வேதாப்யாஸ ஜடர்களுக்கு ஸந்தேஹ முண்டாகுமென்றே வைத்து இதற்காகவும் லக்ஷணக்ரந்தங்கள் தோன்றி யிருக்கின்றன.

''ஈதூதேத் த்விவசநம் ப்ரக்ருஹ்யம்'' 'அதஸோ மாத்' இத்யாதி வ்யாகரண ஸூத்ரங்களாலே ப்ராப்தமாகிய ப்ரக்ருஹ்ய ஸம்ஜ்ஞை வேதத்திலும் ஆதரிக்கப்படுகிறது. ஈகாராந்தமும் ஊகாராந்தமும் ஏகாராந்தமுமான த்விவசனங்களுக்கு ப்ரக்ருஹ்ய ஸம்ஜ்ஞை. அப்படி ஆயிரக்கணக்கான இடங்களில் வருகின்றது. அவ்விடங்களில் (தேஇதி) (ஏதேஇதி) என்று (இதி) சேர்த்துப் பதபாடமோதும். அது மறந்துபோய் இது த்விவசனமா பஹுவசனமா என்று ஸந்தேஹம் வந்தால் நிர்ணயம் அர்த்தத்தைப் பொறுத்தது. வேதத்தில் அர்த்தத்தைக் கண்டறிய யாரால் முடியும்? முடியாததலால் இன்னின்ன இடங்களில்தான் ப்ரக்ருஹ்ய முண்டு என்று திட்டம் செய்ய நூல் அவதரித்திருக்கின்றது. (இந்த்ராண்யா ஏகாதசீ) (தஸ்யா உந்மாதுக:) (அபிஜித்யா இத்யாஹு:) இத்யாதி பரஸ்ஸஹஸ்ரஸ்தலங்களில் இந்த்ராண்யை பதமா? இந்த்ராண்யா: பதமா? தஸ்யை பதமா? தஸ்யா: பதமா? அபிஜித்யை பதமா? அபிஜித்யா: பதமா? என்று ஸந்தேஹம் விளைந்தே தீரும். இரண்டு படிகளும் மாறிமாறி வருவதனால் இதை நிர்ணயிக்கவும் நூல் அவதரித்துள்ளது. (தந்நிரபவத், தாந் நிரபவத்) இத்யாதி பரச்சத ஸ்தலங்களில் தம் பதமா? தத்பதமா? தாம்பதமா தாந்பதமா? என்று ஸந்தேஹம் அவர்ஜநீயம்; சிலவிடங்களில் தம்; சிலவிடங்களில் தத்; சிலவிடங்களில் தாம்; சிலவிடங்களில் தாந் வருவதால் இதை வ்யவஸ்தை பண்ணவும் நூல் அவதரித்துள்ளது. (தத்ப்ராச்நாத்) என்னுமிடத்தில் (ஆச்நாத்) என்று தீர்க்காதியாக பதம். (தத்ப்ராச்நாதி) என்னுமிடத்தில் (அச்நாதி) என்று ஹ்ரஸ்வாதியாக பதம். இங்கே பிரமமுண்டாகும்; இதைப் போக்கவும் நூல் தோன்றியுள்ளது. (கர்மண ஆப்யாயத்வம்) என்றவிடத்தில் (கர்மணே) என்ற பதம்; (கர்மண:) என்றுமாகலாம். (அக்ந ஆயாஹி) என்றவிடத்தில் (அக்நே) என்று பதம்; (அக்ந:) என்றுமாகலாம். (யஜ்ஞஏவ) சிலவிடங்களில் (யஜ்ஞே) என்று பதம்; சிலவிடங்களில் (யஜ்ஞ:) என்று பதம். ஸந்தேஹப்ரமங்களை நீக்கி நிர்ணயிக்க நூல் தோன்றியுள்ளது. ஆஸந்தீமுத்காதாரோஹதி என்றவிடத்தில் (ஆஸந்தீமித்யா-ஸந்தீம்) என்று (அவக்ரஹம்) வேஷ்டநம்; (ஆஸந்தீஸாதயதி) என்றவிடத்தில் அது கிடையாது. ஸந்தேஹமுண்டாகியே தீரும். இத்தகைய ஸந்தேஹங்கள் பல்லாயிரக் கணக்கானவை வேதமோதினவர்களுக்கு எளிதாகத் தெரியும்; வேதமோதாதவர்களுக்குக் காட்டுவதில் பயனில்லை. ஆனாலும் ஸந்தேஹ ப்ரகாரங்கள் இப்படி யிப்படி யிருக்கின்றனவென்று யாருமுணரலாம்.

இத்தகைய ஸந்தேஹங்களை லக்ஷணக்ரந்தங்களென்று வழங்கப்படுகிற நூல்கள் எங்ஙனே தீர்த்திருக்கின்றனவென்பதைஇனித்தெரிந்துகொள்ள வேண்டும். (ஹோத்ரா) என்று ஒரு பதம். இது (ஹோத்ரா) என்று அவிஸர்க்கமாக ஓரிடத்திலும் (ஹோத்ரா:) என்று ஸவிஸர்க்கமாகப் பலவிடங்களிலும் வருகின்றது. ஹோத்ரு சப்தமும் ஹோத்ரா சப்தமுமாக இரண்டுண்டே. எங்கு விஸர்க்கம்? எங்கு அது கிடையாது? என்பதை நிர்ணயிக்கவேணுமே. இதற்கு (நதேபர:) என்பது ஒரு நவீன ஸூத்ரம். தவர்க்கத்ருதீயமானதே என்கிற அக்ஷரம் பரமாயிருந்தால் அங்கு விஸர்க்கம் கிடையாதென்று தெரிவிக்கின்றது இந்த ஸூத்ரம். (அக்நிநா வை ஹோத்ரா தேவா:) என்கிறவிடத்தில் தே என்கிற தவர்க்க த்ருதீயாக்ஷரம் பரமாயிருப்பதால் ஹோத்ராவில் விஸர்க்கமில்லை என்றபடி. உண்மையில் இங்கு விஸர்க்கமில்லாமைக்கு தே என்கிற அக்ஷரம் பரமாயிருப்பதா காரணம்? அன்றுஅன்று. (சித்ராவஸோ) (சித்ராபூர்ணமாஸே) என்று தனித்தனி இரண்டு பதங்கள். இரண்டுக்கும் வேஷ்டன முண்டு. (சித்ராவஸோ இதிசித்ர—வஸோ என்று இங்கே பூர்வபதம் ஹ்ரஸ்வாந்தம். (சித்ராபூர்ணமாஸ இதி சித்ரா—பூர்ணமாஸே) என்று இங்கே பூர்வபதம் தீர்க்காந்தம். இதற்கு நவீந ஸூத்ரமென்னவென்றால் (சித்ராவபர:) என்பது. (வ) என்னுமெழுத்து பரமாயிருந்தால் (சித்ரா) என்று தீர்க்காந்தமாகாது என்று பொருள். (சித்ராபூர்ணமாஸே) என்கிற விடத்தில் (வ) பரமாக இல்லாதபடியால் அங்கு தீர்க்கமுண்டு. (சித்ராவஸோ) என்னுமிடத்தில் (வ) பரமாயிருப்பதால் இங்கு தீர்க்கமில்லை என்று சிக்ஷித்ததாகிறது. உண்மையில் (பூ) என்கிற எழுத்தும் (வ) என்கிற

எழுத்தும் தீர்க்கததபாவங்களுக்குக் காரண மன்று. (சித்ராவஸோ) என்றவிடத்தில் அத்புதார்த்தகமான சித்ரசப்தம். அது ஸந்தியில் ச்சாந்த ஸமான தீர்க்கம் பெற்றிருக்கின்றது—விச்வா மித்ர விச்வாவஸ்வாதி பதங்களிற்போல. (சித்ராபூர்ணமாஸே) என்றவிடத்தில் சித்ரா நக்ஷத்ரவாசமகான சித்ராபதமே யுள்ளது; (பல்குநீ பூர்ணமாஸே) இதிவத்.

ஸம்ஹிதையில் ஓரிடத்தில் (தஸ்மாத்வாச்யம்) என வருகிறது. மற்றோரிடத்தில் )தத்வர்ஹு): என வருகிறது. இரண்டிடத்திலும் பதபாடமெப்படி யென்றால் (தஸ்மாத்-உ ஆச்யம்) (தத்-உ-ஆஹு): என்று. இங்கு க்ரமம் எப்படி யென்றால் (தஸ்மாது, உவாச்யம்) (தது, உவாஹு) என்று. இது அத்யயந பரம்பரையினாலேயே கிரஹிக்கவும் தரிக்கவும் தக்கது. இதற்கு லக்ஷண ஸூத்ரம் 'ந தத் தஸ்மாத் ஸாம்ஹித:' என்று; இதன் பொருள் வைதிகர்களுக்குத் தெரியும். இனி இந்த வுபந்யாஸத்தை உபஸம்ஹரிக்கிறேன்: கீழே விவரித்த விதமாக சிக்ஷிக்கின்ற நூல்களுக்கு லக்ஷணமென்கிற பெயர் ஔபசாரிகம். திவ்ய ப்ரபந்தத்தில் திருப்பல்லாண்டில் (பல்லாண்டு கூறுதும்) (பல்லாண்டு கூறுமின்) (பல்லாண்டென்மின்) (பல்லாண்டு பாடுமின்) (பல்லாண்டுகூறுவன்) என்கிற பேதங்களை ஞாபகம் வைத்துக்கொள்ள (ஆதி கூறுதும், அனந்தரம் கூறுமின், அண்டமென்மின், எந்தைபாடுதும்) இத்யாதி வாக்யங்களை முன்னோர்கள் பரம்பரையாக ஓதுவித்து வருகிறார்கள். இதேபோல் வேதத்தினும் (வாச: ப்ராணுயத்வா, உபயாமக்ருஹீ தோஸ்யபாநாயத்வா... சபசபபரிக்ருஹீத்யை. லோகோஸி பர்த்தா தம்) இத்யாதிகளான பலவாக்யங்கள் ஸ்வரத்தோடுங் கூட அத்யயன பரம்பரையில் வந்திருக்கின்றன. இவற்றுக்கு லக்ஷணமென்கிற பெயர் கிடையாது. மடக்கு என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஸப்தலக்ஷண ஷட்விம்சதி ஸூத்ராதிகளும் ஒருவிதமான மடக்கு என்னத்தகுமத்தனை. அவை சிறந்த வித்வான்களால் இயற்றப்பட்டவையென்பதில் ஆக்ஷேபமில்லை. 'ஏஷஸஸ்ய இதிச' 'இராவ தீப்ரப்ருதி ஆதாதார' இத்யாதிகளில் அவர்களுக்கும் ஸ்காலித்யமுண்டா யிருக்கிற தென்பதையும் மற்றும் பல விஷயங்களையும் நம்முடைய வேதாத்யயந ஸர்வஸ்வ, பதபாட பரித்ராண, வேதபாஷ்ய விமர்சாதி க்ரந்தங்களிலே பரக்கக் கண்டுகொள்வது. ஸப்த லக்ஷணாதி க்ரந்தங்களை யாருமே ஆதரிக்கக் கூடாதென்பது நம்முடைய அபிப்ராயமன்று. வேதமோதினவர்களில் வித்வான்களாயுள்ளவர்கள் (லோகோஸிபர்த்தாதம்) இத்யாதிகளான மடக்குகளை (ஸ்வரத்தோடுங் கூடி அத்யயந பரம்பரையில் வந்தவைகளை) நெஞ்சாலும் நினையாதிருப்பதுபோலஸப்தலக்ஷணாதிகளையும் ஸ்மரிக்கவேண்டியஆவச்யகதையில்லையென்பதுதான் நம்முடைய அபிப்ராயம். இதுவேதான் நம்முடைய வேத லக்ஷண விசார நூல்களில் விஸ்தரித்துரைக்கப் பட்டுள்ளது. பதபாடத்தில் ச்சாந்தஸ விபர்யயம் அடியோடு கிடையாதென்கிற அபூர்வ நிருபணம் நம்முடைய நூல்களுக்கு ஜீவநாடியாயிருப்பதாம்.

---

## மதிப்புரை :

தொல்காப்பியம், சேனு வரையம்: இந்நூல் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் ஆகிய பண்டித வித்துவான் சைவப் புலவர் சித்தாந்தநன்மணி திரு கு. சுந்தரமூர்த்தி அவர்கள் பதிப்பித்த சிறந்த நூல். தொல்காப்பியம் சேனுவரையர் உரைப் பதிப்புக்கள் பல முன்பே வெளிவந்துள்ளன. எனினும், இப் பதிப்பில், மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய பல சிறப்புக் கூறுகள் அமைந்திருக்கின்றன. ஆராய்ச்சி முன்னுரை, சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள் சேனுவரையம், விளக்கவுரை, பல்கலைக்கழக வினுக்களின் தொகுப்பு ஆகியவைகள் சேர்க்கப் பெற்றிருத்தல், இப் பதிப்பின் சிறப்பை மிகுதிப் படுத்தி யுள்ளது. நூலின் பதிப்பு மிகநல்ல முறையில், செம்மையாகவும், திருத்தமாகவும் அமைந்துள்ளது. ஆசிரியரின்சிறந்த உழைப்பும், செந்தமிழ்ப் புலமையும், நுண்மாண் நுழைபுலனும் பெரிதும் போற்றிப் பாராட்டு தற்குரியன. இதற்கு முன்பே இளம்பூரணர், நச்சினார்க் கினியர், கல்லாடர், தெய்வச் சிலையார் ஆகியோர் இயற்றிய தொல்காப்பிய உரைகளை, இவர்கள் நன்கு பதிப்பித்திருக்கின்றார்கள். காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், இதற்கு வாழ்த்துரை வழங்கி யுள்ளார்கள். திருத்தமான சிறந்த நல்ல இனிய பதிப்பு. இஃது ஏறத்தாழ 400 பக்கங்கள் கொண்டது. விலை ரூபா: 8.00. கிடைக்குமிடம்: ''திரு கு. சுந்தரமூர்த்தி அவர்கள், செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர், திருப்பனந்தாள், தஞ்சை மாவட்டம்.'' —ஆசிரியர்

# தில்லையில் திருஞான சம்பந்தர்

(சித்தாந்த கலாநிதி. உரைவேந்தர் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, மதுரை)

அந்நாளில் தில்லை யந்தணர்கள், இறைவனுக்கு அணுக்கத் தொண்டராய் இருக்கும் திறத்தை நேரிற் காண்கின்றார். அது ஞான சம்பந்தர்க்கு வியப்பை நல்குகிறது. ''அணுக்கராம் பேறு அதிசயிப்பார்'' என்று சேக்கிழாரும் தெரிவிக்கின்றார். பின்பு அவ் வேதியர்கள் சிவகணங்களாகத் தோன்றவே அவர்கள் அந்நிலையில் தம்மோடு உடன் வரும் நீலகண்டப் பெரும்பாணர்க்குக் காட்டிட, அவரும் அச் சிவகணக்காட்சி பெற்றமைக்கு இறைவன் அருளை வியந்து பெருமகிழ்வெய்து கிறார்.

தில்லையின் எல்லையில் இவ்வாறு சிவகணங்களாகத் தோன்றிய தில்லைவாழ் அந்தணர், ஞானசம்பந்தரது வரவறிந்து எதிர்போந்து வணங்கி வரவேற்கின்றனர். சம்பந்தரும் தம் இருகையும் குவித்து முடிமேலேற்றி வணங்குகின்றார். குவித்த செங்கையை மனக்கண்ணிற் காணும் சேக்கிழார், ''பங்கயத்தின் செவ்வி பழித்து ஓங்கும் செங்கை'' எனவுரைத்து மகிழ்கின்றார்.

செங்கையும் செம்மேனியும் கொண்டு திகழும் திருஞான சம்பந்தர், சிந்தையொருமையுற்றுத் தீயிற்பட்ட மெழுகுபோல் உருகிக் கண்ணீர் வாரப் பேரம்பலத்தின் அருகணைந்து வழிபட்டுச் சிற்றம்பலத்தே விளங்கும் மாணிக்கக் கூத்தர் எதிரேயுள்ள திருக்களிற்றுப்படியின் கீழ் வீழ்ந்து பணிகின்றார். அப்பொழுது அப்பெருமானை நெய்யும் பாலும் தயிரும் கொண்டு அந்தணர்கள் திருமுழுக்காட்டும் செயலையும், அதனை ஏற்று மகிழும் கூத்தப்பெருமானுடைய பெருநலத்தையும் புறக்கண்ணாலும் அகக்கண்ணாலும் காண்கின்றார்; அக் காட்சியால் அவர் உள்ளத்தே கரைகடந்த ஆர்வம் பெருகுகிறது.

உடனே ''ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளுகின்றார். இதன்கண், நறிய கொன்றையை நயந்தணியும் பெருமானே, நெய்யும் பாலும் தயிரும் முழுக்காடினாய்; அந்தணர் பிரியாத சிற்றம்பலம் இடமாக நாடினாய்; மறையோடுபல் கீதமும் பாடினாய்; சடையின்கண் வெண்டிங்கள் சூடினாய்; இவற்றைச் செய்தருளும் நீ எம்முடைய தொல்வினை சுருங்குமாறு அருளாய்'' என்பதை எண்ணும்போது, வீடுபேற்றுக்குத் தடையாகிய தீவினையினது நீக்கத்தின்கண் ஞானசம்பந்தரது திருவுள்ளம் ஊன்றி நிற்பது இனிது தோன்றுகிறது. மேலும், இத்திருப்பாட்டின்கண் ''மறையொடு பல் கீதம்'' என்பதில் கீதம் தமிழ்ப்பாட்டைக் குறிப்பதாகும். பிறிதோரிடத்தில், ''அந்தணர் வேள்வியும் அருமறைத்துழனியும், செந்தமிழ்க் கீதமும், சீரினால் வளர்தரும் மழபாடி'' என்பது இதனை விளக்குகிறது.

''கொட்டமே கமழும் குழலாளொடு கூடினாய் எழுதேறினாய்'' என்பது அடுத்துவரும் பாட்டு. கொட்டம் கமழும் குழலியாகிய உமையொடு கூடினாய்; எருது ஏறினாய்; இத்தகைய நீ திருநுதலில் பட்டம் புனைகின்றாய்; இசைபாடுவன பாரிடமாகக் கொண்டு நட்டம் புரிகின்றாய்; மறையோரது தில்லையில் நல்லவர் பிரியாத சிற்றம்பலத்தில் இட்டமாக உறைகின்றாய்; இவ்வாறு இவற்றை நீ விரும்புதற்குக் காரணம் என்னையோ? என்று இதன்கண் விழைகின்றார்.

மூன்றாவது திருப்பாட்டு, ''நீலத்தார் கரியமிடற்றார் நல்ல நெற்றிமேல் உற்ற கண்ணினார், கோலத்தாய் அருளாய் உனகாரணம் கூறுதுமே'' எனவருவது. இதன்கண் இறைவனைப் படர்க்கையில் வைத்து, நீலநிற நஞ்சையுண்டதனால் கரிய மிடற்றினராய், நெற்றியிற் கண்ணுடையராய், சூலம் கைக்கொண்டு சுடலைப் பொடியை மெய்யிலணிந்து, நெடிய சடையை முடியில் உடையராவர் எனப்பிரித்துப் பாடி முடிவில், ''சீலத்தார் தொழுதேத்தும் சிற்றம்பலம் சேர்தலால், கழற் சேவடிகை தொழ அருளாய்'' எனவேண்டுகின்றார். கரிய

மிடறும், நெற்றியிற் கண்ணும், கையிற் சூலப் படையும் மெய்யிற் சுடலைப்பொடியும் நெடிய சடையும் கொண்டது உயிர்கட்கு அருள்புரிவது காரணமாக நிகழ்ந்தமையின், அவற்றைக் கூறு கின்றோம் என்ற கருத்துப்பட, ''கோலத்தாய் உனகாரணம் கூறுதுமே'' என்று பாடுகின்றார்.

நான்காவது திருப்பாட்டு, 'கொம்பலைத்து அழகெய்திய நுண்ணிடைக் கோலவாண்மதி போலமுகத்து இரண்டு அம்பலைத்த கண்ணாள் சிலை மேவியவார் சடையான்'' என வருவது. இதன்கண், உமையொடு கூடிய பெருமான் கம்பலைத்து எழு காலையர் காதலால் கழற் சேவடி கைதொழ அம்பலத்து உறைகின்றான்; அவனுடைய திருவடியை நினைத்தலும் பேசு தலும் வாழ்த்தி வணங்குதலும் செய்யும் அடி யார்களை வீடுபேற்றுக்குத் தடையாகும் வினை கள் வந்து அடையா என அறுதியிட்டுக் கூறு கின்றார்.

'தொல்லையார் அமுதுண்ணநஞ்சுண்டதோர் தூயமணிமிடறு, பகுவாயதோர் பல்லையார் தலையில்பலியேற்றுழல் பண்டரங்கா''எனவரும் ஐந்தாவது திருப்பாட்டில், இறைவனை முன் னிலைப்படுத்தி, ''இறப்புத் தொல்லையால் இடர்உற்ற தேவர் அமுதுண்ணவேண்டி நஞ் சுண்டதோர் மணிமிடறுடையாய், பலியேற்று ழலும் பண்டரங்கனே மதில்எய்தவனே''என்று புகழ்ந்து, தில்லையார் தொழுதேத்தும் சிற்றம் பலம் சேர்தலாலும் சேவடிகைதொழலாலும் வினைதான் இல்லையாம்'' எனத் தேர்ந்து தெளிவிக்கின்றார்.

ஆறுவது பாட்டு, ''ஆகம்தோய் அணி கொன்றையாய் , அனல் அங்கையாய், அமரர்க்கமரா'' என வருவது. இதன்கண் ''கொன்றையாய் அமரர்க்கு அமரா, உமை பாகம் தோய்பகவா, பண்டரங்கா, நாகத்தை அரையிற்கட்டியிருப்பவனே'' எனப்பரவி, நின் திருவடியைப் பற்றுகவுடைய அடியவர்களாகிய ஞானிகளை வினையிருள் ஒருகாலும் நண்ணா, காண்'' என்று உரைக்கின்றார்.

ஏழாவது திருப்பாட்டு, ''சாதியார் பளிங் கின்னொடு வெள்ளிய சங்கவார் குழையாய்'' எனவருவது. இதன்கண், ''சாதிப்பளிங்கோடு கூடிய வெண்சங்கினாலாகிய குழையையுடை யாய், வேதியா, விகிர்தா,'' என மொழிந்து, ''விழவார் அணிதில்லை தன்னுள் மேவும் ஆதிபகவனாகிய நினக்கு இடமாகிய சிற்றம் பலம் அங்கையால் தொழ வல்ல அடியார் களை வினைகள் வாதியாது அகலும்; உடம்பின் கண் ஒட்டி நிற்பவை தாமும் நலிவதின்றிக் கெடும்'' என்று உரைக்கின்றார்.

எட்டாவது, திருப்பாட்டு, ''வேயினார் பணைத்தோளியொடு ஆடலை வேண்டினாய், விகிர்தா'' எனவருவது. இத்திருப்பாட்டில், ''தேவியொடு ஆடினாய், விகிர்தா: நீ உயிர் கட்கு அமுதாயினாய், இடுகாட்டில் எரியாடல் அமர்ந்தாய், புரமெரித்த செம்மையாய்'' என்று சொல்லி, ''சிற்றம்பலம் மேயினாய்'; நின் கழலைத் தொழுதுயாம் மேலுலகு எய்து வோம்'' என்று பாடுகின்றார்.

''தாரினார் விரி கொன்றையாய்மதி தாங் கும்நீள்சடையாய், தலைவா'' என்ற இவ்வெட் டாவது திருப்பாட்டில், ''கொன்றையாய், நீள் சடையாய், தலைவா'' என்று ஏத்தி, தேரோடும் தெருக்களால் திருவிளங்கும் அணி தில்லைதன்னுள், சிரினால் வழிபாடு ஒழியாத தோர் செம்மையால் அழகாயது சிற்றம்பலம்; அதன்கண் ஏர்மிக அமர்ந்தவனே; உன் திரு வடியை ஏத்துகின்றோம்'' என்று தெரிவிக்கின் றார்.

இனி, ஒன்பதாவது பாட்டு, ''வெற்றரை யுழல்வார் துவராடைய வேடத்தார் அவர்கள் உரைகொள்ளன்மின்'' என வருவது. இதன் கண், சமணர் முதலிய வேற்றுச் சமயத்தவர் உரைக்கின்றவற்றை மனத்திற்கொள்ள வேண் டா; அவர்கள் உலக வாழ்வில் உளவாகும் துன்பங்களை மாற்ற வல்லவரல்லர் என்று தெரி வித்துச் சிற்றம்பலத்தைக் காதலால் கைதொழ மனம் பொருந்தியவரே, சிற்றம்பலத்தான் திருவருளால், வாழ்வின் அவலத்தைப் போக்கி உறுதிப்பொருள் கைகூடப் பெறவல்லவராவர் என்று அறிவுறுத்துகின்றார்.

இனி, இறுதிப் பாட்டாகிய திருக்கடைக் காப்பின்கண், தமக்கு நான்மறையினும் நல்ல புலமையுண்டு; இனிமையூறும் செந்தமிழால் இப்பொழுது தில்லைச் சிற்றம்பலத்து எம்பெரு மானைப் பாடுவதாகச் சொல்லி, இவற்றை முறையே ஓதவல்லவர், ஏனை அறிவொழுக் கங்களால் உயர்ந்தாரோடு கூடி உயர்வர்

என்று உரைக்கின்றார். ஊறும் இன்தமிழால், இசையால் சொன்ன பத்து என இயையும். தில்லைநகர் உயர்ந்தார் உறையும் இடமாதலால், அங்கு உறையும் சிற்றம்பலத்து ஈசனைக் கூடுமாறு வல்லவர் தாமும் உயர்ந்து அவ்வுயர்ந்தாரோடு கூடுவர் என்பது கருத்து.

இவ்வாறு ''ஊறும் இன்தமிழ்'' பாடி, அம்பலவாணனிடம் விடைபெற்ற ஞான சம்பந்தர் நீலகண்டப் பெரும்பாணர் வேண்டிக் கொண்டதற்கு இசைந்து, நிவா நதியின் கரை வழியாக மேற்கு நோக்கிச் செல்கின்றார்.

பின்பு, சம்பந்தப் பெருமான் தென்னாடு சென்று, அங்கே பரவியிருந்த வேற்றுச் சமயத்தவரை வென்று சைவத்தை நிலைநாட்டி மீளத் தமது சீர்காழிக்கு வந்திருந்தபோது, தொண்டை நாட்டுத் திருப்பதிகளைக் கண்டு வழிபடற்கு விருப்பம் கொள்கின்றார். பிரிவரிய அன்பால் அவருடைய தந்தை உடன் வரப்புறப்படவும் அவர்க்குத் தகுவனவுரைத்து அவர்பாலும் ஏனைஉறவினர் நண்பர்களாகிய பலர்பாலும் விடை பெற்றுக்கொண்டு, தொண்டர்குழாம் உடன் சூழப் போந்து தில்லைப்பதியை அடைகின்றார். அங்கே, கூத்தப்பெருமானை வழிபட்டவர் நெடிது தங்காமல் வடக்கு நோக்கித் திருத்தினைநகர், திருமாணிகுழி, திருப்பாதிரிப்புலியூர் முதலிய திருப்பதிகளை வணங்கிக் கொண்டு, தொண்டை நாடு சென்று பதி பலவும் கண்டு பரவுகின்றார். பின்பு தமது ஊராகிய சீர்காழிக்குத் திரும்புபவர், வழியில் திருவரசிலி, திருப்புறவார் பனங்காட்டூர் முதலிய பதிகளைப் பாடிப்பரவித் தில்லைநகரை அடைகின்றார்.

பிள்ளையார் வரவு அறிந்த தில்லைவாழ் அந்தணர்களும் பிற தொண்டர்களும் எல்லாச் சிறப்பும் மல்க அவரை எதிர்கொள்ள, தாம் ஏறிப் போந்த முத்துச் சிவிகையினின்றும் இறங்கித் தலைமேற் குவித்த கையுடன் தில்லையின் எல்லையை வணங்கித் திருக்கோபுரத்தை வழிபட்டு வடக்கு வாயில் வழியாகத் திருக்கோயிலுட் புகுகின்றார்.

அத்திருவீதியில் அன்பு பெருக வலம் வருங்கால் மறையொலி எழுந்து அவர் ஞானவுள்ளத்தை மகிழ்விக்கிறது; பின்புஆர்வமுடன் பணிந்து குவிந்த செங்கையுடன் பேரம்பலத்தைக் கண்டு அதனை வலம் வந்து வணங்குகின்றார்.

எதிரே சிற்றம்பலத்தின் திருவாயில் தோன்றக்கண்டு பெரிதும் மகிழ்ந்து நிலமுற வீழ்ந்து வணங்குகின்றார். அவ்வாயிலை, ''மால் அயனும் தொழும் பூதகணங்கள் மிடைதிருவாயில்'' என்று சேக்கிழார் சிறப்பிக்கின்றார். பூமாலயன் முதலிய தேவர்களேயன்றி மக்களினமும் பெருகியிருப்பது பற்றி ''பூதகணங்கள் மிடைதிருவாயில்'' எனப்படுகிறது. அதன் எதிரே, சிற்றம்பலத்தில் பரமன் உமையாள் காண ஆடும் திருக்கூத்து காட்சி தருகிறது. அதுகண்டு சம்பந்தப் பெருமான் பரவிய திறத்தை,

அணங்கு தனிக் கண்டருள
அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கடந்த தனிக்கூத்தர்
பெருங்கூத்துக் கும்பிடுவார்

என்று சேக்கிழார் தெரிவிக்கின்றார். அம்மையின் அருணோக்கமின்றி இறைவன்பால் ஆடல் இல்லையாதலால், ''அணங்கு தனிக்கண்டருள' என்று ஆசிரியர் அறிவிக்கின்றார். ''இறைவனை ஆடல்கண்டருளிய அணங்கு'' எனச் சிவநெறிச் செல்வராகிய சேரர் இளங்கோவும் தெரிவித்துரைப்பர். சிவத்தோடு பிரிப்பற நிற்பவளாயினும், இறைவன் ஆடுதல் வேண்டித் தனி நின்று இயக்குமாறு தோன்ற ''அணங்கு தனிக் கண்டருள'' என்று கூறுகின்றார் சேக்கிழார்.

இனிக் குணதத்துவத்துள் சத்துவப் பயனாகிய சுகவடிவிலோ, இராசதப் பயனாகிய துக்க வடிவிலோ, தமோகுணப் பயனாகிய மோக வடிவிலோ இன்றி ஆனா அறிவாய் அளவிறந்து நிற்றலால், ''குணம் கடந்த கூத்தர்'' என்றும், அக் கூத்து ஆதியும் அந்தமும் இல்லாத அற்புதத் தனிக்கூத்து எனப்படுவதால் ''தனிக் கூத்தர்'' என்றும் சிறப்பிக்கின்றார். பிறர் கூத்துக்களெல்லாம் குணவயப்பட்டுப் பயனாகிய சுவையும் மெய்ப்பாடும் விளங்க நிற்பனவாக, தில்லைப் பரமனது சிற்றம்பலத் திருக்கூத்து குணம் கடந்து தனி நிகழ்வது எண்ணி இங்ஙனம் கூறினார் என்று உரைப்பதும் உண்டு.

இத்தனிப் பெருங்கூத்து நிகழும் சிற்றம்பலத்தின் திருப்படி, ஆடிய திருவடியைக் காண

பதற்கு உரிய ''சோபானமாய்'' விளங்குவ தாகையால், சிவத்தொண்டர் அதனைத் தன் மனத்தகத்தே கொண்டு அன்பு செய்வர். அதனால், ''தொண்டர் மனம் பிரியாத திருப்படி'' என்று சிறப்பித்து, அதனைத் தொழுது வணங்கிய ஞானசம்பந்தர், உள்ளத் தே அன்பு பெருக, முகம் மலர, உள்ளூறச் சுரந்த பேரின்ப வெள்ளத்தில் மூழ்குகின்றார்.

திருப்படியைத் தொழுது வணங்குகையில், சம்பந்தர் உள்ளம் பெருங் காதலால் நிரம் புகிறது. எழும்போது அவரது முகம் காத லுணர்வால் மலர்கிறது. அந்நிலையில் நில வுலகும் ஏனையண்டங்களும் யாவும் இன்பமய மாய்த் தோன்றுகின்றன. அக்காட்சிபுலப்பட்ட பேரின்பநிலை எல்லையின்றிப் பெருகி நிற்கிறது. அந்நிலை ''கண்ட பேரின்பத்தின் கரையிலா நிலை'' என்று குறிக்கப்படுகிறது.

இவ்வாறு கரையில்லாப் பேரின்பநிலையில் ஞானசம்பந்தர் இருக்கையில், யாவரும் இருத் தலாகாத காலம் (கோயில் திருக்காப்பிடும் காலம்) எய்தவும், அவர் அம்பலத்தினின்றும் அரிதின் நீங்கித் திருக்கோயிலை வலம் வந்து வணங்கிப் புறத்தே வருகின்றார். இவ்வண் ணமே ஞானசம்பந்தர் தில்லைப்பதியில் பன்னாள் தங்கிப் பாடும் திருப்பணியைப் பரிவுடன் செய் ததைப் ''போது தொறும் இன்னிசைவண் தமிழ்பாடிக் கும்பிட்டு அங்கு இனி திருந்தார்'' என்று சேக்கிழார் உரைக்கின்றார். தில்லையில் திருஞானசம்பந்தர் பாடியன பல திருப்பதி கங்கள் என்று வரலாறு கூறுமாயினும், இன்று நமக்குக் கிடைத்துள்ளவை மேலே காட்டிய இரண்டு திருப்பதிகங்களே.

முற்றும்

---

## மதிப்புரைகள் :

### குருநாதன் அந்தாதி :

இந்நூல் வண்ணச் சரபம் சான்றோர் அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள் அவர்கள் இயற்றியது. முருகப் பெருமானைக் குருநாதனாகக் கொண்டு துதித்துப் போற்றுவது. நூறு பாடல்கள் கொண்டது. நூலாசிரியரின் பெயரரும், சந்தப் புலமைத் தவத்திரு செந்தில் நாயக அடிகள் மகனாரும் மாணவரும் ஆன தவத்திரு. தி. செ. முருகதாச ஐயா அவர்களின் மணி விழா மலராக வெளியிடப் பெற்றது. அருஞ்சொற் குறிப்புரை உடையது. கிடைக்குமிடம்: திரு. தி.செ.முருகதாச ஐயா, தலைவர், கௌமார மடாலயம், திருவாமாத்தூர், விழுப்புரம், P. O., விலை—0.50.

### மாதங்கள்:

இஃது ஒரு கவிதை நூல். சித்திரை முதல் பங்குனி ஈறாக உள்ள பன்னிரண்டு மாதங்களைப் பற்றி, 12 கவிஞர்களின் கவிதைகளைக் கொண்டது. இதன் தொகுப்பாசிரியர் திரு. புலவர் ம.வே. பசுபதி அவர்கள். இக்கவிதைத் தொகுப்பு நூலுக்குத் திரு கி.வா.ஜ. அவர்கள், வாழ்த்துரை வழங்கி உள்ளார். இளங் கவிஞர்கள் பலரின் சிறந்த கூட்டு முயற்சி இத் தொகுப்பு நூல். ஒவ்வொரு மாதத்தைப் பற்றிய சிறப்பு, அதில் நடைபெறும் விழாக்கள், அதைப் பற்றிய பழ மொழிகள் ஆகிய பல செய்திகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. நல்ல முயற்சி. சிறந்த நூல். விலை ரூபா. ஒன்று. கிடைக்குமிடம்: புலவர் திரு ம.வே. பசுபதி, சந்நிதித் தெரு, திருப்பனந் தாள், தஞ்சை மாவட்டம்.

### சிவாகமநெறித் திருமணமுறை :

இந்நூல் பாலகவி, தேவகோட்டை சிவ ஸ்ரீ தத்புருஷ தேசிகர், அவர்களால் தொகுக்கப் பெற்றது. இதன்கண் சிவாகமங்களை ஒட்டித் திருமணம் செய்து கொள்ளும் முறை சுருக்கமாக விளக்கப் பெற்றுள்ளது. புண்யாஹவாசனம், நாந்தி சோபனம், அங்குரார்ப்பணம், ரட்சா பந்தனம், கன்னிகா தானம், சிவவேள்வி, திருப்பூட்டுதல், கைப் பிடித்தல் முதலிய சடங்குகள் சுருக்கமாக நன்கு விளக்கப் பெற்றுள்ளன.

— ஆசிரியர்

CONNEMARA PUBLIC LIBR

# ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை

திரு. கே. பட்சிராஜன், பி. ஏ., பி. எல்., திருநெல்வேலி.

அருளாளப் பெருமாள் எம்பெருமானார் தன் சீடர்களான எச்சான், அனந்தாழ்வான், தொண்டனூர் நம்பி, மருதூர் நம்பி இவர்களை நோக்கி ''உடையவர் குருவியின் கழுத்தில் பனங்காயைக் கட்டியதுபோல் உங்களை என்னிடம் ஒப்புவித்துள்ளார். ஆனால் நீங்கள் எம்பெருமானாரே தஞ்சம் என்றிருப்பீர்களாக'' எனக் கூறி உடையவர் பெருமையை வெளியிட்டார்.

பிள்ளைப் பிள்ளையாழ்வான், கூரத்தாழ்வான் திருவடிகளைப் பற்றி ஆசார்ய தட்சணையாக ஏதேனும் நியமித்தருள வேணும்என்றுபிரார்த்தித்தார். கூரேசன் அவரை நோக்கி ''திரிவித கரணங்களையும் பரிகரித்துக்கொண்டு பாகவதர்களிடத்திலே எப்போதும் அநுகூலராய்ப் போந்திரும்'' என அருளிச் செய்தான். பிள்ளையாழ்வான் ''ஸ்வாமீ! அது அடியேனால் ஆகக் கூடிய காரியமன்றே. அத்துணைப் பொறுமை அடியேனுக்கு எவ்விதம் ஏற்படும். என் சக்திக்கு மீறிய தட்சணையை நியமித்தீர்'' என்று குருதட்சணை செலுத்த முடியாது போனால் மிகவும் அபசாரமாகுமே எனப் பயந்து ஏங்கி நின்றார். கூரேசன் அவரை நோக்கி ''ஆழ்வான்! எதிரியைத் தாக்கத் தொடங்கினால் அவன் மீண்டும் தாக்குவான். இது முடிவில் ராஜதண்டனைக்கு ஏதுவாகும். ஆகையால் உடல் வலி கொண்டு காரியம் செய்யக் கூடாது. பிறரை அபவாதம் செய்யும் நாக்கு இருக்கின்றதே அதனை அடக்கிக்கொள்ளும். ''யாகாவாராயினும் நா காக்க, காவாக்கால் சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு'' .என்ற தமிழை அறியீரோ? இனி மனத்துக்கு என் செய்வது? உம்மை மீறி அது செயல்படின் என்பீரேல் அப்படி உமது மனம் நினைக்குமாகில் அதற்கு அநுதபித்து, இவ்வாறு யான் எண்ணியது எம்பெருமான் திருவுள்ளத்தே உறைக்காதபடி எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்றிரும்'' என்றருளிச் செய்தார்.

மிளகாழ்வான் ஒருகால் முதலியாண்டானைக் கிட்டி ''இவ்வான்மா உஜ்ஜீவிக்குமாறு ஒரு தடவை ஸ்ரீ பாத தீர்த்தம் அளித்தருளவேணும் எனப் பிரார்த்திக்க ஆண்டான் 'அடியேனால் அது முடியாது'' என மறுத்து விட்டார். சில காலம் சென்று மிளகாழ்வான்ஆண்டானைக் கிட்டி ''அடியேனோடு தருக்கம் செய்யவாரும்'' என வேண்டினார். முதலியாண்டானும்'' நீர் தோற்றீராகில் என் செய்வீர்!'' என்று கேட்க மிளகாழ்வான் ''தோற்றேனாகில் உம்மை என் தோளிலே சுமந்து திரிகிறேன்'' என்று பதிலிறுத்தார். பின்னர் இருவரும் வாதம் செய்ய மிளகாழ்வான் தோல்வியுற்றார். உடனே தாம் உரைத்த சூளின்படி முதலியாண்டானைத் தோளிலே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றார். சிறிது தூரம் சென்ற பின் தம்முடைய செருக்கை நினைந்து பச்சாத்தாபப் பட்டு ஆண்டானை நோக்கி அடியேன்பால் இரங்கியருள வேணும் என்று அவர் திருவடிகளிரண்டையும் பற்றிக்கொண்டு பிரார்த்தித்தார். ஆண்டானும் ஆழ்வானை உடையவர் திருவடிகளிலே காட்டிக் கொடுத்து ''இனி உமக்கு ஒரு குறையுமில்லை. எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிரும்'' என்றருளினார்.

எம்பார் பட்டரை நோக்கி ''நீர் நம்மை நம்பெருமான் புத்ரஸ்வீகாரம் பண்ணியருளினார், நாம் ஆழ்வானுடைய குமாரர், சகல சாஸ்த்ரமும் அப்யஸித்தோம் என்று ஐச்வர்ய, குல, வித்யா மேன்மைகளை நினைந்து இறுமாந்திராதே எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்றிரும்'' என அருளிச் செய்தார்.

பட்டரும் நஞ்சீயரைப் பார்த்து ''நாம் வேதாந்தி எனும் பெயர் பெற்றோம். நம் (பட்டர்) பக்கல் ஆச்ரயித்தோம். நமக்கு (பட்டருக்கு) பெருஞ் செல்வத்தை ஆசார்ய தட்சணையாகக் கொடுத்தோம். திருவாய் மொழிக்கு நூறு தடவை வியாக்யானம் சொல்

[குறிப்பு:—சென்ற ஏப்ரல் மாத இதழில் 356-ஆம் பக்கத்தில் முதல் பகுதியில் ''ஸ்ரீமந் நாதமுனிகள் வெளியிட்டபடி'' எனத் தொடங்குவதை ''ஸ்ரீ ஆளவந்தார் வெளியிட்டபடி'' எனத் திருத்திக்கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றேன்.]

லிச்சதாபிஷேகம் செய்தோம் என்றெல்லாம் இறுமாப்படையாமல் எம்பெருமானுர் திருவடிகளே தஞ்சம் என்றிரும் என அருளினுர்.

நஞ்சீயர் நம்பிள்ளையைக் கடாட்சித்து ''திருவாய் மொழிக்கு ஆழ்வார் திருவுள்ளக் கருத்தின்படி பொருள் சொல்ல வல்லோம், லோகாசார்யர் என்ற பெயர் பெற்ருேம், சகல கலைகளையும் கற்றுவல்லோம் என்று தருக்குருதே எம்பெருமானுர் திருவடிகளே தஞ்சம்என்றிரும் என்று பணித்தார்.

நம்பிள்ளை, சிவக்கரைப் பிள்ளை என்பவர் திருக்கையைப் பிடித்துக்கொண்டு எழுந்தருளா நிற்க, நம்பிள்ளை திருமாளிகையிலே இடைகழியிலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் காலை நீட்டிக் கொண்டு கண் வளர்ந்தருளியதைக் கண்ணுற்ற சிவக்கரைப்பிள்ளை அந்த ஸ்ரீ வைஷ்ணவரை விளித்து ''காலை முடக்கும்'' என்று கூறினுர். உடனே நம்பிள்ளை சினந்து பற்றியிருந்த சிவக்கரைப்பிள்ளையின் கையை உதறி யெறிந்து அவரை நோக்கி ''மயர்வற மதிநலமருளப் பெற்ற ஆழ்வார் ''திருத்தாள்கள்''என்றருளா நிற்க நீர் ஒரு பரம பாகவதரின் திருவடிகளைக் ''கால்''என்று கூறினீரே எனக்கடிந்து அவரை விலக்கிவிட்டார். பிள்ளையும் மிகவும் மனம் நொந்தவராய்ச் சிவக்கரை சென்று சிலகாலம் இருந்தார். இருப்புக் கொள்ளவில்லை. மீண்டும் நம்பிள்ளை திருமாளிகை முன் வந்து 'இப்படி இரண்டாற்றுக்கு நடுவிலே நின்று கவணிலே கல்லைவைத்து வீசினது போன்று அடியேனைத் தள்ளி விட்டீரே. இனி அடியேனுக்குக் கதி என்ன? என்று ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் மூலம் நம்பிள்ளைக்குச் செய்தியனுப்ப நம்பிள்ளையும் அந்த ஸ்ரீ வைஷ்ணவர் மூலமே உமக்கொரு குறையும் இல்லை. எம்பெருமானுர் திருவடிகளே தஞ்சம் என்றிரும்'' என்று செய்தியனுப்பிவிட்டார். சிவக்கரைப் பிள்ளையும் அவ்வாக்கே தனக்குத் தாரகம் என்னும் பூர்ண விச்வாசத்தோடு திரும்பிச் சென்ருர். சில காலம் சென்றவாறே நம்பிள்ளை சிவக்கரைப் பிள்ளையை மீண்டும் தம் பக்கல் அழைப்பித்து முன்போல் கைங்கர்யங் கொண்டு அவருக்குக் கிருபை செய்தருளினுர்.

திருக்குருகைப் பிரான் பிள்ளான் சிறுப்புத் தூரில் எழுந்தருளியிருந்தபோது ஸோமயாஜியாண்டான் அவர் ஸ்ரீ பாதத்திலே மூன்று முறை ஸ்ரீ பாஷ்யம் வாசித்தார். பிள்ளான் மீண்டெழுந்தருளும்போது ஸோமயாஜியாண்டான் அவரைக் கிட்டி ''அடியேனிருக்கிற தேசம் இது. அடியேனுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தத்தை அருளிச் செய்ய வேணும் என்று வேண்டினுர். பிள்ளானும் ஆண்டானைக் கடாட்சித்து ''நீர், பாட்டப்ரபாகர மீமாம்சை இவையித்தனைக்கும் பொருள் சொல்ல வல்லோம், ஸ்ரீ பாஷ்யப்ரவர்த்தகராக இருக்கிருேம் என்று மேன்மையாயிராதே, எம்பெருமானுர் திருவடிகளே தஞ்சமென்றிரும்'' என்றருளிச் செய்தார்.

கோமடத்துப் பிள்ளான் தமது ஸ்ரீ பாதத்திலே காக்கைப் பாடியாச்சான் பிள்ளை என்பவர் மூன்று உரு ஸ்ரீ பாஷ்யம் வாசித்து மிகவும் மேன்மையுடையராயிருக்கும்படி கண்டு இவருக்கு இம்முகத்தாலே ஏதேனும் அபசாரம் வருமோ என்றஞ்சி அவரை நோக்கி ''எப்போதும் எம்பெருமானுர் திருவடிகளே தஞ்சம் என்றிருக்கக்கடவீர்'' என்றருளிச் செய்தார்.

காக்கைப் பாடியாச்சான் பிள்ளையைநோக்கி எங்களாழ்வான் ''உம்மைப் பெருமாள் முனிந்தருளினபோது என் நினைந்திருந்தீர்?'' என்று கேட்க ஆச்சான் பிள்ளையும் ''எம்பெருமானுர் திருவடிகளே தஞ்சம் என்றிருந்தேன்'' என்று விண்ணப்பம் செய்தார்.

நடாதூர் அம்மாள் ஸ்ரீ பாதத்திலே பத்துப் பன்னிரண்டு ஸ்ரீ வைஷ்ணவர் ஸ்ரீ பாஷ்யம் வாசிக்கிறபோது அம்மாள் அவர்களுக்கு ஸ்ரீ பாஷ்யத்தை உபந்யஸித்துக் காட்டியருளினுர். கேட்ட அவர்கள் பக்தி கடினமான உபாயமாகக் காண்கிறதே என்ருர்கள். அம்மாள் அவர்களுக்குப் பிரபத்தி உபாயத்தை அருளிச் செய்து காட்டியருள, அவர்கள் பக்தியிலும் பிரபத்தி அதிக அரியதாயிருக்கிறதே என விண்ணப்பித்தனர். உடனே அம்மையார் ''அப்படியாயின் எம்பெருமானுர் திருவடிகளே தஞ்சம் என்று விசுவாசித்து உஜ்ஜீவியுங்கோள்'' என்றருளிச் செய்தார்.

நடுவிலாழ்வான் திரு நாராயணபுரத்திலே ஸ்ரீ பாஷ்யம் உபன்யாஸிக்கவங்கிபுரத்தாய்ச்சி, சொட்டையம்மாள் உள்ளிட்டோர் கேட்டுஇது அருமையாயிருந்தது எங்களுக்குத் தரிக்கவியலாது என்ன, ஆழ்வான், ஆகில் இதனை அருளிச் செய்த எம்பெருமானுர் திருவடிகளே தஞ்சமென்றிருங்கள் என்றருளினுர்.

(தொடரும்)

# தமிழ் நூல்களில் சிற்பக் கலை

டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனுர், துணைத்தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5

(முற்றொடர்ச்சி)

### பலவகை லிங்கங்கள்:

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவசமய குரவர் அருட்பாடல்களைக் கொண்டு காண்கையில், தமிழகத்தில் ஏறத்தாழ நானூறு சிவன் கோவில்கள் இருந்தன என்பது தெரிகிறது. இந்த நானூறு கோவில்களிலும் குறைந்த எண்ணிக்கையாகப் பார்ப்பினும், நானூறு லிங்கங்கள் இருந்திருத்தல் வேண்டும். அந்த லிங்கங்கள் மரத்தாலோ — மண்ணாலோ— மணலாலோ— சுதையாலோ —கல்லாலோ அமைந்த சிற்ப உருவங்களாக இருந்திருத்தல் வேண்டும். அப்பாடல் பெற்ற கோவில்கள் சிலவற்றில் புற்றுமண்ணால் ஆகிய லிங்கங்களும், சிலவற்றில் மணலாலான லிங்கங்களும், பலவற்றில் பலவகைக் கற்களாலான லிங்கங்களும் இன்றளவும் வழிபடப்படுகின்றதை நோக்க, மேலே கூறப்பெற்றது உண்மை என்பது புலனாகும். சிதம்பரம் கோவில் போன்ற சில கோவில்களில் மரகத லிங்கம் தனிப்பட்ட முறையில் வழிபடப்படுகிறது. சில கோவில்களில் ஸ்படிக லிங்கம் வழிபடப்படுகிறது.

திருக்காளத்தியில் இருந்த சிவலிங்கத்திற்குக் கண்கள் இருந்தன என்பது கண்ணப்பர் புராணத்தால் அறியப்படும். சில லிங்கங்கள் குழவி வடிவத்திலும், சில உருண்டை வடிவத்திலும், சில அடி பருத்து நுனி கூரியனவாகவும், சில நான்கு பட்டைகள் கொண்டனவாகவும், சில உருண்டு திரண்டு பலவித வடிவங்களுடனும் அமைந்துள்ளன. இவை பல்லவராற் கட்டப்பெறாத பழைய கோவிற் சிவலிங்கங்கள் ஆகும். பல்லவர் காலத்தில் எட்டுப் பட்டை லிங்கங்களும் பதினாறு பட்டை லிங்கங்களும் பட்டையில்லாத லிங்கங்களும், சிறியவையாகவும் பெரியவையாகவும், செய்து வழிபடப்பட்டன. காஞ்சி-கயிலாசநாதர் கோவிலில் உள்ள பெரிய லிங்கம் பதினாறு பட்டைகளையுடையது.

திருமூலர் காலம் ஏறத்தாழக் கி.பி. 400—600 என்னலாம். அவர், தமது காலத்தில், பூ மணல் லிங்கம், கல் லிங்கம், பொன் லிங்கம், மரகத லிங்கம் எனப் பல்வகை லிங்கங்கள் இருந்தன என்று தமது திருமந்திரத்திற் கூறியுள்ளார்.

சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் செய்யப்பட்ட சிற்ப வடிவங்களுள் இப் பலவகைப்பட்ட லிங்க வடிவங்களும் அடங்கும்.

எழுபது சிவன் கோவில்களை எழுப்பிச்சிறந்த சிவ பக்தனாய் விளங்கிய சோழன் கோச்செங்கணான் பலவகைக் கோயில்களை எழுப்பினான். அவற்றுள் தேர் போன்றஅமைப்பைக்கொண்ட கோவில்கள் ஒருவகை; அவை தேர் உருளைகள் பூட்டப்பெற்று யானைகள் அல்லது குதிரைகள் இழுப்பது போன்ற அமைப்புடையவை. அவற்றுள் திருச்சாய்க்காட்டுக் கோவில் ஒன்றாகும். தேர் உருளைகள், யானைகள், குதிரைகள் முதலியன சிற்ப வேலைப்பாடு கொண்டவை.

### நடராசர் சிற்பம் :

சங்க காலத்திற்குப் பின்பு தோன்றிய கடவுளர் சிற்ப வடிவங்களுள் வியத்தகு வேலைப்பாடு கொண்டது நடராசர் சிற்பமாகும். இச்சிற்பவுருவம் முதன் முதலில் தில்லைச் சிவன் கோவிலில்தான் வைத்து வழிபடப்பட்டது. பின்னர் இஃது எல்லாச் சிவன் கோவில்களிலும்வைத்து வழிபடப் பெற்றது. நடராசர் இடக் காலைத் தூக்கி வலக்காலை முயலகன்மீது ஊன்றி நின்று கைகளை நீட்டி நாற்புறங்களிலும் சடை அசைய ஆடும் கூத்தே நடராசர் திருக்கூத்தாகும். இதற்கு மறுதலையாக வலக்காலைத் தூக்கி இடக்காலைஊன்றி ஆடிய திருக்கூத்தே மதுரையில் உள்ள கற்சிலை யுருவம் காட்டுவது. இது திருவிளையாடற் புராணத்தில் 'கால்மாறி ஆடிய திருவிளையாடல்' எனப் பெயர்பெறும். பெரும் பாலான நடராசர்

சிற்பங்கள் செப்பு, வெண்கலம், அல்லது பஞ்ச உலோகங்களால் அமைந்த வார்ப்படச் சிற்பங்களாகும். தில்லையில் உள்ள கூத்தப் பெருமானது சிற்பம் உயிர்ப்பு மிக்கது என்பதை,

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியூற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்
காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த
மாநிலத்தே.

என்னும் திருநாவுக்கரசது திருப்பாடலால் தெளியலாம்.

### சிவனுடைய பிற உருவச் சிற்பங்கள்:

சைவ சமய குரவர் தம் அருட்பாடல்களில் சிவ பெருமான் கங்கையைத் தம் சடையில் தாங்கியது, பிச்சை ஏற்றது போன்ற அருட் செயல்களைக் குறித்துள்ளனர். சமயப் பற்று மிகுந்த அக்காலத்தில் அவை வார்ப்படச் சிற்பங்களாக மாறின—கற் சிற்பங்களாக மாறின. கங்காதரேசுவரர் சிற்பம், பிச்சதேவர் சிற்பம், சந்திரசேகரர் சிற்பம் முதலியன இன்றும் கோவில்களில் உள்ளன வார்ப்பட உருவச் சிற்பங்கள் ஆகும். திருச்சிராப்பள்ளியில் உள்ள பல்லவர் குடைவரைக் கோவிலில் கங்காதரேசுவரர் சிற்பம் அரிய வேலைப்பாடுடன் விளங்கக் காணலாம். இவ்வாறே இளங்கோ அடிகளும் பிறரும் துர்க்கை எருமைத்தலை அசுரனைக் கொன்றதைப் போன்ற பல நிகழ்ச்சிகளைப் பாடியுள்ளனர். அந்நிகழ்ச்சிகள் மாமல்லபுரம் முதலிய இடங்களில் சிற்பங்களாகக் காட்சியளிக்கின்றன.

சைவத் திருமுறைகளில் கூறப்பட்டுள்ளஉமா தேவியார் பந்தாடியது, இராவணன் கயிலையை அசைத்தது போன்ற பல நிகழ்ச்சிகள், காஞ்சி கயிலாச நாதர் கோவிலில் உள்ள திருச்சுற்றிற் காணப்படும் புரைகளில்சிற்பங்களாகக்காட்டப் பட்டுள்ளன.

மார்கழி நோன்பு கூறும் திருப்பாவையும் திருவெம்பாவையும் மண் அல்லது மணலைக் கொண்டு காத்யாயனி உருவம் சமைத்து வழி படுதலைக் கூறுகின்றன. சங்ககால வண்டற் பாவை போலவே இக் காத்யாயனி உருவத்தைக் காட்டும் பாவையும்செய்யப்பட்டதாதல் வேண்டும் எனக் கருதுதல் பொருத்தமாகும். இக்காலத்தில் பிசைந்த மாவைக் கொண்டு பிள்ளையார், அம்மன் உருவங்களைச் செய்து மகளிர் வழிபடுதல் இங்கு நினைக்கத்தகும்.

திருமாலின் அவதார நிகழ்ச்சிகள் ஆழ்வார்களின் அருட்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. பல்லவர் மாமல்லபுரத்திலும் பிற திருமால் கோவில்களிலும் அவற்றைச் சிற்பக் காட்சிகளாக அமைத்தனர். அவற்றை, மாமல்லபுரம் வராகமண்டபத்திலும்கண்ணன்கோவர்த்தன கிரியை எடுத்துக் குடையாகப் பிடித்துக் கோவலரையும் பசுக்களையும் காத்ததை உணர்த்தும் சிற்பக் காட்சியிலும் பிறவற்றிலும் காணலாம்.

### தூங்கானை மாடம் :

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பெண்ணுகடம் சிவன் கோவில் விமானம் தூங்கும் யானை வடிவத்தில் அமைந்தது. அதனால் அது ''தூங்கானை மாடம்'' எனப் பெயர் பெற்றது. அதனை நாயன்மார் தம் பாடல்களிற் பாடியுள்ளனர். அவ்விமானம் அற்புத சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டது.

### தோணியப்பர் — சட்டைநாதர் :

திருஞான சம்பந்தர் ஞானப்பாலை உண்டு ''தோடுடைய செவியன் என்று தொடங்கும் பதிகத்தைப் பாடிச் சிவபிரான் உமையம்மையோடு காட்சி தந்த பக்கத்தைத் தம் தந்தையார்க்குக் காட்டினுர். அப்பக்கம் சீகாழிச் சிவன் கோவில் கருவறையின் மேற்பக்கமாகும். கீழே கருவறையில் சிவலிங்கம்; மேலே உள்ள முதல் அடுக்கில் புனுகு சட்டைநாதர் உருவம் உள்ளது. அதற்கும் மேலே தோணியப்பர் உருவம் உள்ளது. தோணியப்பர் உருவம் சுதையுருவம். சட்டைநாதர் உருவம் மூங்கிற் பட்டைகளாற் செய்யப்பட்டது. அதன்மேல் புனுகு சாத்தப்பட்டுள்ளது. அதனுல்தான்அது புனுகு சட்டைநாதர் எனப் பெயர் பெற்றது.

### கண்ணப்பா சிலை :

கண்ணப்பர், திருநாவுக்கரசர் முதலிய சைவ சமய குரவரால் பாராட்டப் பட்டவர். ஆதலால் அவர் அவர்கட்குக் காலத்தால் முற்பட்டவராவர். ஞானசம்பந்தர் காளத்திநா

தர் கோவிலுக்குச் சென்றார்; அப்பெருமானைப் பாடித் தரையில் விழுந்து பணிந்து எழுந்தார்; எழுந்தவுடன் வேடர் பெருமானை கண்ணப்பரை (கண்ணப்பர் சிலையை)க் கண்டு தரையில் வீழ்ந்து வணங்கினார் என்பது சேக்கிழார் வாக்கு.

இவ்வாக்கிற்கு ஏற்ப, இன்றும் காளத்தி நாதர் சந்நிதிக்கு எதிரில் கண்ணப்பர் கைகளைக் கூப்பி நிற்க, அவரை வணங்குவதை உணர்த்தும் பெரிய உருவச் சிற்பம் அக்கோவிலில் உள்ளது.

## நாயன்மார் நினைவுச் சிற்பங்கள் :

சுந்தரர் கி.பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் காலத்தில் திருவாரூர்ச் சிவன் கோவிலில் ஒரு பெரிய மண்டபம் இருந்தது. அதன் பெயர் தேவாஸ்ரய மண்டபம் என்பது. ''தேவர்கள் விரும்பி வாழும் மண்டபம்'' என்பது அதன் பொருளாகும். ஒரு நாள் சுந்தரர் அக் கோவிலுக்குள் சென்றபொழுது, தேவாசிரிய மண்டபத்தில் நாயன்மார்கள் கூடியிருந்தனர். சுந்தரர் சிவபெருமானை வழிபட்டுத் தேவாசிரிய மண்டபத்திற்கு வந்து, ஒவ்வொரு அடியாரையும் சுட்டி, 'அவர்க்கு அடியேன், அடியேன் என்று பாடினார்' என்று பெரிய புராணம் பேசுகிறது. அவரால் பாடப்பெற்ற தனி அடியார் அறுபத்து இருவர்; ஏனைத் தொகை அடியார் ஒன்பதின்மர். 'இவர் அனைவரும் சுந்தரர் பாடியபொழுது தேவாசிரிய மண்டபத்தில் உயிரோடு இருந்தனரா?' என்பது நேர்மையான கேள்வியாகும்.

சுந்தரர் கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவர்களுக்குக் காலத்தால் முற்பட்ட அடியார் கோச்செங்கணன், புகழ்ச் சோழர், கண்ணப்பர் முதலிய சிலராவர். திருநாவுக்கரசர் காலத்தில் வாழ்ந்தவர் பதின்மூவர். சுந்தரர் காலத்தில் வாழ்ந்தவர் பதின்மூவராவர். இவ்விருவருக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் மெய்ப்பொருள் நாயனார் முதலிய இருபதுக்கு மேலானவர். உண்மை இவ்வாறு இருக்க, சுந்தரர் அத்துணையரையும் தேவாசிரிய மண்டபத்தில் கண்டு திருத்தொண்டத் தொகையைப் பாடினார் என்பதில் பொதிந்துள்ள உண்மை யாது?

சுந்தரர் காலத்தில் இருந்த பதின்மூவரும் தேவாசிரிய மண்டபத்தில் உயிரோடு இருந்தனர். எஞ்சிய ஐம்பதின்மரும் அவருக்குமுன்னரே காலமானவர். ஆதலால் அவர்தம் கற்சிற்பங்களோ அல்லது செப்புச் சிலைகளோ தேவாசிரிய மண்டபத்தில் வைக்கப் பட்டிருந்தன என்பதே உண்மை யாகும். சுந்தரர் அவ்வொவ்வொரு சிலையையும் பார்த்தே, அச்சிலைக்குரிய அடியார் பெயரைக் கூறி 'அடியேன்' 'அடியேன்' என்று பாடி யிருத்தல் வேண்டும். தொகையடியார் ஒன்பதின்மரும் சுந்தரர் காலத்தில் வாழ்ந்தவரே யாவர். இதனால், சுந்தரர் வாழ்ந்த ஒன்பதாம் நூற்றாண்டிலேயே அவருக்கு முற்பட்ட நாயன்மார் நினைவுச் சின்னங்களாக உருவச் சிற்பங்கள் அமைந்திருந்தன என்னும் உண்மை தெளிவாதல் காணலாம்.

ஒவ்வொரு நாயனாரும் வாழ்ந்து சிவத்தொண்டு செய்து மறைந்தஊரில் உள்ள சிவன் கோவிலில், அவர் மறைவுக்குப் பின்பு அவருடைய நினைவுச் சின்னச் சிற்பம் அக்கோவிலில் நிறுவப்பட்டது என்பதும் இங்கு அறியத்தகும். பழையாறை வடதளியில் உள்ள அமர்நீதி நாயனார் சிலையும் அவர்தம் மனைவியார் சிலையும் இதற்கு ஏற்ற சான்றாகும். இச்சிலைகளைப் பார்த்தே திருநாவுக்கரசர் முதலியோர் அவ்வத் தலத்தில் அவ்வந் நாயனாரைப் பாராட்டித் தம் பதிகங்களிற் பாடினர்.

## திருமால் கோவில்களில் :

வைணவத் திருப்பதிகள் நூற்றெட்டிலும் பெருமாளின் திருவுருவங்கள் சுதையாலோ, மரத்தாலோ, மண்ணாலோ, கல்லாலோ அமைந்திருந்தன. சில கோவில்களில் பெருமாளின் உருவம் நின்ற கோலத்தில் உள்ளது; சில கோவில்களில் இருந்த கோலத்தில் உள்ளது; வேறு சில கோவில்களில் கிடந்த கோலத்தில் உள்ளது. எல்லாக் கோவில்களிலும் திருமாலின் திருவுருவம் நன்கு அமைந்துள்ளது. ஆதலால் மனித வுருவத்தைச் சிறிய அளவிலும் நடுத்தர அளவிலும் மிகப் பெரிய அளவிலும் செய்யத் தக்க சிற்ப வல்லுநர் அக்காலத்தில் இருந்தனர் என்பதை இத் திருவுருவங்கள் மெய்ப்பிக்கின்றன. பெருமாள் திருவுருவத்துடன் நிலமகள், இலக்குமி, முதலிய பெண் தெய்வங்களின் திருவுருவங்களும், கருடன், அநுமார் முதலியவர் திருவுருவங்களும் அக்காலத்தில் செய்யப்பெற்றன. (தொடரும்)

# "ஒரு பொருட் கிளவி"

**முன்னுரை :**

பண்டைக் கால மக்கள் உலகத்துப் பொருள்களை யுணர்ந்து கொண்ட வகைகளும், அவற்றைக் குறிப்பிடுவதற்காக அவர்கள் சொற்களை யுண்டாக்கிய முறைகளும், பிறவுமெல்லாம் பெரிதும் வியப்பை விளைவிப்பன. பொருள்களைக் குறிப்பதற்கு மக்கள் முதன் முதலில் நீளமானசொற்களையே வழங்கினர். அவர்களின் அறிவும் அனுபவமும் வளர வளர, அவர்கள் வழங்கிய சொற்கள் சிறியனவாய்க் குறுகத் தலைப்பட்டன. 'மிகப் பழங்காலத்தில் பல கடவுளரை வணங்கும் வழக்கத்தைக் கைக்கொண்டிருந்து நாளடைவில், தம் அறிவும் நாகரிகமும் வளர வளர மக்கள், ஒரு கடவுளைப் போற்றும் கொள்கை யுடையராக மாறியதைப் போன்றதொரு செய்தி இஃது' (1) என்று, அறிஞர்கள் கூறுவர்.

**ஒரு பொருட் பல சொல் :**

மக்கள்முதன்முதலில் ஒருபொருளைக் குறிக்க ஒரு சொல்லையே வழங்கினர். பொருள்களைக் குறிக்கும் சொற்கள், ஏதேனும் ஒரு காரணம் கருதியே அறிவார்ந்த முறையில் முதன் முதலில் அமைக்கப்பட்டன. அது பற்றியே ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' எனத் தொல் காப்பியர் அருளிச் செய்தனர். பொருள்களைப் பற்றிய அறிவும் அனுபவமும் வளர வளர அவற்றின் பண்பும் பயனும் பிறவும் குறிக்கும் முறையில், ஒரு பொருளுக்கே பல்வேறு சொற்கள் உரியனவாக வழங்கத் தலைப்பட்டன. பண்பினை யுணர்த்த 21 சொற்களும், உயர்வினை யுணர்த்த 17 சொற்களும், வலிவினை யுணர்த்த 34 சொற்களும், அச்சத்தினை யுணர்த்த 28 சொற்களும் தமிழில் வழங்குதலை, பிங்கலம் திவாகரம் சூளாமணி முதலிய நிகண்டுகளால் அறியலாம். கடலைக் குறிக்கும் பலவேறு சொற்களும், அதனைக் கடத்தற்குப் பயன்படும் கருவியைக் குறிக்கும் புணை தெப்பம் நாவாய் கலம் கப்பல் ஓடம் தோணி அம்பி முதலிய பலவேறுசொற்களும் தமிழில் வழங்கக் காண்டலின், பண்டைத் தமிழர் மிகத் தொன்னெடுங் காலத்திலேயே கடல் கடந்து செல்ல வல்ல பேராற்றல் வாய்ந்தவராகப் பிறங்கிய செய்தியினை யுணரலாம் எனக் கூறுவர் அறிஞர். இங்ஙனம், ஒரு பொருளுக்கே எத்துணையோ பல சொற்கள் ஏற்பட்டவாறு போல, நாளடைவில் ஒரு சொல்லுக்கே பல வேறு பொருட் குறிப்புக்கள் ஏற்படலாயின. அது பற்றியே,

> ''ஒருபொருள் குறித்த வேறுசொல்லாகியும்
> வேறுபொருள் குறித்த ஒருசொல்லாகியும்
> இருபாற் றென்ப திரிசொற் கிளவி''

எனத் தொல்காப்பியர் அருளிச் செய்வாராயினர்!

**பலசொல் ஒரு பொருள் :**

இப்பாகுபாடு திரி சொற்களுக்கு மட்டுமேயன்றி, இயற் சொற்களுக்கும் கூட ஏற்புடையது. வெற்பு விலங்கல் விண்டு என்பன மலையையும், கிள்ளை சுகம் தத்தை என்பன கிளியையும் குறிக்கும் ஒரு பொருட் கிளவிகள் (Synonyms) எனப்படும். வாரணம் என்பது யானை கோழி சங்கு என்பவற்றையும், எகினம் என்பது அன்னம் கவரிமா புளிமா நாய் என்பவற்றையும், உந்தி என்பது யாழ்ப் பத்தலுறுப்பு கொப்பூழ் தேர்த்தட்டு கான்யாறு முதலியவற்றையும் உணர்த்தும் வேறு பொருட் கிளவிகள் (Homonyms) ஆகும். இங்ஙனம் வருவனவற்றை

வடநூலார் முறையே 'பரியாய பதம்'' 'நானார்த்த பதம்' என வழங்குவர்.

## சொல்லும் பொருளும் :

'நானார்த்த பதம்' எனப் பெறும் பல பொருள் ஒரு சொற்களுள், ஒரு சொல்லே பல பொருள்களைக் குறிக்கும் எனப் பொதுவாகப் பலரும் கருதுவர்: ஆனால் ''சொற்களின் குடியரசில் பன் மனைவியர் மணமோ அன்றிப் பல கணவர் முயக்கமோ இல்லை. அங்கே ஒரு சொல்லுக்கு ஒரு பொருள், ஒரு பொருளுக்கு ஒரு சொல் என்ற கடுமையான மீற முடியாத சட்டம் உள்ளது'' என அறிஞர் ஒருவர் அழகுறக் குறிப்பிடுகின்றார் (2). ''உலகம் என்னும் சொல் இடத்தையும், அதன் கண் வாழும் மக்கட் டொகுதியையும் உணர்த்தும். அதனால் ஒருசொல் இரு பொருட் கண்ணும் சென்றதெனப்படாது, இரு பொருட்கும் உரிமையான் இரண்டு சொல் எனவேபடும். வேறுபொருள் உணர்த்தலின் வேறு சொல்லாதலே துணிவாயினும், பல பொருள் ஒரு சொல் என்புழி, எழுத்து ஒப்புமை பற்றி ஒரு சொல் என்றார்'' என்பர் சேனாவரையர் (தொல். சொல் 57). பாலையும் நீரையும் குறிக்கும் பயம் என்னும் சொல், வட நூலுள் தனித் தனி வெவ்வேறு சொல்லாகவே கொள்ளப் பட்டுள்ளது என்பர் பிரயோக விவேக நூல் (40) ஆசிரியர்.

## குமரகுருபரர்:

இவைகள் எங்ஙனமாயினும், குமர குருபர அடிகளார், தமது பாடல் ஒன்றில் 'ஒரு பொருட் கிளவி' 'இரு பொருட் கிளவி' என்னும் இலக்கணச் சார்புடைய குறியீட்டுத் தொடர்களை இனிதமைத்துப் பாடுகின்றார். மனம் மொழி மெய் என்னும் மூன்றையும் 'திரிகரணம்' என நூல்கள் குறிப்பிடும். இம்மூன்றனையும் நாம் நல் வழியிற் செலுத்தாதொழியின் அவைகள் தீயவழிகளில் அலைந்து திரிந்து 'அவ கரணங்கள்' ஆகின்றன. குமர குருபரர் தமது அருட் பெருங் குரவராகிய தருமையாதீனம் சீலத்திருமாசிலாமணி ஞான சம்பந்த தேசிகரை மனமொழி மெய்களால் முறையே நினைந்தும் வாழ்த்தியும் வணங்கியும் வழிபட்டுய்ந் தார். அதனால் அவர்க்குத் திரிகரணங் களும் அவகரணங்கள் ஆகாமல் 'சிவ கரணங்கள்' ஆகத் திரிந்து நலம் விளைத்தன. அதுகண்ட குமர குருபரர், ஏனையோர்க் கெல்லாம் ''மூன்று கரணங்கள்'' என்னும் எண்ணுப் பொருளைத் தரும் ஒருபொருட் கிளவியாக மட்டுமே வழங்குகின்ற 'திரிகரணங்கள்' என்னும் தொடர், தம்மைப் பொறுத்த அளவில் சிவமாகத் 'திரிந்த கரணங்கள்' என வேறொரு பொருளையும் விளைத்து இருபொருட்கிளவியாயிற்று'' எனக் கூறி மகிழ்ந்தின்புறுகின்றார்.

''தேசுலாங் கமலைத் திருநகர் புரக்கும்
மாசிலா மணி ஞான சம்பந்த!
வாக்கும் மனமும் யாக்கையும் ஒன்றாச்
சொற்றரு கரணம் மற்றிவை மூன்றும்
நின் புகழ் நவிற்றியும் நினைத்தும், நின் இணைத்தாள்
அன்புடன் இறைஞ்சியும் இன்பமுற் றனவே!
அவகரணங்களே யல்ல! மற்று அம்ம
சிவகர ணங்களாய்த் திரிந்தன அன்றே! அதனால்
திரிகர ணங்கள்என் றுரை செயும் அப் பெயர்
ஒரு பொருட் கிளவி எல்லோர்க்கும்;
இருபொருட் கிளவியாய் இருந்தது இன்று எனக்கே!

— பண்டார மும்மணிக் கோவை, 23

## இலக்கணக் குறியீடு:

இவ்வழகிய இனிய பாடலினால், குமர குருபர அடிகளின் சிறந்த குரு பக்தியும், சிவ நெறி யுணர்வும், செந்தமிழ்ப் புலமை நலனும், சீரிய உயர்ந்த கற்பனைத் திறனும் விளங்குதல் காணலாம். மாசிலா மணி தேசிகரின் மலரடிகளை நினைந்தும் வாழ்த்தியும் வணங்கியும் வருவதாகக் கூறுதலால், குமர குருபரரின் குருபக்தி புலனாகின்றது.

குருவேறு சிவம்வேறு எனக் கொள்ளாமல், குருவையே சிவமெனக் கொண்டு வழிபட்டதனுல், அவர்தம் சிவநெறியுணர்வு தெரிகின்றது. குருவையே சிவம் எனக் கொண்டு வழிபட்டதனுல், தமது கரணங்கள் அவகரணங்கள் ஆகாமல் சிவகரணங்கள் ஆயின என்று, அவர் அகம்மிக மகிழ்கின்ருர். ஏனையோரைப் பொறுத்த அளவில் மனம் மொழி மெய் என்னும் 'மூன்று கரணங்கள்' என்று ஒரு பொருளே குறிக்கும் 'திரி கரணங்கள்' என்னும் சொற்ருெடரானது, தம்மைப் பொறுத்தஅளவில் அவ்வொரு பொருளை மட்டுமே யன்றி, சிவமாகத் 'திரிந்த கரணங்கள்' என வேருெரு பொருளேயும் உடன் சேர்த்துக் குறிக்கும் இயல்பினதாயிற்று என்கின்ருர் அவர்!

**முடிவுரை :**

இதன்பொருட்டு 'ஒரு பொருட்கிளவி', 'இரு பொருட் கிளவி' என்னும் இலக்கணக் குறியீட்டுத் தொடர்களை எடுத்து, அவர் நயமுற வழங்கியருளியிருக்கும் அருமைப்பாடு பெரிதும்போற்றி மகிழ்தற்குரியது. செந்தமிழ்ப் புலமை நலனும், சீரிய கற்பனைத் திறனும் வாய்ந்தொளிரும் இன்னேரனைய தெய்விகச் சான்ருேர்களின் சிறந்த நூல்களை, நாம் அனைவரும் நன்கினிது ஓதி நலம் பெற முயலுவோமாக!

—ஆசிரியர்.

---

"Language proceeds from original polysyllabism towards monosyllabism, just as the history of religion does not pass from the belief in one God to the belief in many Gods, but universally from polytheism towards monotheism."

— Otto Jespersen.

"In the Commonwealth of words, there is neither polygamy nor polyandry. One word one meaning, one meaning one word, is the rigid and inviolable law."

— P. B. Ballard.

---

## செய்திச் சுருக்கம்

பதிப்பாளர் குழுக்கூட்டம் : தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பில், அதனது பதிப்பாளர் குழு, சென்னை தியாகராயநகர்த் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில், பேரவையின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் தலைமையில், 30-4-67 அன்று மாலை 3-30 மணியளவில் கூடியது. பேரவையின் துணைத் தலைவர் திரு மா. சே. சாரங்கபாணி முதலியார் அவர்கள், குழு கூட்டப்பட்டதன் நோக்கமும் குறிக்கோளும் பற்றி விரித்துரைத்தார்கள். பேரவையின் தற்போதைய பொறுப்புச் செயலாளர் திரு. ஏ. சிதம்பரம் அவர்கள், பதிப்பாளர் குழுவின் நூற்பணிகள் குறித்து விளக்கினுர்கள். தஞ்சைத் துணை ஆணையர் திரு. ஏ. மார்க்கண்டவேல் ராஜன், திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி., மகா வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், திரு. காரப்பன்காடு வேங்கடாசார்ய சுவாமி, திரு. ஐயம்பெருமாள் கோனுர், திரு. சி. இராமலிங்கம், எம்.ஏ., திரு. ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். ஆகியோர், இக்கூட்டத்திற் கலந்து கொண்டனர். ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, நன்னெறி முதலிய நீதி நூல் உரைகளும், இந்துமத பால பாடம், சைவ வினுவிடை, வைஷ்ணவ வினுவிடை, சிவஞான போதம், ஆழ்வார் ஆசார்யர்கள் வரலாறு, நித்திய பாராயணத் தோத்திரத் திரட்டு முதலிய நூல்களை விரைவில் வெளியிடவேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்றது. அதற்குரிய தக்க ஏற்பாடுகளும் செய்யப் பெற்றன. —ஆசிரியர்